வெளியீடு 4-8-2006

Issued 4-8-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மே 30, 2006—தொகுதி 3—எண் 2

Tuesday the 30th May, 2006—Volume 3—No. 2

பேரவைச் செயலகம், சென்னை-600 009

Assembly Secretariat, Chennai - 600 009

654
13/11/06

30–5–2006

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. உரிமை மீறல் பிரச்சினை— | |
| அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 26–5–2006 ஆம் நாளன்று பேரவையில் நடந்துகொண்டவிதம் குறித்து | 125 - 131 |
| 2. தகவல் கோரல்— | |
| ஆலங்குடி தொகுதி, வடகாடு கிராமம், பொதுக்கூட்டத்தில் நடைபெற்ற கல்வீச்சுத் தாக்குதல் | 131 - 132 |
| 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்— | 132 - 213 |
| திரு. ஜி.கே. மணி | 140 - 163 |
| திரு. டி. சுதர்சனம் | 164 - 182 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 182 - 205, 212 |
| 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 213 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 16, விய — திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 மே 30, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிதழீஇக் கோல்லூச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. உரிமை மீறல் பிரச்சினை

### அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 26-5-2006 ஆம் நாளன்று பேரவையில் நடந்துகொண்டவிதம் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் கொடுத்துள்ள உரிமை மீறல் பிரச்சினைமீது தங்கள் கருத்துகளைச் சுருக்கமாகக் கூறவும்.

***திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26–5–2006 ஆம் தேதி இந்தச் சட்டமன்றத்தில் நடந்த நிகழ்வுகள் என்னுடைய உரிமையை, எங்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்திருக்கிற சில உறுப்பினர்களுடைய உரிமையை, ஏன் நம்முடைய

தமிழகத்தினுடைய முதல்வராக வீற்றிருக்கிற தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய உரிமையை மீறிய செயல்கள் இங்கே அரங்கேறின என்பதை அன்றே நான் இங்கே சுட்டிக்காட்டி ஒரு புகாரைக் கொடுத்தேன்.

எங்களுடைய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த கொறடா திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, அவரைப் 'பேசாதே' ன்று மறித்து, கூச்சல் போட்டு சபை நடவடிக்கைக்குக் குந்தகம் பிளைவித்த நபர்களை நாங்கள், ஏன் அப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டபோது, பீட்டர் அல்போன்ஸ் அவர்களை 'உட்காருடா' ன்றெல்லாம் தரக்குறைவான வார்த்தைகளால் அவர்கள் பேசியபோது ாங்கள் எல்லாம் தடுத்தோம். சில பேர் அவரை நோக்கி ஓடுகிறபோது, தலில் நாம் video clippings போட்டுப் பார்த்தோம் என்று சொன்னால், ல்லோரையும் நான் தடுத்து நிறுத்தி இருக்கிறேன். அப்படி நான் டுத்து நிறுத்தி, ஒரு சுமுகமான சூழ்நிலை இந்த அவையிலே நிலவ வண்டும் என்று நான் முற்பட்டபோது, என்னை, அதேபோல எங்கள் ட்சியைச் சார்ந்திருக்கிற மாமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் ாஜசேகரன், கோவை தங்கம் மற்றும் விடியல் சேகர், அமரமூர்த்தி, வராஜ் போன்றவர்களை எல்லாம் தாக்கி, மைக்கால் என்னைத் தாக்கி, லைராஜன் அவர்களும், அதேபோல சி. சின்னசாமி, ஆர். சின்னசாமி கியவர்களும், சி.வி. சண்முகம் அவர்களும், பாண்டுரங்கன், அதாவது, டுத்த பிளாக் ஓரத்தில் Press people உட்காரக்கூடிய பிளாக்கில் ருக்கக்கூடிய பாண்டுரங்கன் அவர்கள் எல்லாம் இருக்கைமேலே ஏறி, வட்டியை மடித்துக்கொண்டு நின்று, அதுபோல கலைராஜன் ருக்கைமேலே ஏறி நின்று கொண்டு, எங்களை எல்லாம் தாக்கிய ட்சிகள், ஒரு சினிமா ஷுட்டிங் பார்ப்பதுபோல—அன்று அவர்கள் நந்துகொண்ட விதத்தை clippings எல்லாம் பார்த்து, தமிழ்நாட்டு கள், உண்மையிலே இது சட்டமன்றமா அல்லது கொலைக் களமா ன்று சொல்லக்கூடிய அளவிற்கு அன்று விமர்சனம் செய்தார்கள்.

அதோடுமட்டுமல்லாமல், இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிற ாது, இப்படிக் குழப்பம் விளைவித்துக் கொண்டிருக்கிற அண்ணா ாவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் வெளியேற்றப்பட ண்டுமென்ற ஆணையை நீங்கள் பிறப்பித்தீர்கள். அந்த ஆணையைப் ப்பித்துக்கொண்டிருக்கிறபோதே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு [illegible] மிகு முதல்வர் அவர்களுடைய இருக்கைக்கு [illegible] டி வந்து ஒலிபெருக்கியை எல்லாம்

227074.





முறுக்கி, அவரை அடிக்க, தாக்க முற்பட்டபோது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் எல்லாம் தடுத்து நிறுத்தி, அவரைக் காப்பாற்றினார்கள். இப்படிப்பட்ட சண்டைக் காட்சிகள் அரங்கேறுகிற ஒரு களமாக இந்த மன்றம் அமைந்துவிட்டதை நினைத்து நான் வேதனைப்படுகிறேன். அதற்காக நான் புகாரை ஏற்கெனவே அளித்திருக்கிறேன்.

*முற்பகல் 9—35*

இப்போது, நேற்றைய ஒரு செய்தி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் இந்த மன்றத்தினுடைய உறுப்பினராக இருக்கிற மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக நேற்று தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று அவைக்கு வர இருக்கிறார்கள். ஒருவேளை முதலிலே அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இருக்கைக்கு முன்னால் அமர்ந்திருந்தாலாவது, சேகர்பாபு இங்கு வராமலாவது இருந்திருப்பார். ஏனென்று சொன்னால், அந்தப் பக்கத்தில், அம்மா பக்கத்தில் நிச்சயமாக வந்தே இருக்கமாட்டார். ஓரளவிற்கு, முதல்வருக்கு, நல்ல பாதுகாப்பாவது கிடைத்திருக்கும். ஆனால், இதே நிகழ்வு, சென்ற ஆட்சியிலே, நாங்கள் அன்றைய முதலமைச்சராக இருந்தவர் முன்னால் சென்று, மைக்கைப் பிடித்து, அப்படி முறுக்கியிருந்தால், இன்றையதினம் உயிரோடு இந்த ஞானசேகரன் இந்த மன்றத்திலே பேசியிருப்பானா என்பதே ஒரு பெரிய கேள்விக்குறியாக இருந்திருக்கும் என்பதை நான் இந்த மாமன்றத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். சரி, இதுபோன்ற நிகழ்வுகள் இதற்கு முன்னாலே நடந்து, உரிமை மீறல் பிரச்சினை வந்திருக்கிறதா என்று பார்த்தோம் என்று சொன்னால், இங்கே நம்முடைய, இன்று அமைச்சராக இருக்கிற, அப்போது எங்களோடு மாமன்ற உறுப்பினராக இருந்த அருமை நண்பர் பரிதி இளம்வழுதி அவர்கள், இதே அவையிலே,— *30—1—2003* ஆம் தேதி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்போதுதான் அதுவும்.—அப்பொழுது அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றி, அப்போது உறுப்பினராக இருந்த குமாரதாஸ் அவர்கள், அவருடைய ஜாதியைச் சொல்லி, கொஞ்சம் இழிவாகப் பேசியதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், பரிதி இளம்வழுதி அவர்கள், கொஞ்சம் கோபமாக, கையை ஆட்டி, விரலை ஆட்டிப் பேசினார். பிறகு, 'வெளியே வாடா, பார்த்துக்கொள்கிறேன்' என்று குமாரதாஸ் சொன்னார். 'சரி, வருகிறேன்' என்று

பரிதி இளம்வழுதி அவர்கள், கொஞ்சம் தாண்டிப் போனார். இருக்கையைவிட்டு, பரிதி இளம்வழுதி, கொஞ்சம் தாண்டிச் சென்று உடனே திரும்பி வந்துவிட்டார் அவர். நாங்களெல்லாம், வந்துவிடுங்கள், போகாதீர்கள் என்று சொன்னோம். வந்துவிட்டார், அவர். பிறகு பார்த்தோம் என்று சொன்னால், கையை நீட்டிப் பேசியதற்காகவே, அப்போதிருந்த சபாநாயகர் அவர்கள், உரிமை மீறல் பிரச்சினையை குமாரதாஸ் அவர்கள் எழுப்ப, அந்த உரிமை மீறல் பிரச்சினையை உடனடியாக எடுத்துக்கொண்டு, அது உரிமைக் குழுவிற்கு அனுப்பப்படவில்லை. Privilege Committee–க்கே அனுப்பப்படாமல், உடனடியாக House, அதாவது, இந்த அவையே அப்பொழுது அதை முழுமையாக ஏற்றுக்கொண்டு, கொண்டுவந்த தீர்மானத்தின் அடிப்படையிலே, 15 நாட்கள் பரிதி இளம்வழுதி சிறையிலே அடைக்கப்பட வேண்டும் என்கிற ஒரு தீர்ப்பை, உங்களுடைய ஆசனத்தில் அமர்ந்து கொண்டிருந்த அன்றைய சபாநாயகர், அப்பொழுது ஒரு தீர்ப்பைச் சொல்லி, உடனடியாக நள்ளிரவிலே பரிதி இளம்வழுதி அவர்களைக் கைது செய்து கொண்டுபோய்... (குறுக்கீடு) இங்கே அவையிலேயே (குறுக்கீடு) இரண்டாவது, அதுவேறு, அதுவேறு. அது வேறு incident. கைது செய்து, பிறகு சென்னை மத்திய சிறைச்சாலையிலே, நம்முடைய அருமை நண்பர் பரிதி இளம்வழுதி அவர்கள், அப்போது இருந்தார்கள், அடைக்கப்பட்டார்கள் என்கிற வரலாறு இந்த மாமன்றத்தில் ஒரு முன்னுதாரணமாக, அதாவது உரிமை மீறல் பிரச்சினையுடைய அடிப்படையிலேயே Committee–க்கு அனுப்பப்படாமல், உடனடியாக அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள் என்கிற ஒரு நிகழ்வினை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. ஏன், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே, நம்முடைய அருமை அண்ணன் வீரபாண்டியார் அவர்கள், இந்த இடத்திலே பேசிக்கொண்டிருந்தார். அவர் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தபோது,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதோ, முடித்து விடுகிறேன். அப்போது தாமரைக்கனி அவர்கள், முதலிலே அவருடைய மூக்கைப் பார்த்து ஒரு குத்து, ஒரு punch விட, உடனே மூக்கிலிருந்து இரத்தம் ஒழுக, பிறகு கருப்பசாமி பாண்டியன் அவர்களும் அந்த இடத்திலே வந்து, அவர்களும்





நின்று பேச (குறுக்கீடு) முன்னாள் மந்திரி கருப்பசாமி, இவர்கள் இரண்டு பேர் மீதும் அன்றைக்கு உரிமை மீறல் பிரச்சினையை, அன்று நமது அருமை அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் இந்த அவையிலே எழுப்பி, அதற்காக, உடனே, அப்பொழுதிருந்த சபாநாயகர் — இன்று அவர் அமரராகிவிட்டார் — அவர் ஒரு அருமையான தீர்ப்பைக் கொடுத்து, உடனடியாக அவர்கள் இன்றே கைது செய்யப்பட வேண்டும், அடைக்கப்பட வேண்டும் என்று சொன்னாரேயொழிய, warrant issue பண்ணாமல் விட்டுவிட்டார்கள், இதிலே. அதனாலே, உடனடியாக அந்த நிகழ்வுகளைப் பார்த்தீர்களென்றால், ஒரு அவசரத்தில் — slip of the tongue — எந்த இடத்திலே அடைக்கப்பட வேண்டும் என்று ஒரு தெளிவான உத்தரவு கொடுக்கப்படாததால் அன்று, அவர் எப்படியோ bail வாங்கிவிட்டார், நீதிமன்றத்திற்குச் சென்று. அதையும் உரிமை மீறல் பிரச்சினையாக, இந்த அவையிலே அப்போதே எடுக்கப்பட்டு, அதற்கான தீர்வு, தங்களுடைய இருக்கையில் இருந்த, நம்முடைய முந்தைய சபாநாயகர், நம்முடைய அறநிலையத் துறை அமைச்சராக இருந்து, இப்போது அமரராகிவிட்ட பெருந்தகை பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களால் ஒரு தீர்ப்பு அப்பொழுதே, இது Privilege Committee–க்கு அனுப்பப்படாமல், அப்பொழுதே இதற்குத் தீர்வு கண்ட வரலாறு இங்கு இருக்கிறது.

அதேபோல, 'இந்து' பத்திரிகையின்மீதுகூட, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே, முதலமைச்சரைப் பற்றியும், அரசினுடைய நடவடிக்கையைப் பற்றியும், அவர்கள் — அதாவது, பத்திரிகை சுதந்திரத்தைப் பயன்படுத்தி, ஒரு article–ஐ, ஒரு editorial எழுதினார்கள். அந்த editorial–ஐக் கண்டித்து, ஒரு தீர்மானம், Privilege Committee–யினுடைய தீர்மானத்தைக் கொண்டுவந்து, உடனடியாக அவர்களுக்கும் தண்டனை கொடுத்தார்கள். ஆனால், அவர் உடனடியாகக் கைதாகாமல், எப்படியோ Supreme Court–க்கு உடனடியாகப் போய், தன்னுடைய உரிமையைப் பாதுகாத்துக் கொண்டார். அதனால் 'இந்து' பத்திரிகையினுடைய ஆசிரியர் அன்று தப்பித்தார்.

முற்பகல் 9–40

அதேபோல, அருமை அண்ணன் ஆற்காட்டார்மீது ஒருமுறை உரிமை மீறல் பிரச்சினை வந்தது. மீட்டர் வைத்ததைப் பற்றி, 2003 ஆம் ஆண்டு ஒரு செய்தி, கரெக்டான செய்தியைத்தான் அவர் சொன்னார்.

ஆனால், தவறான செய்தியைச் சொன்னதாக அவர்மீதே ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வரப்பட்டது. இப்படி Privilege Committee–க்கு அனுப்பப்படாமலேயே இந்த அவையே அப்பொழுதே, அப்பிரச்சினையை அலசி ஆய்ந்து, சபாநாயகரால் தீர்ப்பு சொல்லப்பட்டு, அதற்காக உடனடியாக தீர்ப்பு, தண்டனை என்று இந்த அவையிலேயே அளிக்கப்பட்ட முன்னுதாரணங்கள் இருக்கின்றன.

நாங்கள் எல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு எங்களுடைய தொகுதிக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் என்ன தேவை என்பதை கோரிக்கையாக வைத்து பேசுவதற்காகத்தான் இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றோம். தேர்ந்தெடுத்து அனுப்பப் பட்டிருக்கிறோம். ஆனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் எங்களைத் தாக்க வேண்டிய அவசியமே இங்கு இல்லை. பேச்சுக்குப் பேச்சு,—பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைப்பற்றிப் பேசுகின்றபோது, பேச்சுக்குப் பேச்சு இருக்கலாமேயொழிய, அதற்காக மைக்குகளை எல்லாம் உடைத்து, எங்கள்மீது அடித்து, எங்களைக் காயப்படுத்தக்கூடிய நிகழ்வுகள் என்பது, உண்மையிலேயே வருந்தத்தக்கது. ஜனநாயகத்தில் இதை நிச்சயமாக தாங்கள் அனுமதிக்கக்கூடாது, ஏனென்று சொன்னால், முந்தைய காலத்தில், பரிதி இளம்வழுதி அவர்கள் அவர்களுடைய இருக்கையைவிட்டு, விதி 88—ஐ எடுத்துக்கொள்வீர்கள் என்று சொன்னால், விதிப்படி பார்த்தோம் என்று சொன்னால், அதாவது இருக்கையைவிட்டுப் போகக்கூடாது என்று ஏற்கெனவே விதியிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் சப்ஜெக்ட்டை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே, நான், இங்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், எங்களைத் தாக்கிய அந்த உறுப்பினர்கள், கலைராஜன் அதற்குப் பிறகு ஆர். சின்னசாமி, சி. சின்னசாமி, பாண்டுரங்கன், சிவி. சண்முகம் ஏன் முதலமைச்சரையே தாக்குவதற்காக, கொலைவெறித் தாக்குதலோடு அங்கே சென்று மைக்கை முறித்த சேகர்பாபு போன்றவர்கள்மீது நீங்கள் உடனடியாக என்ன தண்டனை வழங்க இருக்கிறீர்கள்? நாங்கள் கொடுத்த புகார்மீது தாங்கள் எடுத்த நடவடிக்கை என்ன? எங்களுடைய உரிமை மட்டும் அல்ல, அவையினுடைய உரிமையை மீறி, ஏன் அவமதித்த செயலையே





செய்திருக்கிற அந்த உறுப்பினர்களை நீங்கள் தண்டிக்கவில்லையென்று சொன்னால் எங்களுக்கு எதிர்காலத்தில் பாதுகாப்பில்லை. இப்போது நாங்கள் எல்லாம் அடிபட்டு, கையிலே கட்டோடு அலைந்துகொண்டிருக்கின்ற நாங்கள், பிறகு எங்காவது சுடுகாட்டினுடைய குழிக்குள்ளேதான் நீங்கள் எங்களைத் தேடவேண்டிய ஒரு நிலை வரும். அப்படிப்பட்ட நிலை வருவதற்கு முன்னாலே, ஒரு நீதியை எங்களுக்கு வழங்குமாறு தங்களைக் கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையில் மேலெழுந்தவாரியாக உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், பேரவை விதி 226—ன்கீழ் இப்பிரச்சினை குறித்து விசாரித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

## 2. தகவல் கோரல்

### ஆலங்குடி தொகுதி, வடகாடு கிராமம், பொதுக்கூட்டத்தில் நடைபெற்ற கல்விச்சுத் தாக்குதல்

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28 ஆம் தேதி ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜசேகரன் அவர்கள் நன்றி தெரிவிக்கிற பொதுக்கூட்டத்தை வடகாடு என்ற கிராமத்திலே நடத்தியபொழுது, அவருக்கு எதிராக வேட்பாளராக நின்ற அதிமுக—வைச் சார்ந்த வெங்கடாசலம் என்பவர் அவர்களுடைய மகன் தலைமையிலே ஆட்களை அனுப்பி, கல்வீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டு, மிகப்பெரிய பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் அந்தக் கூட்டத்திலே. 6 பேர், காவல் துறையைச் சார்ந்தவர்களுக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி வன்முறையிலே, அதிமுக—வினுடைய வேட்பாளராக இருந்தவர் ஈடுபட்டு வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு சட்டமன்ற உறுப்பினருக்குப் பாதுகாப்பற்ற சூழ்நிலையை அதிமுக—வினர் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதன்மீது தங்களிடத்திலே ஒரு புகார் கொடுத்திருக்கிறார். அதன்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியை தலைவர் அவர்களே, நீங்கள் எடுப்பீர்களா என அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் கூறிய அந்தத் தகவல் உண்மையானது. அந்தக் கலவரத்தில் எங்களது மாவட்ட காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. புஷ்பராஜ் அவர்களும்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2006 மே 30

காயமடைந்திருக்கிறார்கள். மிகுந்த கலவரமும் அச்சுறுத்தலும் இருக்கின்ற சூழ்நிலையிலே இன்று அந்த வடகாடு என்ற கிராமமும் அதிலே அ.தி.மு.க—வில் எதிர்த்து போட்டியிட்ட ஒருவருடைய வன்முறைச் செயலால், காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் பொதுவுடைமைக் கட்சிகளைச் சேர்ந்த தோழர்கள் மிகவும் அச்சுறுத்தலில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதுபோலவே, நேற்றுமுன்தினம் சட்டமன்றத்தில் நடந்த சம்பவத்தைக் கண்டித்து சங்கரன்கோவிலிலே, நம்முடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தோழர்கள் ஜனநாயக முறையில் ஆர்ப்பாட்டம் செய்கிறபோது அங்கேயும் அ.தி.மு.க—வைச் சார்ந்தவர்கள் புகுந்து எங்கள் காங்கிரஸ் தோழர்களை அச்சுறுத்தியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட வன்முறைச் சம்பவங்களை இந்த அரசு முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். இல்லையென்றால், சுதந்திரமான ஜனநாயக செயல்பாட்டிற்கு வழியிருக்காது. எனவே, சட்டமன்றத்தில் உள்ளேயும், வெளியேயும் சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றும் பொதுமக்களும் தங்களுடைய ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு நீங்கள் தமிழக அரசுமூலம் தகுந்த பாதுகாப்புத் தர வேண்டும். தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்தது ஆய்விலே இருக்கிறது. நாளைக்கு அது எடுத்துக்கொள்ளப்படும்.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பெற்று, வழிமொழியப்பட வேண்டும். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற விதி 12 உட்பிரிவு 3—ன்படி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:



2006 மே 30] [திரு. சி. ஞானசேகரன்]

முற்பகல் 9—45

1. வேலூர் நகரம், மற்றும் வேலூர் மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க மேட்டூர் அணையிலிருந்து காவிரியாற்று நீரை (ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம்) ரூ.1500 கோடியில் திட்டத்தை நிறைவேற்றி வேலூர் மாவட்டத்திற்குக் கொண்டு வருவது குறித்தும்;

2. பாலாற்றின் குறுக்கே வாணியம்பாடி, ஆம்பூர்,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது ஒன்றைப் படியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** 18 திருத்தங்களை நான் கொண்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு இவற்றை எல்லாம் கொண்டு வந்தால் உடனடியாகத் தீர்க்கப்படும் என்கிற..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது ஒன்றைச் சொல்லுங்கள். மற்ற திருத்தங்கள் எல்லாம் சேர்த்துக்கொள்ளப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

'1. வேலூர் நகரம் மற்றும் வேலூர் மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க மேட்டூர் அணையிலிருந்து காவிரியாற்று நீரை (ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம்) ரூ.1500 கோடியில் திட்டத்தை நிறைவேற்றி வேலூர் மாவட்டத்திற்குக் கொண்டு வருவது குறித்தும்;

2. பாலாற்றின் குறுக்கே வாணியம்பாடி, ஆம்பூர், பள்ளிகொண்டா, வேலூர், ஆற்காடு, மேல்விஷாரம், வசூர்வெங்கடாவரம், பூட்டுத்தாக்கு பகுதியில் தடுப்பணைகள் கட்டி நீராதாரத்தைப் பெருக்குதல் மற்றும் பாலாறு ஆக்கிரமிப்புகளைப் போர்க்கால அடிப்படையில் அகற்றுவது குறித்தும்;

3. வேலூர் நகரில் 80 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவந்த Vellore Government Pentland Hospital—ஐ அடுக்கம்பாறைக்கு அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்திற்கு மாற்றியதை உடனே வேலூர் நகருக்கு பழையபடி திரும்பக் கொண்டுவந்து முழு அளவில் வேலூர் நகரில் எல்லா மருத்துவப் பிரிவுகளையும் இணைத்து மருத்துவமனையைச் செயல்படுத்துவது குறித்தும்;

[திரு. சி. ஞானசேகரன்] [2006 மே 30

4. வேலூர் பழைய பேருந்து நிலையம் மூடப்பட்டுள்ளதைத் திறந்து ஆரணி, திருவண்ணாமலை, கடலூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற நகரங்களுக்குச் செல்லும் பேருந்துகளையும், ஆபீசர் லைனில் செல்லும் அனைத்து நகரப் பேருந்துகளையும் பழைய பேருந்து நிலையத்திலிருந்து இயக்குவது குறித்தும்;

5. வேலூர் நகரில் 2000 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் அறிவித்தவாறு அரசு சட்டக் கல்லூரியை துவங்குவது குறித்தும்;

6. வேலூர் புதிய பேருந்து நிலையத்தை அரசாணைப்படி உள்ளூர் திட்டக் குழுமம் நடத்துவதால் அடிப்படை வசதிகள் இல்லாமல் மக்கள் அவதிப்படுவதால் நகர் ஊரமைப்புத் தொகுப்பு நிதியில் இருந்து ரூ.5.00 கோடி வழங்கி அடிப்படை வசதிகளைப் போர்க்கால அடிப்படையில் பெருக்குவது குறித்தும்;

7. வேலூர் நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல மாதங்களாகியும் டெண்டர் வைக்காமல் உள்ளதை டெண்டர் வைத்து குடிநீர் வடிகால் வாரியமே திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

8. வேலூர் நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தி சத்துவாச்சாரி, அல்லாபுரம், சேண்பாக்கம், தொரப்பாடி, காட்பாடி, காந்தி நகர், தாராபடவேடு, கழிஞ்சூர், திருவலம், ஆற்காடு, வாலாஜா, ராணிப்பேட்டை, பாகாயம், பள்ளிகொண்டா பகுதிகளை இணைத்து பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்ற நவீன வசதிகளைச் செய்து தருவது குறித்தும்;

9. வேலூர் நகரில் I.T. Park (Information Technology Park) அமைக்க 5 ஏக்கர் நிலத்தை மாநில அரசு தந்து மத்திய அமைச்சர் மாண்புமிகு தயாநிதி மாறன் ஏற்கெனவே வேலூரில் அறிவித்த வண்ணம் உடனே I.T. Park (Information Technology Park) அமைப்பது குறித்தும்;

10. வேலூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது குறித்தும்;

11. வேலூர் நகரில் உள்ள அனைத்து ரோடுகளும் பழுதடைந்துள்ளதை உடனே புதுப்பிப்பது குறித்தும்;



2006 மே 30] [திரு. சி. ஞானசேகரன்]

12. அரசே டாஸ்மாக் மூலம் மதுபானம் விற்பதை இரத்து செய்வது குறித்தும்;

13. அரசே மணல் வியாபாரம் செய்யும் திட்டத்தை இரத்து செய்வது குறித்தும்;

14. வேலூர் அருகே அம்முண்டி என்ற இடத்தில் உள்ள விமான நிலையத்தைப் புதுப்பித்து மத்திய அரசு உதவியுடன் விமானப் போக்குவரத்தை விரைந்து தொடங்குவது குறித்தும்;

15. வேலூர் அருகே மூடப்பட்டுள்ள, அரியூர் கூட்டுறவு நூற்பாலையைப் புதுப்பித்து அரசு உடனே இயக்குவது குறித்தும்;

16. கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் நிறைவேற்றுவது குறித்தும்;

17. வேலூரில் அரசு இசைக் கல்லூரி, இசைப் பள்ளி துவக்குவது குறித்தும்;

18. வேலூர் நகரில் சுற்றுலா அலுவலரை நியமனம் செய்து, வேலூர் கோட்டையை அழகுபடுத்தி அங்கிருந்து சுற்றுலாத் துறை பஸ்களை இயக்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருத்தங்களை வழிமொழிய வேண்டும்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம் அவர்கள்.

***திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது என் பெயரால் கொடுக்கப்பட்ட கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. சத்துணவுப் பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் செய்யப்படும் என்பது குறித்தும்;

[திரு. கி. ஆறுமுகம்] [2006 மே 30

2. ஊராட்சி எழுத்தர்களுக்குப் பணி நிரந்தரம் செய்யப்படும் என்பது குறித்தும்;

3. செங்கற்பட்டு தொகுதியில் உள்ள திருக்கழுக்குன்றம் வட்டத்தில் புதிய தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும்;

4. செங்கற்பட்டு இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புகளுக்கான எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.காம்., படிப்புகள் தொடங்கப்படும் என்பது குறித்தும்;

5. மாமல்லபுரம் சிற்பக் கலைக் கல்லூரியில் பட்டயப் படிப்பு (Diploma) துவக்கப்படுவது குறித்தும்;

6. செங்கற்பட்டு நீஞ்சல்மருவு அணை சீரமைக்கவும், களத்தூரான் கால்வாய்த் திட்டம் துவக்கப்படுவது குறித்தும்;

7. பாலாற்றின் குறுக்கே பழவேலி, வள்ளிபுரம், இரும்புளிச்சேரி ஆகிய இடங்களில் சிற்றணைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது குறித்தும்;

8. செங்கற்பட்டு தொழிற்பயிற்சி நிலையத்தில் அனைத்து பாடப் பிரிவுகளிலும் கூடுதலாக மாணவர்களைச் சேர்க்க அனுமதி அளிப்பது மற்றும் புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்படுவது குறித்தும்;

9. செங்கற்பட்டு—திருப்போரூர் சாலையை இருவழிச் சாலையாக மாற்றுவது குறித்தும்;

10. செங்கற்பட்டு தொகுதியில் ஒத்திவாக்கம்—மணப்பாக்கம் சாலை மறுபுனரமைப்பு செய்யப்படுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:



2006 மே 30] [திரு. என். நன்மாறன்]

"1. மதுரையில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பது குறித்தும்;

2. மதுரை பாலரெங்காபுரம் பகுதியில் அரசினர் பல் மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

3. அகில இந்திய விஞ்ஞான மருத்துவக் கழகம் மதுரையில் அமைப்பது குறித்தும்;

4. எல்லீஸ் நகர், கூடல் நகர், தத்தநேரி இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி விரைவுபடுத்தப்படுவது குறித்தும்;

5. மதுரை அரசினர் மருத்துவமனையை விரிவுபடுத்த அண்ணா பேருந்து நிலையம் இயங்கிய இடத்தைக் கையகப்படுத்தி பணிகள் மேற்கொள்வது குறித்தும்;

6. ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. 1998 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட விவசாயத் தொழிலாளர் நல வாரியம் மீண்டும் புதுப்பித்து செயல்படுத்துவது குறித்தும்;

2. விவசாயிகளுக்கான ஏகபோக கொள்முதல் திட்டத்தை அரசே ஏற்று நடத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

[2006 மே 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள், இருக்கையில் இல்லை. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குவது குறித்தும்;

2. சென்னிமலை பேரூராட்சி இரண்டாவது கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் குறித்தும்;

3. காங்கேயம் சிறப்பு ஊராட்சி குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்தும்;

4. நெசவாளர்களுக்கு வீட்டுக் கடன்கள் தள்ளுபடி செய்வது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது"

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. வால்பாறையில் ஒரு கலைக் கல்லூரி ஏற்படுத்துவது குறித்தும்;

2. வால்பாறை, கோட்டூர் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துவது குறித்தும்;

3. வால்பாறையில் நெடுஞ்சாலைத் துறைமூலம் நடுமலைப் பாலத்தை விரிவுபடுத்துவது குறித்தும்;

4. வால்பாறை சட்டமன்றத் தொகுதி, கோட்டூர் பேரூராட்சியில் உள்ள நெல்லித்துறை, மன்னம்பாலாற்றுப் பாலம், அரித்தநாரிபாளையம், பாலாற்றுப் பாலம் கட்டுவது குறித்தும்;



2006 மே 30] [திரு. கோவை தங்கம்]

5. வால்பாறை தேயிலைத் தோட்டக் குடியிருப்புப் பகுதியில் யானைகள், புலிகள், சிறுத்தைப் புலிகள் அதிகமாக நடமாடி வருவதால், 500 தெருவிளக்குகள் உடனே அமைக்கப்பட வேண்டியது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது"

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி அவர்கள்.

***திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. விவசாயிகளுக்குப் பயனளித்துக் கொண்டிருந்த உழவர் சந்தைத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்தும்போது, காய்கறிகள் கெட்டுப் போகாமல் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்குகளை அமைத்துக் கொடுப்பது குறித்தும்;

2. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் பயன்பெற, ரூ.25,000/–, ரூ.50,000/– டெபாசிட் செய்து விவசாயத்திற்கு மின் இணைப்பு பெறும் விவசாயிகளுக்குக் கட்டணம் செலுத்தாமல் இலவச மின்சாரம் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது"

**திரு. வி.அ.த. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு அவர்கள்.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

[திரு. அ. தமிழரசு] [2006 மே 30

"1. மலைகளிலிருந்து சிறு ஆறுகளின்மூலம் வரும் நீரை வீணாக்காமல் விவசாயத்திற்குப் பயன்படுத்த சிறிய அணைகள் கட்டுவது குறித்தும்;

2. அறக்கட்டளை வழியாக அங்கீகரிக்கப்பட்டு நடந்துவரும் பள்ளிகளுக்கு அரசு நிதியில் கழிப்பிட வசதி, நூலகக் கட்டட வசதி, கணினி வசதி மற்றும் கூடுதல் கட்டட வசதி போன்றவற்றை வழங்குவது குறித்தும்;

3. தொழிற்சாலை இல்லாத தொகுதியில் (உதாரணமாக ஓமலூர் சட்டமன்றத் தொகுதி) தொழில் துவங்குபவர்களுக்கு மட்டுமே முதலீட்டு மானிய நிதி உதவி வழங்கி பின்தங்கிய பகுதிகளில் தொழில் துவங்க ஆவன செய்வது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது"

**திரு. ப. செந்தமிழ்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசு அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடர்ச்சி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஆளுநர் உரை மீதான விவாதத்திலே கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே கூற விழைகிறேன்.

13—வது சட்டப் பேரவையின் முதலாவது கூட்டத் தொடரில், முதலாவது ஆளுநர் உரையில் பேச வாய்ப்பளித்திருக்கிறீர்கள். இந்தச் சட்டமன்றம் கூடுவதற்கு முன்பு ஒரு தேர்தல். இந்தத் தேர்தல் நடைமுறையைப் பார்க்கின்ற நேரத்தில் தேர்தல் ஆணையம் செயல்பட்டதா என்ற கேள்விக் குறியிலே, மக்கள் சக்தி, ஜனநாயக சக்தி எல்லாம் ஒருங்கிணைந்து, தலைவர் கலைஞர் அவர்களும் இந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் களத்திலே நின்று தேர்தலைச் சந்தித்தன என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



2006 மே 30] [திரு. ஜி.கே. மணி]

முற்பகல் 9—50

அந்தத் தேர்தல் நேரத்தில் தேர்தல் ஆணையம் கை கட்டி நின்றது, வாய் பொத்தி நின்றது யாரால் என்று சொன்னால், அன்றைய முதலமைச்சராக இருந்த அ.தி.மு.க—வினுடைய பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா அம்மையார் அவர்கள் காவல் துறையைக் கையிலே வைத்துக்கொண்டு, அதிகார வர்க்கத்தைக் கையிலே வைத்துக்கொண்டு, பண பலத்தையெல்லாம் கையிலே வைத்து, சர்வாதிகாரப் போக்கில் இருந்த காரணத்தால், மிகப் பெரிய சர்வாதிகார நாட்டில் தேர்தலைச் சந்திக்கிற ஒரு நிலையாக தேர்தலைச் சந்தித்தோம். அப்படிப்பட்ட இக்கட்டான, நெருக்கடியான தேர்தலைச் சந்தித்த நேரத்திலும்கூட, மக்கள் விரோத ஆட்சி, அலங்கோல ஆட்சி, அவல ஆட்சி தூக்கி எறியப்பட வேண்டும், அதேநேரத்தில் மக்கள் நலன் காக்கிற ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தலைமையில் இருக்கிற தலைவர் கலைஞர் தலைமையில் ஒரு நல்ல ஆட்சி வர வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்களெல்லாம் வாக்களித்த காரணத்தால்தான் இன்று தமிழினத்தினுடைய தலைமகனாக இருக்கிற முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் இங்கே அமைச்சர்களெல்லாம் பொறுப்பேற்று மாமன்றத்தில் நாமெல்லாம் அமர்ந்து விவாதித்துக்கொண்டிருக்கிறோம். ஆக, இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில் தேர்தலிலே வெற்றி பெற்று, இங்கே வருவதற்குக் காரணமாக இருந்த தமிழக மக்களுக்கு, வாக்காளப் பெருமக்களுக்கு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

அந்த வகையில் இந்த மாமன்றத்தில் இதற்கு முன்னே பலமுறை பணியாற்றியிருந்தாலும்கூட, இந்த முறை வருவதற்கு வாய்ப்பளித்த பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர், சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், நம்முடைய கூட்டணியைத் தலைமை ஏற்று வெற்றிக்கு அச்சாரமிட்ட மூத்த தலைவர் கலைஞர் அவர்களுக்கும், இந்தத் தேர்தலில் கூட்டணிக்கு உழைத்த எங்களுடைய இளவல் அன்பிற்குரிய பசுமை நாயகர் சின்ன அய்யா அன்புமணி அவர்களுக்கும், தமிழ்நாடு முழுவதும் வெற்றிக்கு உழைத்திட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சொத்து, நம்முடைய தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், தோழமைக் கட்சிகளைச் சார்ந்த அனைத்து தலைவர்களுக்கும், எங்களுடைய மேட்டூர் தொகுதியில், அதிலும் குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் ஒரு தொகுதியைத் தவிர எல்லா தொகுதிகளிலும் வெற்றி பெறுவதற்குக் காரணமாகயிருந்து, கூட்டணிக்குத்

தலைமை ஏற்று சிறப்பாக வழி நடத்திய வேளாண் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் வீரபாண்டியார் அவர்களுக்கும், மேட்டூர் தொகுதியில் கூட்டணிக்குத் தலைமை ஏற்ற முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் தி.மு.க—வினுடைய பொருளாளர் மதிப்பிற்குரிய அருமை நண்பர் கோபால் அவர்களுக்கும், கூட்டணிக் கட்சியினுடைய செயல் வீரர்களுக்கும், தொகுதி வாக்காளர்களுக்கும் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இங்கே ஒரு சில கருத்துகளை நான் கூற விழைகிறேன்.

இந்த ஆட்சி நல்ல ஆட்சி. முன்பு, அலங்கோல ஆட்சி, அவல ஆட்சி என்று சொன்னேன். எந்த வகையிலே என்று சொன்னால், ஒட்டுமொத்தமாக மக்கள் விரோத ஆட்சி. அதைக்கூட கடந்த 5 ஆண்டு காலத்தில் அ.தி.மு.க. ஆட்சியினுடைய அவலங்களை எடுத்துச் சொல்லக்கூடியவகையில் மக்கள் விரோதப் போக்கினைச் சுட்டிக்காட்டுகிற வகையில் இன்னா நாற்பது, இனியவை நாற்பது என்று சொல்வார்களே, அதைப்போல ஒரு பட்டியல் இட்டோம் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே. இன்னா செய்யாதவை நாற்பது, இனியவை செய்யத் தவறியவை நாற்பது, செய்ய வேண்டிய காரியங்களைச் செய்தது நாற்பது என்றும், செய்ய வேண்டியவற்றைச் செய்யாதது நாற்பது என்றும், பட்டியல் இட்டோம். அதைப் பட்டியலிட்டுச் சொல்வதற்கு நேரம் இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட அவலங்களையெல்லாம் முன் நிறுத்தி தமிழக மக்கள் ஆட்சி மாற்றத்திற்கு வழிவகுத்தார்கள். ஆனால், ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு அவையிலே அமர்ந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? முதல் நாள் வந்தார்கள். ஆளுநர் உரையிலே பங்கேற்றார்கள். முதலமைச்சர் அவர்களால் ஆளுநர் உரையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து பேசி இருக்க வேண்டும். எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கிற முன்னாள் முதலமைச்சர் இந்த ஆட்சியைப் பற்றி அறிவித்திருக்கிறீர்கள், இதை நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். நிறைவேற்றினால் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன் என்று சொல்லியிருந்தால், தமிழ்நாட்டு மக்கள் எதிர்க்கட்சியைப் பாராட்டி இருப்பார்கள். ஆகவே, ஒட்டுமொத்தமாக, ஆளுகின்ற முதலமைச்சரை, ஆளும் கட்சியை, தோழமைக் கட்சிகளைப் பார்த்து எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற போக்கிலே பேசுவது மீண்டும் இவர்கள் ஜனநாயகத்தைக் குழி தோண்டி புதைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, இவர்களுக்கு வாக்களித்து மாமன்றத்திற்கு அனுப்பிய தமிழக மக்களுக்கு மிகப்பெரிய





தலைக்குனிவை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

முற்பகல் 9—55

அப்படிப்பட்ட அவலங்களுக்கு மத்தியில் ஒரு நல்ல ஆட்சி உருவாகியிருக்கிறது. இந்த ஆட்சியைப்பற்றிச் சொல்கிற நேரத்தில், இந்த ஆளுநர் உரையைப்பற்றிச் சொல்கிற நேரத்தில் திருவள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார்,

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

எவ்வளவு பொருத்தமானது. ஆகவே, சிங்கங்களுக்கு எல்லாம் சிங்கமாக விலங்கு அரசன் சிங்கமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே வீற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) படை, குடி, உணவு, அமைச்சர், நண்பர், கோட்டை என்னும் உறுப்பு ஆறினையும் உடையவன் அரசருள் சிங்கம் போன்றவனாவான் என்று வள்ளுவர் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, அரசருக்கு எல்லாம் அரசராக விலங்கு அரசன் சிங்கமாக வீற்றிருக்கிற, முதலமைச்சர் அவர்கள் வீற்றிருக்கிற இந்த அவை பெருமைக்குரிய அவை. எந்த வகையிலே? இந்த அவையிலே வீற்றிருக்கிற விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரைத் தவிர, மற்றவர்கள் எல்லாம் நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பொதுவாழ்வு ஆண்டுகள் அளவுக்குக்கூட வயது ஆகாத ஏராளமானவர்கள் இந்த அவையிலே அமர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) அவரோடு இணைந்து பணியாற்றுவது, வாழ்க்கையிலே நாம் பெற்ற பேறு என்பதை இங்கே மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அந்த அளவிற்குப் பெருமையோடு நாமெல்லாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

பெருமையோடு இந்த அவையில் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றார்கள். மாண்புநிறை முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற அன்று, முத்தான அறிவிப்புகள், மகத்தான அறிவிப்புகள், என்னவென்று சொன்னால் 3 அறிவிப்புகள்; அந்த அறிவிப்புகள் என்பது, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, விவசாயிகள் கூட்டுறவுக் கடன் அறவே தள்ளுபடி, சத்துணவில் வாரத்திற்கு இரண்டு முட்டை. இந்த அறிவிப்புகள், விவசாயிகள் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி என்பதும், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்பதும் தமிழக வரலாற்றில்

மட்டுமல்ல, இந்திய வரலாற்றிலேயே முதன்முதலாக அறிவித்து சரித்திரச் சாதனை படைத்த முதலமைச்சர்தான் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புநிறை கலைஞர் அவர்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன்.

அந்த அளவுக்கு மகத்தான அறிவிப்புகள். இன்னும் நிறைய ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆளுநர் உரை என்பது ஏதோ மேடையிலே பேசக்கூடிய பொதுக்கூட்ட மேடைப் பேச்சு அல்ல. தேர்தல் நேரத்திலே அறிவிப்பது, வாக்குறுதியாகச் சொல்வது அல்லது தனி நபராகப் பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில்கூட உண்மையைப் பேசுவது மனிதனுடைய இயல்பு. ஆனால், கடந்த காலங்களில்—நான் ஐந்து ஆண்டுகால ஆளுநர் உரையை எடுத்து வந்திருக்கிறேன். நான் முழுமையாகப் படித்தவன். நேற்றும், இன்றும் இரண்டு நாட்களாக அதிகாலையில் 4½ மணிக்கு எழுந்து படித்தேன். இப்போது மட்டுமல்ல, ஆளுநர் உரை விவாதத்திலே முன்பும் நான் கலந்துகொண்டு பேசினேன். அதிலே அறிவிப்புகள் வெறும் அறிவிப்புகளாக இருக்கின்றன, வாக்குறுதிகள், 107 அறிவிப்புகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன என்று அன்றைய முதலமைச்சரிடத்திலே பட்டியலிட்டுச் சொன்னேன். ஆகவே, அப்படி அறிவிப்புகள் என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டவை, அலங்கார வார்த்தைகளாக, அன்றைய முதலமைச்சரைப்பற்றிய பாராட்டுப் பத்திரமாக வாசித்த உரையைத்தான் நாம் பார்த்தோம். ஆனால், ஆளுநர் உரை என்பது இந்த நாட்டினுடைய தலையெழுத்தை நிர்ணயிக்கக்கூடிய, மக்கள் நலத் திட்டங்களை அறிவிக்கக்கூடிய ஓர் உரை. 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்று சொல்வார்களே, அதுபோல தொடர்ந்து வரக்கூடிய மாண்புநிறை முதல்வர் கலைஞர் அவர்களின் மகத்தான நிதிநிலை அறிக்கைக்கு முன்பு அரசினுடைய கொள்கைத் திட்டங்களை, செயல் திட்டங்களை எடுத்துச் சொல்லக்கூடிய உரையாக இந்த உரை அமைந்திருக்கிறது. அதிலே சொல்லப்பட்டிருப்பது, நான் முன்பே சொன்னதுமாதிரி, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, விவசாயக் கூட்டுறவுக் கடன் அறவே இரத்து, சத்துணவில் வாரத்திற்கு இரண்டு முட்டை, நிலமில்லா விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம், மீண்டும் உழவர் சந்தை, குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய், பள்ளிகளில் கட்டாயத் தமிழ், காமராஜர் பிறந்தநாள் கல்வி தினம் என அறிவித்தது, பொது நுழைவுத் தேர்வினை இரத்து செய்தல், கல்விக் கட்டணங்களைக் குறைத்தல், தனியார் கல்வி நிறுவனங்களில் ஒதுக்கீடு, அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்குதல், சென்னைக்கு மெட்ரோ



இரயில் திட்டம், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், கிராமங்களுக்குச் சிற்றுந்துத் திட்டம், வியாபாரிகள் நலவாழ்வு வாரியம், டெஸ்மா சட்டம் இரத்து, அரசுப் பணிகளில் சேர 5 ஆண்டுகள் வயதுவரம்பு தளர்வு, தென்னக நதிகளைத் தேவையான அளவுக்கு இணைக்க நடவடிக்கை; வேலைவாய்ப்பிலும் கல்வியிலும் சிறுபான்மையினரான இஸ்லாமியர்களுக்கும், கிறித்துவர்களுக்கும் இட ஒதுக்கீடு, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் திட்டம், கச்சத் தீவில் மீன்பிடி உரிமையைப் பெற்றுத் தருதல், கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல், சட்டமன்ற மேலவையை உருவாக்குதல், மேட்டூர் அணை ஜூன் 12—ல் திறப்பு என இதுபோன்ற ஏராளமான அறிவிப்புகள்.

முற்பகல் 10—00

இதையெல்லாம் பார்க்கின்றோம். இதையெல்லாம் பார்த்த பிறகு, தமிழ்நாட்டு மக்கள், நாம் தமிழ்நாட்டில் இல்லை, புது உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற புத்துணர்வை (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தி இருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடும், பெருமையோடும் பாராட்டிச் சொல்ல விழைகின்றேன். ஆகவே, இப்படிப்பட்ட அரசு அமைவதற்குத்தான், தேர்தலுக்கு முன்பு, நாலரை ஆண்டுக் காலம் எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள் குறிப்பிட்டார்கள். நாங்கள் மாண்புநிறை தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் இந்தக் கூட்டணியில் இருப்போம். தொடர்ந்து இருப்போம். பத்திரிகை நண்பர்கள் மட்டும் சிலபேர் எள்ளி நகையாடினார்கள். இவர்கள் இருக்கமாட்டார்கள் என்று சொன்னார்கள், கிண்டலடித்தார்கள். சகித்துக்கொண்டோம். தேர்தலைச் சந்திப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு சொன்னார், தேர்தல் அறிக்கையிலே சொன்னார், தலைவர் கலைஞர் தலைமையில் ஆட்சி, தி.மு.க. ஆட்சி அமையும். அதற்கு பாட்டாளி மக்கள் கட்சி வெளியிலேயே இருந்து முழு ஆதரவைக் கொடுக்கும். ஐந்தாண்டுக் காலம் இந்த ஆதரவு நீடிக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற வாக்குறுதியைச் சொன்னார். அந்த வகையிலே சொன்ன வார்த்தையை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். காரணம், சொல்வதைச் செய்யக்கூடிய, செய்வதைச் சொல்லக்கூடிய முத்தமிழ் அறிஞர் மாண்புநிறை தலைவர் இருக்கின்ற காரணத்தால், அதை நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றோம், நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். ஆகவே,

[திரு. ஜி.கே. மணி] [2006 மே 30

இப்படிப்பட்ட சூழ்நிலையில், நிறைய பேசுவதற்கு இருந்தாலும்கூட, சொல்லவேண்டிய கருத்துகளை நான் இங்கே சுருக்கமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

நம்முடைய மாண்புமிகு தலைவர் சமூக நீதியிலே மிகுந்த அக்கறை கொண்டவர். தந்தை பெரியார் பாசறையில் படித்து வளர்ந்தவர். நான் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், உங்களை விட்டால் இந்தத் தமிழகத்தில், இந்தியத் திருநாட்டின் சமூக நீதிக்கு வழிகாட்டியவர்கள், அதை நிலைநாட்டக்கூடியவர்கள், நிலைபெறச் செய்கின்றவர்கள் யார் என்பதை நான் பணிவோடு எண்ணிப் பார்க்கின்றேன். உங்களை விட்டால், இந்தியத் திருநாட்டின் சமூக நீதிக்கு வித்திட்டு, வழிகாட்டுகின்ற, நிறைவேற்றுகின்ற தலைவர் இதுவரை எவருமேயில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த காலத்தில், கடந்த அம்மையார் ஆட்சிக் காலத்தில், 10 ஆண்டுக் காலம், அதற்கு முன்னாலே அ.தி.மு.க. ஆட்சிக் காலம், சமூக நீதி என்னவாயிற்று? எங்கே போனது? தந்தை பெரியார் பிறந்த மண்ணில், சமூக நீதி முளைத்த மண்ணில், சமூக நீதி குழிதோண்டி புதைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, அந்த வகையில் தந்தை பெரியாரை அடியொற்றியிருக்கக்கூடிய, சமூக நீதிக் காவலர், மருத்துவர் அய்யா அவர்கள் உங்களிடத்திலே பலமுறை வேண்டுகோள் வைத்தார்கள், போராடினார்கள். நீங்கள்தான் மிகப் பின்தங்கிய மக்களுக்கு, 107 சாதி மக்களுக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கி, அந்த 107 சாதி மக்களும் படிக்கின்றார்கள், வேலைக்குச் செல்கின்றார்கள். அவர்கள் வயிற்றில் பால் வார்த்திருக்கின்றீர்கள் என்பதைப் பெருமையோடு நான் சுட்டிக்காட்டுகின்றேன்.

அதுமட்டுமா? இன்று இந்தியத் திருநாட்டுக்கு வழிகாட்டுகின்றீர்கள், மண்டல் குழு பரிந்துரையைச் சமூக நீதிக் காவலர் வி.பி. சிங் அவர்கள் நிறைவேற்றினார்கள், உங்களுடைய ஆலோசனையின்பேரிலே. வேலைவாய்ப்பினை வழங்கினார்கள், கல்வியிலே இல்லை. படிக்காமல் எப்படி வேலைக்குச் செல்ல முடியும்? அதைத்தான் எங்களுடைய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள், ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே வற்புறுத்தினார்கள், வாதாடினார்கள். அதை நிறைவேற்றுவதற்கு நீங்களும் பெரிதும் ஒத்துழைத்தீர்கள். மருத்துவர் அய்யா அவர்களுடைய கோரிக்கை, உங்களுடைய ஆதரவால், உங்களுடைய ஒத்துழைப்பால் இந்திய அளவில் நிறைவேற இருக்கின்றது என்பதைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டம்



2006 மே 30] [திரு. ஜி.கே. மணி]

வருவதற்கு, இட ஒதுக்கீடு நிறைவு பெறுவதற்கு, வரக்கூடிய நாடாளுமன்றத்தின் மாரிக்கால கூட்டத் தொடரிலேயே ஓர் அவசரச் சட்டம் கொண்டு வருவதாக வாக்குறுதி அளித்திருக்கின்றார்கள். அதை நிறைவேற்றுவதற்கு நீங்கள் பெரிதும் மேலும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அப்படிச் சேர்க்கின்ற நேரத்தில், அதை முக்கியமான ஷரத்தாகச் சேர்க்க வேண்டும்.

இந்த நாட்டில் எல்லோரும் கூக்குரலிடுகின்றார்கள், பொருளாதார அளவுகோல் என்று சொல்கின்றார்கள். அந்த அவசரச் சட்டமுன்வடிவில் பொருளாதார அளவுகோல் என்ற நிலை எக்காரணம் கொண்டும் வரக்கூடாது. பிற்படுத்தப்பட்டவரில் முன்னேறியவர்கள் என்று சொல்லக்கூடிய வகையில் creamy layer அங்கே புகுத்தப்பட இருக்கின்றது. அந்த creamy layer எக்காரணம் கொண்டும் நுழையக் கூடாது. நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், அதில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று சொல்லி, நான் இந்த நேரத்திலே உங்ளை அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10—05*

அதுமட்டுமல்ல, வேலைவாய்ப்பு. கல்வியில் இட ஒதுக்கீடு என்பது இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டது. புதிதாக நாம் கேட்கவில்லை. ஆகவே, அப்படி இருக்கிற நேரத்தில் சட்ட மறு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டது. மதிப்பிற்குரிய மாண்புமிகு நீதியரசர் வெங்கடாசலையா தலைமையிலே அந்தச் சட்ட மறு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டது, இந்திய அளவிலே. அதிலே வெங்கடாசலையா அவர்கள் தன்னுடைய குழு பரிந்துரையாகச் சொல்லியிருக்கிறார். உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகளிலேயும் இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, இன்றுகூட எண்ணிப் பார்க்கிறோம். இந்திய அளவிலே உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் 620 பேர். அந்த 620 பேரிலே 20 பேர் தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இல்லை, பிற்படுத்தப்பட்டவர்கள் சொற்ப அளவே. எங்கே இருக்கிறது சமூக நீதி? பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தலித் மக்களுக்கு திறமை இல்லையா, தகுதி இல்லையா? ஆகவே, இதையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், இந்திய நாட்டின் கடைநிலை ஊழியரிலேயிருந்து உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதி வரையிலே இட ஒதுக்கீட்டு முறை வர வேண்டும்.

[திரு. ஜி.கே. மணி] [2006 மே 30

அது உங்களால்தான் முடியும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே இட ஒதுக்கீட்டு முறை இருக்கிறது. அந்த இட ஒதுக்கீட்டு முறை உங்களாலே நிலைத்திருக்கிறது. இதிலேயும் சில திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு, 69 சதவீத இட ஒதுக்கீடு. இதிலே பிற்படுத்தப்பட்டோருக்கு 30 விழுக்காடு இருக்கிறது. இந்த 30 விழுக்காடு எத்தனை ஜாதியினருக்கு என்று சொன்னால், 92 ஜாதிகளுக்கு மேல் இருக்கிறார்கள். அதிலே ரெட்டியார், முதலியார், செட்டியார், நாடார், யாதவர், முக்குலத்தோர், கொங்கு வேளாள கவுண்டர், இப்படி 92 சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். இப்படி 92 ஜாதிகளுக்கு மேற்பட்டவர்களுக்கு 30 விழுக்காடு. அரசுப் பணியாக இருந்தாலும் அல்லது படிப்பதற்காக இடங்கள் தேர்வு செய்கிற நேரத்தில் அந்தத் தேர்வு செய்யக்கூடிய அதிகார வரம்பிலே இருக்கக்கூடியவர்கள் ஒரு சில ஜாதி வேண்டாம் என்று நினைக்கக்கூடிய நிலை. ஒரு சிலருக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று சொன்னால், அந்த 92—ல் 3, 4 ஜாதிக்கே கொடுத்துவிட்டு மற்றவர்களை எல்லாம் புறக்கணித்துவிடலாம். கிடைக்காமல் போய்விடக்கூடிய சூழ்நிலை.

பெரிய ஜாதி என்று சொல்லக்கூடிய, மக்கள் தொகை அதிகமாக இருக்கக்கூடிய அவர்களுக்கும் வாய்ப்பு கிடைக்காமல் போய்விடும். ஆகவேதான், எல்லா சமுதாய மக்களுக்கும், எல்லா ஜாதி மக்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடிய வகையில் ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் இருப்பதைப்போல, அந்தத் தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறை, Compartmental reservation என்று சொல்லக்கூடிய அந்த இட ஒதுக்கீட்டு முறையை உங்கள் காலத்திலேயே கொண்டுவர வேண்டும் என்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது வந்தால்தான் எல்லோருக்கும் சரியாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. அதிலேதான் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கும். ஆகவே, சமூக நீதிக் காவலராக இருக்கிற நீங்கள் அதைக் கொண்டுவர வேண்டும். பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள், மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள், தலித் சமுதாய மக்கள் வாழ்நாள் முழுவதும் மாண்புநிறை முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்பார்கள். நீங்கள்தான் சமூக நீதியை நிலைபெறச் செய்தீர்கள் என்ற பெயர் இந்தியத் திருநாடு முழுவதும் நிலைத்து நிற்கும். அதற்கு வித்திட வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2006 மே 30] [திரு. ஜி.கே. மணி]

தமிழனுக்கு என்று நாகரிகம் இருக்கிறது; கலாச்சாரம் இருக்கிறது; பண்பாடு இருக்கிறது. அதெல்லாம் கடந்த ஆட்சிக் காலத்தில் காணாமல் போய்விட்டன. காணாமல் போனதனுடைய விளைவுதான் கண்ணகி சிலை அகற்றம். ஆகவே, காணாமல் போய்விட்ட, தமிழன் இழந்துவிட்ட நாகரிகம் மீண்டும் கிடைக்க இருக்கிற நாள்தான் அடுத்த மாதம், ஜூன் மூன்றாம் தேதி. தமிழன் தலைநிமிர்ந்து நிற்பதற்கு, தமிழன் நாகரிகம் மீண்டும் பெறக்கூடிய நாள் ஜூன் மூன்று, கண்ணகி சிலை நிறுவுவது. ஆகவே, அப்படிப்பட்ட மகத்தான தலைவரே, நீங்கள் நிறைய சாதித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை இங்கே நான் பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன்.

எங்களுடைய மருத்துவர் அய்யாகூட அடிக்கடி சொல்வார்கள். கடந்த ஆட்சியில், அம்மையாருடைய ஆட்சியில், முன்னேற்றமே இல்லை. தமிழ்நாடு முதல் மாநிலம் என்று சொன்னார்கள். தமிழ்நாடு எல்லா நிலைகளிலும் பின்னோக்கிச் சென்றது. இதை நான் சொல்லவில்லை, India Today இதழ் எழுதியது; எல்லோரும் படித்த ஒன்று. ஆகவே, அதிலேகூட மருத்துவர் அய்யா அவர்கள் சொல்வார்கள். இந்த மாநிலம் முன்னேறுவதற்கு, மக்கள் வாழ்வதற்கு, வறுமை ஒழிப்பு, கல்வி, வேலைவாய்ப்பு இம்மூன்றும் மிக முக்கியமானது. அதைத்தான் அவர்கள்கூடச் சொல்வார்கள். "Triple E" — Eradication of poverty, Education and Employment — வறுமை ஒழிப்பு, கல்வி, வேலைவாய்ப்பு. இந்த மூன்றும் வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால், கடந்த ஆட்சியில் மூன்றும் காணாமல் போய்விட்டன. வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்கள் அறவே இல்லை. ஆனால், ஒன்றை மட்டும் சொல்வார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் புரட்சி, புரட்சிகரமான திட்டங்கள் என்று சொல்வார்கள். புரட்சி என்கிற வார்த்தையே அபத்தமானது. புரட்சி என்கிற வார்த்தைக்கே முக்கியத்துவம் இல்லாமல் போய்விட்டது, இப்படிச் சொன்ன காரணத்தினாலே. ஆகவே, மீண்டும் தமிழகத்திலே ஒரு புரட்சி வேண்டும் என்று சொன்னால், இரண்டாவது பசுமைப் புரட்சி வரவேண்டும் என்று சொன்னால், தமிழகத்தில் எல்லா நிலைகளிலும் புரட்சி என்பது மாண்புநிறை முதலமைச்சர் கலைஞர் அவர்களாலே வரவேண்டும்.

முற்பகல் 10—10

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி, பேசுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதி இட ஒதுக்கீடு சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு சிறிய விவரம் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சமூக நீதி என்று சொல்கின்றபோது, பெண்களுக்கு நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் 33 சதவிகித இட ஒதுக்கீடு வேண்டும் என்பதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் அந்தப் பிரச்சினைக்கு மசோதா கொண்டு வரமுடியாமல் இருக்கிறது. நம்முடைய தமிழக அரசு, மாண்புமிகு ஆளுநர் உரையில், எப்படி அதைப்பற்றி அணுகுகிறோம் என்பது பற்றியான குறிப்பு எதையும் குறிப்பிடவில்லை. நாம் அதை ஆதரிப்பதற்கான வகையில் அதைக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை தமிழ்நாட்டிலே நிறைவேறி இருக்கிறது. உள்ளாட்சியிலே பெண்களுக்கு 33 சதவிகிதம் என்று கலைஞர் அவர்கள் காலத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றப்பட்டது. இன்னும் தலைவர் கலைஞர் அவர்கள், முக்கியமான திட்டங்களை, முன்னுரிமைத் திட்டங்களைப் பெண்களுக்கு வழங்க இருக்கிறார்கள். அதை நான் மகிழ்ச்சியோடு இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

வறுமை ஒழிப்புத் திட்டங்கள் அறவே இல்லை தமிழ்நாட்டில். கல்வி, கடந்த 5 ஆண்டு காலத்தில் கல்வியினுடைய அவல நிலை உங்களுக்கெல்லாம் தெரியும். கல்விக் கொள்கையே இல்லாமல் போய்விட்டது, காணாமல் போய்விட்டது. கடந்த ஆட்சிக் காலத்தில்தான் கல்வி கடைச் சரக்காக விற்கப்பட்டது. அப்போதெல்லாம் நினைப்பார்கள் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கொள்ளையடிக்க வேண்டும் என்று சொன்னால் சாராய வியாபாரிகளாக மாற வேண்டும் என்று நினைத்த காலம் அது, அமரர் எம்.ஜி.ஆர். காலம். அந்தக் காலம் எல்லாம் போய், அம்மையார் ஆட்சிக் காலத்தில் கொள்ளையடிக்க வேண்டும் என்று சொன்னால், அதற்குக் கல்விக்கூடங்கள் திறக்க வேண்டும். ஆகவே, சாராய வியாபாரிகள் எல்லாம் கல்விக் கொள்ளையிலே ஈடுபட்டார்கள்.





ஈடுபட்டு கல்வியைக் கடைச் சரக்காக விற்பனைச் செய்தார்கள். அந்த நிலைமையை உருவாக்கிய, கல்விக் கொள்ளைக்குத் துணை போன அரசுதான் அ.இ.அ.தி.மு.க. அரசு. ஆகவே, தலைவர் கலைஞர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், இங்கே ஏழை, பணக்காரனுக்கு என்று வேறுபட்ட கல்வி இல்லாமல் எல்லோருக்கும் தரமான, சீரான, இலவசக் கட்டாயக் கல்வியை நீங்கள் கொண்டு வருவதற்கு முன்வர வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

உயர் கல்வி நிறுவனங்களில், இப்போதுகூட பொறியியல் கல்லூரிகள் நிறைய இருக்கின்றன. மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. ஏழைகள் படிக்க முடியாது. மத்திய அரசு நல்ல திட்டங்களை எல்லாம் கொண்டு வரவிருக்கிறது. அதற்கு நீங்கள் வழிகாட்ட வேண்டும். இன்றைக்கு L.K.G, U.K.G.—ல் போய்ச் சேர வேண்டுமென்றால்கூட 25 ஆயிரம், 50 ஆயிரம். தனியார் கல்வி நிறுவனங்கள் புற்றீசல் போலத் தொடங்குவதைத் தடுத்து நிறுத்தி, அரசு கல்வி நிறுவனங்கள் மேலும் வருவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு உருவாக்குதல். 5 ஆண்டு காலத்தில் வேலை நியமனத் தடைச் சட்டம். வேலையே இல்லை. நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். 3 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு. வரவேற்கிறோம். அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேற்கு வங்க முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்கிறார்கள், வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும், அதன்மூலம் வாங்கும் சக்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். அந்த நிலை தமிழ்நாட்டிலே வளர வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் தமிழ்நாட்டிலே, இந்திய நாடு முழுவதும், இது உலக நாடாக இருந்தாலும்கூட நாட்டினுடைய மிகப்பெரிய சக்தி, அளவிடமுடியாத சக்தி இளைஞர் சக்தி. இன்று இளைஞர் சக்தி வீணாகிக் கொண்டிருக்கிறது. இரண்டு வகைகளிலே வீணாகிக் கொண்டிருக்கிறது. கடந்த ஆட்சியாளர்களால் வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியது. பெருகிய காரணத்தினால் இளைஞர்கள் படித்தாலும் வேலையில்லை. தினந்தோறும் அலைந்துவிட்டு மன உளைச்சல் ஏற்பட்டு டாஸ்மாக் கடைக்குப் போனான். அம்மையார் அவர்கள் திறந்து வைத்த அந்த டாஸ்மாக் கடைகளினாலே இளைஞர்கள் வாழ்வு வீணாகிக்கொண்டிருக்கிறது. அதனால், ஏராளமான குடும்பங்கள் சீரழிந்துகொண்டிருக்கின்றன. நாங்கள் தேர்தல் முடிந்து, சில நாட்கள்

[திரு. ஜி.கே. மணி] [2006 மே 30

நன்றி சொல்லிய நேரத்தில் பெண்கள் சொன்னார்கள், தயவுசெய்து முதலமைச்சரிடம் சொல்லி இந்த டாஸ்மாக் கடைகளையெல்லாம் மூடுங்கள், பெண்கள் நடமாட முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, முழுமையாக நீங்கள் மூட முடியாது. மூட வேண்டுமென்று சொல்லவில்லை, உங்கள் காலத்திலேயிருந்த அளவிற்காவது டாஸ்மாக் கடைகளைக் குறைக்க குறைந்தபட்சம் நடவடிக்கை எடுங்கள். அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—15

அப்புறம், இன்னொரு பக்கம் இளைஞன் போகிறான், வேலை கிடைக்கவில்லை. இவர்கள் எல்லாம் திரைப்படத்திற்குப் போகிறார்கள். திரைப்படத்திற்கு பா.ம.க.—வோ, நாங்களோ எதிரிகள் அல்ல. திரைப்படம் மிகப் பெரிய ஊடகம். மக்களை ஈர்க்கக்கூடிய ஊடகம். அதில் நல்லவற்றை எடுத்துச் சொல்ல வேண்டும். அவன்,—இளைஞன் கல்வியைப் பெறுவதற்கு, வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்வதற்கு, குடும்ப வருமானத்தைப் பெருக்குவதற்கு, நாட்டுப் பற்றை உண்டாக்குவதற்கு, சேவை மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளக்கூடிய வகையில் நல்லவற்றை அந்தப் படங்களிலே எடுத்துச் சொல்ல வேண்டும். ஆனால், இன்றைக்குப் பார்த்தீர்கள் என்றால், என்ன நிலைமை? பெண்மையைக் கொச்சைப்படுத்தக்கூடிய வகையில், பெண் அடிமைத்தனத்தை ஊக்குவிக்கக்கூடிய வகையில், இளைஞர் சக்தியை வீணடிக்கக்கூடிய திரைப்படங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதையெல்லாம் மாற்றி, நல்ல படங்களாக வருவதற்கு ஆலோசனை வழங்க வேண்டுமென்று நான் தமிழக அரசை அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதை அறவே நீக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இதிலே சமூகவியல் ஆர்வலர்களைக் கொண்டு ஒரு குழு அமைத்துகூட, அதன்மூலம் நீங்கள் நிவர்த்தி செய்வதற்கு வழிவகை செய்யலாம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆட்சியிலே தாய் மொழி சிதைந்து போனது. நான்கூட சட்டமன்றத்திலே பலமுறை பேசினேன். தமிழ்நாட்டிலே பள்ளிக்கூடங்களிலே தமிழில் ஒரு பாடம்கூட படிக்காமல் பட்டப் படிப்புப் படித்து வெளியேறக்கூடிய அவலநிலை இருக்கிறது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லை. உலக நாடுகளில் எங்கேயும் இல்லை. தமிழ்நாட்டில்தான் இந்த நிலைமை. ஆகவே, அதையெல்லாம்



2006 மே 30] [திரு. ஜி.கே. மணி]

நிவர்த்தி செய்யக்கூடிய வகையிலேதான், தமிழாய்ந்த தமிழறிஞர் தமிழினத்தினுடைய தலைமகன், தமிழ்நாட்டினுடைய மாண்புநிறை முதலமைச்சர் அவர்கள் பள்ளிகளில் கட்டாய தமிழ்ப் பாடத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான் மனதார வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இந்த நிலை வளர வேண்டும். ஆகவே, இப்படித் தமிழ் வளர்ச்சிக்கு வித்திட்ட உங்களுக்கு நாங்கள் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. நீங்கள்தானே தமிழினத்தினுடைய தலைவர், தமிழாய்ந்த தலைமகன். ஆகவே, அதிகம் நாங்கள் சொல்ல வேண்டியதில்லை. இருப்பினும்கூட, இன்று பேச்சு வழக்கிலே, எழுத்து வழக்கிலே தமிழ் சிதைந்துகொண்டிருக்கிறது. இளைஞன் கடிதம் எழுதுகிறான், பேசுகிறான். பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசக்கூடிய சொற்றொடர்கள் அதிகம் இருக்கின்றன. அவன் பேச்சு வழக்கிலே தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில், ஆட்சி மொழி, அலுவல் மொழி, தமிழாக இருக்க வேண்டும். வணிக வளாகங்களில்.. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உங்கள் இருக்கையில் இருந்து கேளுங்கள். உங்கள் இருக்கை எது?

*(மாண்புமிகு உறுப்பினர் அவருடைய இருக்கைக்குச் சென்றார்.)*

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாஸ்மாக் சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருக்கிறார். அதைப் பேசுகின்றபோது, தமிழகத்திலே இலட்சக்கணக்கான பனை மரங்கள், தென்னை மரங்கள் எல்லாம் இருக்கின்றன, ஈச்ச மரங்கள் இருக்கின்றன. அதிலேயிருந்து கள்ளை இறக்கலாம் என்பது பழைய பழக்கம். மூதாதையர்களுடைய பழக்கம். உடல் நலத்திற்குக் கேடு இல்லாத பழக்கம். எனவே, அந்த முறை நடைமுறைப்படுத்தப்படுமா? கள் இறக்க இந்த அரசு ஆவன செய்யுமா? அந்தக் கடைகளைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பனைத் தொழில் வாரியம் அமைப்பதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். அதை நாம் மனதார வரவேற்கிறோம். அதிலே யாருமே சொல்லவில்லை, போகவேயில்லை. ஆகவே, வணிக வளாகங்களுடைய பெயர்ப் பலகைகள், விளம்பரப் பலகைகள் தமிழிலே இருக்க வேண்டும். நீதிமன்றங்களில் வாதாடுதல், தீர்ப்பளித்தல், அலுவலக நடைமுறைகள் எல்லாம் தமிழிலே இருக்க வேண்டும். இது பிரசித்திபெற்ற அலகாபாத் உயர் நீதிமன்றத்திலே நடைமுறையிலே இருக்கிறது.

[திரு. ஜி.கே. மணி] [2006 மே 30

முற்பகல் 10–20

அதைப்போல, தமிழ்நாட்டிலே இருக்கின்ற கோயில்கள். தமிழர்கள் வழிபடுகிற கோயில்களில் இங்கே அர்ச்சனை தமிழிலே இல்லை. போன தடவை போனோம். பாட்டாளி மகளிர் சங்கத்தினுடைய சார்பிலே தமிழ்நாடு முழுவதும் பெண்கள் எல்லாம் போய் கோயிலிலே தமிழிலே அர்ச்சனை செய்ய வேண்டும் என்று கேட்டால் அப்போது செய்தார்கள். முதலமைச்சரிடத்திலே சொன்னோம். சட்டமன்றத்திலே பேசினோம். தமிழில் வேண்டுமென்று கேட்டால் அர்ச்சனை செய்யலாம். கோயில் இருப்பது தமிழ்நாட்டிலே, வழிபடக்கூடியவர்கள் தமிழர்கள், ஆகவே, தமிழில் செய்யலாம். பிற மொழியில் கேட்டால், வேண்டுமென்றால் செய்யலாம். அந்த நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம் வீட்டுத் திருமணங்களில்கூட தமிழ் முறை இல்லை. தமிழ் முறைத் திருமணங்கள் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பிறகு, திரைப்படங்களிலே தமிழ் சிதையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு இந்த அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமானது தமிழ் இசை. உலகினுடைய ஆதி இசை தமிழ் இசை. இந்தத் தமிழ் இசை, தமிழர்களைவிட்டு அகன்றுகொண்டிருக்கிறது. தமிழர்கள் வேற்று மொழி இசைக்கு, வேற்று நாட்டு இசைக்கு ஈர்க்கப்பட்டு தமிழ் இசையை மறந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ் இசை இன்று அநாதையாகிக் கொண்டிருக்கிறது. அதை எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழ் இசை என்பது, இங்கே இசை நயத்தோடு மனதை ஒருநிலைப்படுத்தக்கூடிய வகையில், மனதைக் குளிரச் செய்யக்கூடிய வகையில், தமிழ் இசை மிக முக்கியமானதாகக் காணப்படுகிறது. ஆனால், அப்படிப்பட்ட இசையைச் சிதைக்காமல், தமிழ் இசை ஒவ்வொரு வீடுகளிலேயும், ஒவ்வொரு தமிழர் மனதிலேயும் நிலை பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற வகையில், பள்ளிகளில் தமிழ் இசைப் பாடத்தைத் துவங்க வேண்டும் என்று நான் முதலமைச்சர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. போளூர் வரதன், உட்காருங்கள், பேசி முடிக்கட்டும்.



2006 மே 30]

**திரு. ஜி.கே. மணி:** நான் முடித்து விடுகிறேன், முடித்து விடுகிறேன். அப்புறம் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன், முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் முதலில்.

**திரு. ஜி.கே. மணி:** நான் முடித்துவிடுகிறேன். அப்புறம் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் அரசே கல்விக் கொள்ளையில் ஈடுபட்டது. உதாரணத்திற்கு 2004 ஆம் ஆண்டில் கல்வியியல் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் 156 துவங்கப்பட்டன. எங்களுடைய வேல் முருகன் அவர்கள்கூட சொன்னார்கள், இடங்கள் கூடுதலாக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால், 2004–ல் கல்வியியல் கல்லூரி, ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 156. 2005–ல் 325. இது துவங்கியது மட்டுமல்ல. கல்வி நிறுவனங்கள் துவங்கப்பட்டன. அங்கீகாரம் இல்லை. 6 மாதங்கள், 8 மாதங்கள் குழந்தைகள் படித்தார்கள். அங்கீகாரம் இல்லை, சமீபத்திலே அங்கீகாரம் வழங்கப்பட்டது. 10 மாதங்கள் படிக்கவேண்டிய அந்தக் குழந்தைகள் 2 வருடங்கள், 16 மாதங்கள், 18 மாதங்கள் படிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. யாரால்? எதற்காக என்று சொன்னால், செலுத்த வேண்டிய கப்பம் பாதியாக இருந்த காரணத்தால், முழுமையாகச் சேராத காரணத்தால், முழுமையான அங்கீகாரம் வழங்கப்படவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட அவலங்கள் இந்த மண்ணிலே தொடர்ந்து இருக்கிறது. இதற்கு நீங்கள் ஒரு C.B.I. விசாரணைக்கு ஆணையிட வேண்டும் என்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னொரு சான்றும் இருக்கிறது. விண்ணப்பித்து அங்கீகாரம் வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கக்கூடியவர்கள் எத்தனை பேர் என்று சொன்னால், தமிழ்நாட்டில் மட்டும் 996 பேர்.

நன்றாக எண்ணிப்பார்க்க வேண்டும், அந்த அரசாங்கம் என்ன முறைகேடு செய்திருக்கிறது என்று. அங்கீகாரம் வழங்கப்படாமல் தமிழகத்தில் மட்டும் இருப்பது 996. ஆனால், ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி உட்பட 4 மாநிலங்களிலேயும் நிலுவையில் இருக்கிற விண்ணப்பங்கள் 804. இங்கே இந்த 4 மாநிலங்களைவிட கூடுதலாக இருக்கிறது. இந்தக் கல்விக் கொள்ளை இங்கேதான், வேறு எங்கேயும் இல்லை. ஆகவே, இதையெல்லாம் கவனத்திலே எடுத்துக்கொண்டு நீங்கள் ஒரு விசாரணைக்கு ஆணையிட வேண்டும் என்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே உழவுத் தொழில், வேளாண்மைத் தொழில்தான் முக்கியமான தொழில், ஆதாரத் தொழில். அடுத்து இருக்கிற தொழில், நெசவு. இதில் கைத்தறி நெசவும் இருக்கிறது, விசைத்தறி நெசவும் இருக்கிறது. ஆகவே, கடந்த ஆட்சியாளர்களால் கஞ்சித் தொட்டி வைக்கப்பட்ட நிலையை எல்லாம் பேசவேண்டும். ஆனால், நெசவாளர்கள் வாழ்வு புத்துயிர் பெறவேண்டும். அவர்கள் வாழ்வில் மீண்டும் புனரமைப்பைச் செய்யவேண்டுமென்று சொன்னால், நீங்கள் அறிவித்த இலவச மின்சாரத்தை வழங்க வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த இலவச மின்சாரம் வரவேண்டும். அதுமட்டுமல்ல, கைத்தறி நெசவாளர்கள் வாழ்வு பெறுவதற்குரிய கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் எல்லாம் சிதைந்து போய்க்கொண்டிருக்கின்றன, நலிந்து போய்க்கொண்டிருக்கின்றன. அந்த நெசவாளர் சங்கங்கள் புத்துயிர் பெறுவதற்கும், மீண்டும் அவர்கள் வாழ்க்கையில் ஒளி விளக்கு ஏற்றிட மானியத்துடன்கூடிய கடன் வழங்குவதற்கும் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10—25*

இன்றைக்கு படித்துவிட்டு எல்லா மாவட்டங்களிலும் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், நெசவுத் தொழில் இல்லாத மாவட்டங்களிலேயும் நெசவுத் தொழிலை விஸ்தரிக்க வேண்டும். அப்படி உருவாக்குகின்றபோது நிறைய பேருக்கு வேலைவாய்ப்பு. நூல், துணி உற்பத்தி, ஏற்றுமதி இவைகளை எல்லாம் பெருக்குவதற்கு மாவட்டந்தோறும் நெசவாளர் பூங்காக்களை உருவாக்கி, அத்தொழிலில் அதிகம் ஈடுபடுவதற்கு, வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, கூட்டுறவுத் தேர்தல் நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை மனதார வரவேற்கிறோம். இந்தக் கூட்டுறவுத் தேர்தலை முறையாக நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதேவேளையில் இந்தக் கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதற்கு ஒரு தேர்தல் ஆணையம் வேண்டும். பொதுத் தேர்தலுக்கு தேர்தல் ஆணையம் இருக்கிறது. உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல் ஆணையம் இருக்கிறது. அதைப்போல கூட்டுறவுத் தேர்தல் ஆணையத்தை உருவாக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆட்சியாளர்கள் மோனோ இரயில் என்று கொண்டு வந்தார்கள். நான் சட்டமன்றத்தில் கடுமையாக எதிர்த்தேன். என்னை அன்றைய ஆட்சியாளர்கள் கொச்சைப்படுத்தினார்கள். அதற்குப் பிறகு உயர் நீதிமன்றத்தில் என் பெயரில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வழக்குத் தொடர்ந்தோம். அதற்குத் தடை விதிக்கப்பட்டது. ஆட்சியாளர்களால் கைவிடப்பட்ட நிலையில், பாட்டாளி மக்கள் கட்சி கோரிய மெட்ரோ இரயில் திட்டத்தை இந்த அரசு அறிவித்திருக்கிறது. அதை மனதார வரவேற்கிறேன். காரணம் மக்கள் நெரிசல் மிக்க, போக்குவரத்து நெரிசல் மிக்க சென்னை போன்ற மாநகரங்களில் மெட்ரோ இரயில்தான் பலன் அளிக்கும். ஆகவே, அந்தத் திட்டத்தை வரவேற்கிறேன்.

அதைப்போலவே மிக முக்கியமானது மாவட்டங்களைப் பிரித்தல். தமிழ்நாட்டில், இந்திய நாட்டில் வரலாறே இருக்காது. ஒரு மாவட்டம் பிரிக்கப்பட்டது என்று சொன்னால் அது வளர்ச்சி பெறும். பிரித்த மாவட்டத்தை மீண்டும் இணைத்ததாக எங்காவது வரலாறு இருக்கிறதா? அப்படிப்பட்ட அபத்தமான காரியத்தைச் செய்த அரசு அ.தி.மு.க. அரசு. நிர்வாக நலனுக்காக, மக்கள் நலத் திட்டங்கள் விரைவாகச் சென்றடைவதற்குப் பெரம்பலூரிலிருந்து அரியலூர் மாவட்டத்தைப் பிரித்த மகத்தான முதலமைச்சர், மாண்புநிறை முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அவர் செய்த காரியத்தை முன்னாள் முதலமைச்சர் அம்மையார் சொன்னார். ஒரு பெரிய சமுதாயம் வாழக்கூடிய மாவட்டத்தைப் பிரித்தார், அதை இணைக்கிறேன் என்று அந்த மாவட்டத்தைப் பெரம்பலூருடன் இணைத்தார். அப்படியென்றால் சாதி துவேசம் யாருக்கு இருக்கிறது? ஒரு சாதி வேண்டாம் என்று சொல்லக்கூடிய சாதிய விரோத முதலமைச்சர்தான் அன்றைய ஜெயலலிதா அவர்கள் என்பதை இன்று மட்டுமல்ல, அவரை வைத்துக்கொண்டே அந்த அவையில் நான் குற்றஞ்சாட்டினேன். ஆகவே,

[திரு. ஜி.கே. மணி] [2006 மே 30

மாண்புநிறை முதலமைச்சர் அவர்களே, அந்த மாவட்டத்தை மீண்டும் நீங்கள் பிரிக்க வேண்டும்.

அதைப்போல, பெரிய மாவட்டங்கள், கோவை மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், வேலூர் மாவட்டம் என்று நிறைய தொகுதிகளை 11, 12, 14 தொகுதிகளையுடைய பெரிய மாவட்டங்களாக இருக்கின்றன. ஆகவே, நிர்வாக வசதிக்காக, மக்கள் நலத் திட்டங்கள் விரைந்து செல்வதற்கு, மத்திய அரசினுடைய நிதியுதவியைப் பெறுவதற்கு 6 தொகுதிகளை உள்ளடக்கி ஒரு மாவட்டமாக வரலாறு படைக்கிற வகையில், புரட்சிகர மாறுதலாக 6 தொகுதிகள் கொண்ட மாவட்டங்களாக அவற்றைப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்கிறேன்.

அதேமாதிரி வேளாண் தொழில் ரொம்ப முக்கியமானது. இன்றைக்கு ஆதிக்க வர்க்கத்தில் சிலர் காகிதத்தில் விவசாயம் செய்யக்கூடிய விஞ்ஞானிகள் எல்லாம் வளர்ந்து பெரிய விஞ்ஞானிகளாக தன்னை அறிவித்துக்கொண்டு விவசாயிகளை, சாதாரண விவசாயிகளை எல்லாம், விவசாயத் தொழிலிலிருந்து அப்புறப்படுத்தக்கூடிய ஒரு நிலையை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு சிறிதும் இடம் கொடுக்காமல் அதை நிலைநிறுத்தம் செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தில் தொடர்ந்து நான் பேசிக்கொண்டிருக்கிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பிறந்த தினத்தை கல்வி தினமாக அறிவிக்க வேண்டும். எங்கள் மருத்துவர் அய்யாகூட காமராஜர் பிறந்த தினத்தைப் பற்றிச் சொன்னார். பெருந்தலைவர் காமராஜர் இல்லை என்று சொன்னால், நான் மாடு மேய்க்கப் போயிருப்பேன் என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) பெரும்பாலானவர்களுக்கும் அந்த நிலைதான். நம் கல்விக் கண் திறந்தார். அதுமட்டுமல்ல, அவர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் மகிழுந்திலே சென்று கொண்டிருக்கிறார். செல்லுகிற வழியில் 10 வயது இளைஞன் மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறான். அவனைப் பார்த்து, 'ஏம்பா படிக்கிற வயதில் மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறாயே நீ பள்ளிக்கூடத்திற்குப் போகவில்லையா' என்று கேட்டார். அவர் முதலமைச்சர் என்று அந்தப் பையனுக்குத் தெரியாது. அவன் சொன்னான், 'மாடு மேய்க்கவில்லை என்றால் சோறு வேண்டுமே, சோற்றுக்கு எங்கே போவது' என்று கேட்டான். அதைக் கேட்ட பெருந்தலைவர் கர்மவீரர் அவர்கள்



2006 மே 30] [திரு. ஜி.கே. மணி]

உடனடியாகப் பள்ளிக்கூடங்களில் மதிய உணவைக் கொண்டு வந்தார்கள். ஆகவே, மதிய உணவு வழங்கிய காமராஜருடைய வாரிசாக சத்துணவில் இரண்டு முட்டைகளைக் குழந்தைகளுக்கு வழங்கக்கூடிய மகத்தான அறிவிப்பை மாண்புநிறை தலைவர் அவர்கள் வழங்கியிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். அப்படிப்பட்ட அந்தக் கல்விக் கண் திறந்த காமராஜர் அவர்கள் பிறந்த தினத்தைக் கல்வி தினமாக அறிவித்திருக்கிறீர்கள். வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்.

*முற்பகல் 10–30*

அதேவேளையில், தந்தை பெரியார் பிறந்த தினம், மிக முக்கியமான தினம். அதை நான் தொடர்ந்து சட்டமன்றத்தில் சொல்லிக்கொண்டே இருக்கிறேன், கடந்த ஆட்சிக் காலத்திலேயிருந்து. ஆகவே, தந்தை பெரியார் பிறந்த தினமான செப்டெம்பர் 17—ஐ சமூக நீதி தினமாக தாங்கள் அறிவிக்க வேண்டுமென்ற பணிவான கோரிக்கையைத் தங்கள் முன்னாலே வைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதுதான் சமூக நீதியைப் பற்றிய விழிப்புணர்வு நாடு முழுவதும் ஏற்படும். அதை நீங்கள் செய்ய வேண்டும்.

அதே நேரத்தில், சாதீயக் கொடுமைகள் அகல, ஏற்றத்தாழ்வுகள் மாற, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பிறந்த தினமான ஏப்ரல் 14—ஐ சமுதாய நல்லிணக்க தினமாக இன்று அறிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட புரட்சிகரத் திட்டங்களை, அறிவிப்புகளை வெளியிடுவதற்கு வேறு யாராலும் முடியாது. ஆகவே, நீங்கள் அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நான் உரையை முடித்துவிடுகிறேன். சீக்கிரம் உரையை முடித்துவிடுகிறேன்.

அப்புறம், இந்த வட மாவட்டங்களைப் பார்த்தீர்கள் என்றால், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலெல்லாம் மிகக் கடுமையான வறட்சி. சேலம் மாவட்டத்திலும் அதே நிலைமைதான். ஆனால், சேலம் மாவட்டத்தில் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் ஏறக்குறைய 200 கோடி ரூபாய்க்கு மேலே செலவிட்டு, காவிரி குடிநீர்த் திட்டத்தை

வழங்கிய மகத்தான அரசு, கடந்தகால தி.மு.க. அரசு என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சிக் காலத்திலே சேலம் மாவட்டம் பரவலாக காவிரி குடிநீர் பெற்றது. ஆனால், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் போன்ற மாவட்டங்கள் வறட்சியிலே இருக்கின்றன, மீள முடியாமல் இருக்கின்றன. ஆகவே, ஒகேனக்கல் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிலுவையிலே இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள்தான் அன்றைக்கு அறிவித்தீர்கள். அன்றுகூட நான் உறுப்பினராக இருந்த நேரத்தில் எங்களுடைய வேண்டுகோளை ஏற்று காரிமங்கலம் அரசு விழாவிலே அறிவித்தீர்கள். முதல்கட்ட நிதியை ஒதுக்கினீர்கள். அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. கோ.சி. மணி அவர்கள் கலந்துகொண்டு முதல்கட்டப் பணியைத் தொடங்கினார்கள். மாவட்ட மக்கள் எல்லாம் ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தார்கள். அதைத் தொடர்ந்து, போக்ரான் குண்டு வெடிப்பு. நிதி நிறுத்தப்பட்டது. திட்டம் கைவிடப்பட்டது. எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலே மனிதச் சங்கிலிப் போராட்டமென்று, நிறைய போராட்டங்களைப் பண்ணினார்கள், ஆனால் நடக்கவில்லை. ஆகவே, அந்தக் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய 3 மாவட்டங்கள் பயன்பெறக்கூடிய ஒகேனக்கல் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேமாதிரி, ஒகேனக்கல்லிலே குறைந்த செலவிலே நிறைவாக நீர் மின் உற்பத்தி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது ஒரு மத்திய அரசுத் திட்டம். நிலுவையிலே இருக்கிறது. நான்கூட முன்னாள் மின்சாரத் துறை அமைச்சராக மத்திய அமைச்சரவையில் இருந்த திரு. பி.எம். சயீத் அவர்களை—அவர், தமிழ் பேசக்கூடியவர்—பலமுறை போய் நேரிலே பார்த்தேன். திட்டம் இருக்கிறது என்று சொன்னார். அதிகாரிகளை எல்லாம் அனுப்பினார்கள், ஆய்வு பண்ணினார்கள். ஆனால், அந்த அரசு கண்டுகொள்ளவில்லை. அதிலே 1,100—க்கும் மேற்பட்ட மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு ஒகேனக்கல், பெலிகுண்டு, மேகத்தாட்டு, சிவசமுத்திரம் ஆகிய 4 இடங்களிலே இருக்கிறது. இது இரண்டு மாநிலப் பிரச்சினையாக இருந்தாலும்கூட, இதை யாராலும் செய்ய முடியாது, கர்நாடகம், தமிழ்நாடு இரண்டு மாநிலங்களுக்கு உட்பட்ட பிரச்சினை. மத்திய அரசு கலையிடக்கூடிய பிரச்சினை. மத்திய அரசுத் திட்டம். இதை



நிறைவேற்றக்கூடிய பொற்காலம் இது, நிறைவேற்றக்கூடிய வாய்ப்புக் கிடைத்த தலைவர் நம்முடைய மாண்புநிறை முதலமைச்சர் உங்களால்தான் முடியும். உங்கள் காலத்திலே இதைச் செய்ய வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இதோ உரையை முடித்துவிடுகிறேன். அதேமாதிரி, தருமபுரி மாவட்டத்தில் பஞ்சப்பள்ளி வாய்க்கால்—பாப்பாரப்பட்டியைச் சுற்றி 16 ஏரிகள் இருக்கின்றன. அவற்றை இணைத்தோம் என்றால், 16 ஏரிகளைச் சுற்றியிருக்கிற ஊர்களெல்லாம் பயன்பெறும். அதை நீண்டகாலமாகக் கேட்டுப் பார்த்தோம், நடக்கவில்லை. ஆகவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்தான் அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நிறைய பேச வேண்டியது இருந்தாலும்கூட என்னுடைய தொகுதிப் பிரச்சினை. அதை மட்டும் பேசி சீக்கிரம் உரையை முடித்துவிடுகிறேன்.

என்னுடைய மேட்டூர் தொகுதி, மேட்டூர் அணையைக் கொண்ட ஒரு முக்கியமான நகராட்சிப் பகுதி. அது அடிப்படை வசதியே இல்லாத ஒரு நகராட்சியாக இருக்கிறது. எங்கே பார்த்தாலும் குப்பை மேடாகக் காட்சியளிக்கிறது. குப்பைக் காடாக இருக்கிறது. நகராட்சி நிர்வாகம் செயலிழந்திருக்கிறது. அ.தி.மு.க. நகர்மன்றத் தலைவர். ஆகவே, அது புத்துயிர் பெறுவதற்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பார்த்தீர்கள் என்றால் மேட்டூர் அணையிலிருந்து மாவட்டம் முழுவதும் தண்ணீர் போகிறது. ஆனால், அணையினுடைய அடிவாரத்திலே இருக்கிற மேட்டூர் நகராட்சிக்கு ஒரு மணி நேரம், 2 மணி நேரம்தான் தண்ணீர் கிடைக்கிறது. நகராட்சியினுடைய பல பகுதிகளுக்குத் தண்ணீரே செல்வதில்லை. காவிரி குடிநீர் இல்லை.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், அங்கே சுத்திகரிப்பு நிலையம் கிடையாது. வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்த அந்தப் பழைய முறைதான் இருக்கிறது. ஆகவே, ஒரு சுத்திகரிப்பு நிலையத்திற்குக்

[திரு. ஜி.கே. மணி] [2006 மே 30

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே திட்டமிடப்பட்டு நிலுவையிலே இருக்கிற 5 தொட்டிகள் கட்டுவதற்கான திட்டம், தி.மு.க. ஆட்சியிலேதான் திட்டமிடப்பட்டது. அது நிறைவேறாமல் இருக்கிறது. அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்புறம், பாதாளச் சாக்கடைத் திட்டம். அதை நிறைவேற்ற வேண்டும்.

மேட்டூர் நகராட்சியில் மகளிர் மேல்நிலைப் பள்ளியே இல்லாமல் இருக்கிறது. அங்கே மகளிர் மேல்நிலைப் பள்ளியை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, மேட்டூர் நகராட்சிக்கு வேண்டிய காரியங்களை நான் எழுத்துமூலமாகக் கொடுத்துவிடுகிறேன்.

முற்பகல் *10—3.5*

அடுத்து, நங்கவள்ளி ஒன்றியம் என்று இருக்கிறது. நெசவாளர் நிறைந்த பகுதி. விவசாயிகள் நிறைந்த பகுதி. அங்கே இந்த அனல் மின் திட்டத்தினுடைய சாம்பல் ஏரி நீர் வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது. அந்தச் சாம்பல் ஏரி நீரைச் சற்று செலவிட்டு, அதற்கு வடிகால் வெட்டி அமைத்துக் கொடுத்தால், நங்கவள்ளி ஒன்றியம் முழுவதும் பாசனம் பெறும். வீணாகச் செல்லக்கூடிய நீரை, நங்கவள்ளி ஒன்றியம் முழுவதும் பாசனத்திற்குப் பயன்பெறுவதற்கு நீங்கள் ஆவன செய்து கொடுக்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, ஜலகண்டாபுரம், கோனவாசி, நங்கவள்ளி, பி.என். பட்டி, வீரக்கல்புதூர், கொளத்தூர் ஆகிய பேரூராட்சிகள் இருக்கின்றன. அங்கேயும் குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது. நங்கவள்ளி ஒன்றியத்திலேயும், கொளத்தூர் ஒன்றியத்திலே சில ஊர்களிலேயும் காவிரி குடிநீர் இல்லாமல் இருக்கிறது. காவிரி குடிநீர் போகக்கூடிய ஊர்களிலேகூட 10 நாளைக்கு ஒருமுறை, வாரத்திற்கு ஒரு நாள்தான் காவிரி குடிநீர் கிடைக்கிறது. அது முழுமையாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கொளத்தூர் பகுதியிலே விவசாயத்தைத் தவிர, வேறு தொழில் இல்லை. அங்கே நெசவு உற்பத்திக்கு வழிவகை செய்தால், நிறைய பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். அதற்கு தொழில் முனைவோர் முன்வருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு பாலமலை என்று ஓர் ஊர் இருக்கிறது. முழுவதும் மலைவாழ் மக்கள் வாழ்கின்றார்கள்.



2006 மே 30] [திரு. ஜி.கே. மணி]

33 ஊர்கள் இருக்கின்றன. அங்கே பாதை இல்லாமல் இருக்கிறது. யாராவது நோய்வாய்ப்பட்டால்கூட, பிரசவம் என்றால்கூட, தூக்கிக் கொண்டுதான் வர வேண்டும். அப்படிப்பட்ட நிலையைப் போக்குவதற்கு, அந்த மலைப் பகுதியில் பாதை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டு, மத்திய அரசினுடைய அனுமதி பெறுவதற்கு, வனத் துறையினுடைய அனுமதி பெறாமல் இருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசு, நம்முடைய அமைச்சர் இருக்கின்ற காரணத்தினாலே, நம்முடைய தமிழக அரசு அதைப் பெற்றுத் தந்து, அந்த மலைப் பகுதிக்குப் பாதை அமைக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சாதிச் சான்றிதழ் வழங்குவதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதிலே தமிழ்நாட்டிலே பார்த்தீர்கள் என்றால், லம்பாடி என்ற ஒரு சாதி இருக்கிறது. ரொம்ப பின்தங்கிய சாதி. அதிலே லம்பாடி இனம், குறும்பர் இனம், கொண்டாரெட்டி, பக்கத்திலே கர்நாடக மாநிலத்திலே பார்த்தீர்கள் என்றால், அவர்கள் எஸ்.சி. ஆக இருக்கிறார்கள். திருமண உறவுகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, இப்படிப் பட்டவர்களுக்கு அந்த எஸ்.சி. சான்றிதழ் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய அரசு, இது கலைஞர் அரசு, தமிழக மக்கள் அரசு, நல்ல அரசு, நல்ல காரியங்கள் செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நல்ல அரசை, நல்ல முதலமைச்சரை, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும், எங்கள் நிறுவனர் மருத்துவர் அய்யா சார்பிலேயும், மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

இந்த ஆளுநர் உரை என்பது இதற்கு முன்னால் தமிழ்நாடு சட்டமன்றத்தில், இந்திய நாட்டினுடைய பிற மாநில சட்டமன்றத்தில் இதுமாதிரி உரையே இல்லை. முன்னுதாரணம் இல்லாத ஆளுநர் உரை. இது புரட்சிகரமான ஆளுநர் உரை. ஆகவே, இந்த ஆளுநர் உரையிலே உள்ள திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட இருக்கின்றன. இந்தத் திட்டங்கள் நிறைவேறினால், தமிழ்நாடு சிங்கப்பூராக உருவாகும் என்ற செய்தியைச் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய ஆளுநர் உரையை வரவேற்று, பாராட்டி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் சார். உட்காருங்கள். திரு. போளூர் வரதன், உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உறுப்பினர்

பேச ஆரம்பித்தாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் பேசப் போகிறார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் தலைவர்தான் பேசப் போகிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சட்டமன்றத்தில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது, அருமை சகோதரர் அப்பாவு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து, பல்வேறு உறுப்பினர்கள் இங்கே உரையாற்றி இருக்கின்றார்கள். அவர்களோடு சேர்ந்து காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற காங்கிரஸ் தலைவராகிய எனக்கும் பேச வாய்ப்பளித்த உங்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த பூவிருந்தவல்லி தொகுதி சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கும், என்னை வேட்பாளராக அறிவித்த காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்குப் பல்வேறு வகையிலே பாடுபட்ட நம்முடைய கூட்டணியினுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், கூட்டணிக் கட்சி தோழர்களுக்கும், என்னை இந்த அளவு உயர்த்தி, இன்று சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக ஆக்குவதற்கு பல்வேறு பணிகளை, அந்தக் காலத்திலேயிருந்து செய்த, மறைந்த மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையை நான் துவக்குகிறேன்.

*முற்பகல் 10–40*

2004 ஆம் ஆண்டு அகில இந்தியாவிலேயே குழப்பம் ஏற்பட்டு, ஒரு தேர்தல் நடைபெற்றது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அந்தத் தேர்தல்மூலமாக இந்த நாட்டிலே ஒரு நல்லாட்சி அமைய வேண்டும், மக்களாட்சி மலர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு அன்னை சோனியா காந்தி அவர்கள், தமிழகத்திலே டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே ஒரு கூட்டணியை ஏற்படுத்தினார்கள். ஏழு கட்சிக் கூட்டணி அன்று இருந்தது. அந்த ஏழு கட்சிக் கூட்டணியிலே நாம் நின்று, பாண்டிச்சேரி உட்பட 40 இடங்களிலும் நம்முடைய கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றது. கூட்டணி அமைந்தவுடனே, இந்தக் கூட்டணி வெற்றிபெறுமேயானால், இந்த நாட்டிற்கு யார் பிரதமர் என்று அறிவிக்கின்ற ஒரு நிலை ஏற்பட்டபோது, காஷ்மீரத்திலேயிருந்து கன்னியாகுமரி வரையிலும் இருக்கின்ற மக்கள்,



மணிப்பூரிலேயிருந்து ஜெய்சல்மீர்வரை பரந்து விரிந்திருக்கின்ற இந்த பாரத தேசத்திலே இருக்கின்ற பல்வேறு தலைவர்கள், யார் பிரதமர் என்று அறிவிக்காத நிலையில், அன்றைக்கு தமிழகத்தினுடைய ஒப்புயர்வற்ற தலைவர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள்தான் இந்தக் கூட்டணி வெற்றிபெறுமேயானால் இந்த நாட்டிற்குத் தலைமை தாங்குகின்ற, பிரதமர் பதவி வகிக்கின்ற பொறுப்பு, தகுதி அன்னை சோனியா காந்தி அவர்களுக்குத்தான் உண்டு என்று அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பின்னாலே அன்னை சோனியா காந்திதான் இந்த நாட்டிற்குப் பிரதமர் என்று அறிவித்த உடனே, தேர்ந்தெடுக்கப்பட்ட உடனே பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன என்பதையும், அதற்குப் பின்னாலே டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் பிரதமர் பதவியை ஏற்றார்கள் என்பதையும் இந்த நாடு அறியும். அன்னை சோனியா காந்தி அவர்கள் பிரதமராக வரக்கூடாது என்று கன்னியாகுமரியிலேயிருந்து காஷ்மீர் வரை இருந்த எதிர்க்கட்சிகள், அன்று அன்னை சோனியா காந்தியைப் பார்த்து என்ன சொன்னார்கள்? தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் வெளிநாட்டுக்காரர் என்று சொன்னார்கள், பதிபக்தி இல்லாதவர் என்று சொன்னார்கள். இந்த நாட்டை ஆள்வதற்குத் தகுதி இல்லாதவர்கள் என்று சொன்னார்கள். அதேபோன்று மத்திய பிரதேசத்தினுடைய அப்போதைய முதலமைச்சர் உமா பாரதி அவர்கள் சொன்னார்கள், சோனியா காந்தி அவர்கள் பிரதமர் பொறுப்பை ஏற்பாரேயானால் நான் என்னுடைய பதவியை ராஜினாமா செய்வேன் என்று சொன்னார்கள். இன்னொரு அம்மையார் என்ன சொன்னார்கள்? சுஷ்மா சுவராஜ் அவர்கள் நான் மொட்டையடித்துக்கொள்வேன் என்று சொன்னார்கள். ஆனால், எல்லாவற்றையும் கடந்து நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நாட்டை ஆளக்கூடிய சக்தி, திறமை அன்னை சோனியா காந்திக்குத்தான் உண்டு என்று திரும்பவும் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, டெல்லியிலே சில நாட்கள் தங்கியிருந்து அமைச்சரவை அமைப்பதற்குப் பல்வேறு வழிவகைகளிலே உதவி செய்தார்கள். அதற்காக காங்கிரஸ் கட்சி அவரை மனமார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, இன்றைக்கு அந்த அமைச்சரவை அமைத்த பின்னாலே இந்த நாட்டிற்கு

13 அமைச்சர்களை தமிழகம் பெற்றுத் தந்தது. 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தந்த காரணத்தினாலேதான், அங்கே அன்னை சோனியா காந்தியினுடைய வழிகாட்டுதலின்பேரிலே, டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலே ஒரு நல்லாட்சி ஏற்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். அங்கே தமிழகத்தைச் சேர்ந்த 13 அமைச்சர்கள் இருக்கின்ற காரணத்தாலேதான் இன்றைக்குத் தமிழகத்திலே பல்வேறு சிறப்பான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன; நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே சில பணிகளை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். சுதந்திர இந்தியாவின் சரித்திரத்திலே தமிழகத்தினுடைய நலனை மிக அதிகமாகப் பேணுகின்ற ஓர் அரசு மத்தியில் அமைந்திருக்கின்றது. நிதி, தொலைதொடர்பு, தகவல் தொழில்நுட்பம், சாலைப் போக்குவரத்து, துறைமுக வசதி, உள் துறை, திட்ட அமலாக்கத் துறை, ஜவுளித் துறை, பஞ்சாயத்து ராஜ், இளைஞர் நலத் துறை, இரயில்வே, மக்கள் நல்வாழ்வு, சுற்றுச்சூழல் போன்ற மிக முக்கியமான துறைகள் அனைத்தும் தமிழகத்தைச் சேர்ந்த நம்முடைய 13 அமைச்சர்கள் கையிலே இருக்கின்றன என்று சொன்னால், அதற்கு முக்கியக் காரணம் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–45*

விடுதலை அடைந்த நாளிலிருந்து நாம் மத்திய அரசைக் கேட்டுவந்த தமிழைச் செம்மொழியாக்கும் திட்டத்தை கலைஞர் அவர்கள் கேட்டதும், நம்முடைய அன்னை சோனியா காந்தி அவர்களும், மன்மோகன் சிங் அவர்களும் ஒத்துக்கொண்டு, தமிழைச் செம்மொழியாக அறிவித்ததை நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலேகூட சேது சமுத்திரத் திட்டம் வர வேண்டும், வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஒவ்வொரு தேர்தல் அறிக்கையிலேயும் சொல்வார்கள். 2006 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே இல்லை. ஆனால், அதற்கு முன்னாலே வந்த தேர்தல் அறிக்கைகளில் எல்லாம் சேது சமுத்திரத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று அறிக்கை கொடுப்பார்கள். ஆனால், கலைஞர் அவர்களுடைய பெருமுயற்சியின் காரணமாக சுமார் 2,500 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அந்த சேது சமுத்திரத் திட்டம் வந்தவுடனே இவர்கள் கேட்டு அவர்கள் கொடுப்பதா? நான் கேட்டபோதெல்லாம் கொடுக்காமல், கலைஞர் கேட்கிறார், அதனாலே மத்திய அரசு



கொடுக்கிறதே என்ற வயிற்றெரிச்சலின் காரணமாக, அந்த சேது சமுத்திரத் திட்டத்திற்கு பல்வேறு இடையூறுகள் கொடுத்ததை நீங்கள் நன்றாக அறிவீர்கள். நீதிமன்றத்திற்குச் சென்றார்கள், இன்னும் பல்வேறுபட்ட துன்பங்களையெல்லாம் கொடுத்த பின்னாலும்கூட, மதுரையிலே சிறப்பாக அந்த சேது சமுத்திரத் திட்டப் பணியைத் துவக்குகின்ற நிகழ்ச்சிக்கு பிரதமர் அவர்கள் வந்தார்கள்; அன்னை சோனியா காந்தி அவர்கள் வந்தார்கள்; நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களும் கலந்துகொண்டார்கள். மூவரும் ஒரு காரிலே ஏறி மதுரை மாநகர் முழுவதும் சுற்றிவந்து, அந்தத் தெருக்களிலேயிருந்த மக்களையெல்லாம் சந்தித்து அவர்களையெல்லாம் பார்த்து, அதற்குப் பின்னாலே அங்கே உரை நிகழ்த்தினார்கள். ஆனால், அதைப் பொறுக்கமுடியாதவர்கள் என்ன சொன்னார்கள்? மதுராந்தகத்திலே ஒரு விழா என்று சொன்னால், ஆலந்தூரிலே ஒரு விழா என்று சொன்னால் அல்லது ஆவடியிலே ஒரு விழா என்று சொன்னால், கோட்டையிலே இருந்து ஒரு பொத்தானை அமுக்கி, அந்த விழாவைத் திறக்க வைக்கச் செய்து வந்த அன்றைய அரசு, மதுரையிலே எப்படி விழா நடத்தலாம் என்ற வயிற்றெரிச்சலின் காரணமாகச் சொன்னார்கள். அது தூத்துக்குடியிலே நடைபெற்றிருக்க வேண்டும்; கன்னியாகுமரியிலே நடைபெற்றிருக்க வேண்டும் என்றெல்லாம் இந்த வயிற்றெரிச்சலின் காரணமாக அன்றைக்கு இருந்த அரசு இந்த மத்திய அரசைக் குறை கூறியது. அதேபோன்று பல்வேறுபட்ட பிரச்சினைகள்.

இன்றைக்குத் தமிழகம் முழுவதும் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவிலே நான்கு வழிப் பாதைகள் போடப்படுகின்றன என்று சொன்னால், அது யாருடைய முயற்சி என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். தூத்துக்குடி, சென்னை, எண்ணூர் ஆகிய துறைமுகங்கள் மத்திய அரசினுடைய புதிய முதலீட்டைப் பெற்று, இந்தியாவின் முன்னணித் துறைமுகங்களாகச் செயல்படக்கூடிய வகையிலே, பணிகள் நடைபெற்று வருகின்றன என்று சொன்னால் அது 40 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமிழகம் தந்ததினுடைய பயன்தான் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

அதுமட்டுமல்ல. சேலத்திலே உருட்டாலை, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் முதலீட்டைப் பெற்று, புதிய இலக்கை நோக்கி பயணம் செய்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். நெய்வேலி அனல் மின்சார நிலையம், பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவிலே விரிவாக்கப்பட்டிருக்கிறது.

[திரு. டி. சுதர்சனம்] [2006 மே 30

சென்னைக்குக் குடிநீர். கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு 1,000 கோடி ரூபாய் அறிவித்துள்ளது. இந்தியாவிலே நடக்கும் ஒட்டுமொத்த மீட்டர் கேஜ் இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றும் திட்டங்களில் மூன்றில் இரண்டு பங்கினை தமிழகம் பெற்று பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று சொன்னால், அது 40 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமிழகம் தந்த பயன்.

அன்னை சோனியா காந்தியினுடைய அரசியல் தலைமை, பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுடைய நிருவாகத் திறமை ஆகியவை ஒருங்கிணைந்து, இந்தியாவின் பாராளுமன்ற ஜனநாயகத்தைப் புதிய சிகரங்களுக்கு அழைத்துச் செல்கின்றன. தமிழகத்தின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, சேலத்திலே புதிய இரயில்வே கோட்டத்தை மத்திய அரசு உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஏழையெளிய மாணவர்களும் தொழில் மற்றும் பட்ட மேற்படிப்புக்கு அரசு வங்கிகளின்மூலம் எளிதான கடன் உதவி, ஆயிரக்கணக்கில் வழங்கப்படுகின்றன. மகளிர் முன்னேற்றம் உறுதி செய்யப்பட்டு, மகளிர் முன்னேற்றத்திற்கான அடிப்படைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இத்தனை செயல்களும் இந்த இரண்டு ஆண்டு காலத்திலே நடைபெற்றிருக்கின்றன என்று சொன்னால், அதற்கு என்ன காரணம்?

*முற்பகல் 10—50*

தமிழகத்திலே 7 கட்சி கூட்டணி டாக்டர் கலைஞருடைய தலைமையிலே அமைத்து, அதிலே வெற்றிக் கனியை ஈட்டியதன் பயனாகத்தான் இந்த பல்வேறு நலத் திட்டங்கள் மத்திய அரசாலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது, நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. அதற்கு மூலகாரணம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நாம் அனைவரும் ஒத்துக்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று 2006 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வந்தது, 7 கட்சிக் கூட்டணி 6 கட்சியாக மாறியது. ஒரு கட்சி நம்மை விட்டுப் போய் விட்டது, அந்தக் கட்சி போனதற்கு பல்வேறு காரணங்கள். அதைப்பற்றி விவரமாகவும், விளக்கமாகவும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. மேடையிலும் நிறைய பேர் பேசிவிட்டார்கள். அந்தக் கட்சி போனதினாலே நமக்கு ஒன்றும் கவலையும் இல்லை. போனதினாலே அவர்களுக்குத்தான் கவலையே தவிர நமக்குக்



2006 மே 30] [திரு. டி. சுதர்சனம்]

கவலையில்லை. ஆனால், இந்தத் தேர்தலிலே பண பலம், அதிகார பலம், அத்தனையும் உபயோகித்து இந்த நாட்டிலே எவ்வளவு அக்கிரமங்களைச் செய்ய முடியுமோ, அராஜகங்களைச் செய்ய முடியுமோ அத்தனையும் செய்து பார்த்தார்கள். ஆனால், அவர்களுக்கு தோல்விதான் கிடைத்தது. தோல்வியை அவர்களாலே தாங்கிக்கொள்ள முடியவில்லை — தாங்கிக்கொள்ள முடியாத காரணத்தினால் — சட்டமன்றம் கூடுகிறது, கவர்னர் உரை இங்கே நிகழ்த்தப்படுகிறது. சட்டமன்றத்திற்கு உள்ளே வருகிறார்கள், 8 ஆம் தேதி தேர்தல், 11 ஆம் தேதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்கள். ஏற்றுக்கொண்ட ஒரு வார காலத்திற்குள்ளாக கவர்னர் உரை இங்கே வாசிக்கப்படுகிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வந்தார்கள். என்ன பேசினார்கள்? கூட்டுறவுக் கடன்கள் இரத்து செய்யவில்லையென்று சொன்னார்கள். 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். இன்னும் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொல்லி, கவர்னர் உரையைப்பற்றித் தெரிந்து கொள்ளாமலே, கண் இருந்தும் குருடர்களாய், காது இருந்தும் செவிடர்களாய், (மேசையைத் தட்டும் ஒலி) வாய் இருந்தும் ஊமைகளாகக் காட்சி அளித்த அந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் எதையோ பேசிவிட்டு இந்த அவையை விட்டு வெளிநடப்புச் செய்தார்கள். அவர்களுக்கு தங்களுடைய தோல்வியைத் தாங்கிக்கொள்கின்ற மனப் பக்குவம் இல்லை.

எந்த அரசு ஏற்பட்டாலும், 1967–லே காங்கிரஸ் கட்சி ஆட்சி போய், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தது. ஆட்சி வந்த உடனே அன்றைக்குச் சட்டமன்றம் கூடியது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அன்றைக்கு அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்தார்கள். பத்திரிகையாளர்கள் எல்லாம் போய் அவரைப் பார்த்து கேட்டார்கள். இந்த ஆட்சியைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டார்கள். ஆனால், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பெருந்தன்மையோடு இப்போதுதான் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள், 6 மாத காலம் பொறுங்கள், அவர்கள் நிர்வாகத் திறமை எப்படி இருக்கிறது என்று அந்த ஆட்சியைப்பற்றிப் பேசுவதற்கு 6 மாத காலம் அவகாசம் கொடுங்கள் என்று கேட்டார்கள். 6 மாத காலத்திற்குப் பின்னால்தான் இந்த ஆட்சியைப்பற்றி விமர்சனம் செய்ய முடியுமென்று சொன்னார்கள். ஆனால், வயிற்றெரிச்சல் கொண்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் இன்றைக்கு கவர்னர் உரையிலே என்ன இருக்கிறது என்று அவர்களாலே தெரிந்துகொள்ள முடியாத நிலையில் உடனே

[திரு. டி. சுதர்சனம்] [2006 மே 30

நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்லி வெளிநடப்புச் செய்தார்கள்.

கவர்னர் உரையிலே கலைஞர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற உடனே மூன்று கோப்புகளிலே கையெழுத்திட்டார்கள். அதைக்கூட அவர்கள் பெரிதாக நினைக்கவில்லை. அவர்களுடைய எண்ணம் எல்லாம் இந்த ஆட்சியை எப்படி விமர்சிப்பது, இந்த ஆட்சிக்கு எப்படி தொல்லை கொடுப்பது என்றுதான் முதல் நாளிலே எண்ணினார்கள். கவர்னர் உரையிலே சிறப்பான அம்சங்கள் இருந்தன. விவசாயிகள் படுகின்ற துன்பத்தை நீக்குவதற்கு அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு நல்ல விலை கொடுப்பதற்கு, பெறுவதற்கு மீண்டும் உழவர் சந்தையை இந்த கவர்னர் உரையிலே கொண்டு வந்திருக்கிறார்கள். விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டம், ஒரு கட்டத்திலே அது திரும்பப் பெறுகின்ற ஒரு நிலை ஏற்பட்டு, இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அருமைச் சகோதரர் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் அதற்காக மிகப் பெரிய ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் இந்தச் சட்டமன்றத்திலே நடத்தியதன் பயனாகத்தான் இங்கே ஏழை விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணம், மீண்டும் நாங்கள் கொடுப்பது போன்று மணி ஆர்டரிலேதான் கொடுப்போம், திரும்பவும் நீங்கள் கட்டிக் கொள்ளுங்கள் என்று அவர்கள் சொன்னார்கள். இந்த மன்றத்தின் குறிப்புகளிலே இருக்கிறது. ஆனால், அந்த இலவச மின்சாரத்தை இன்றைக்கு உறுதிப்படுத்துகிறோம் என்று நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். விவசாயிகளுடைய நன்மையைக் காக்கின்ற ஒரு அரசாக இது அமைந்திருக்கிறது.

அதேபோன்று, பனைத் தொழிலாளர்களுக்கு நல வாரியம். சத்துணவிலே திங்கள், புதன்கிழமை தோறும் முட்டை. மாற்றாரையும் மதிக்கின்ற பண்பு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இருக்கிறது என்ற காரணத்தினால்தான், எந்த உமாபாரதி அவர்கள் அன்னை சோனியா காந்தி பதவி ஏற்றால் நான் பதவி விலகிவிடுவேன் என்று சொன்னாரோ, அந்த உமாபாரதி அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று வெள்ளிக்கிழமைக்குப் பதில் புதன்கிழமை முட்டை போட்டிருக்கிறார்கள். அதனாலே கலைஞர் அவர்கள் மாற்றாரையும், எதிர்க்கட்சியினரையும் மதிக்கின்ற பண்பு மிக்கவர் என்பதை இதன்மூலம் நீங்கள் அறிந்துகொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, மத



2006 மே 30] [திரு. டி. சுதர்சனம்]

மாற்றத் தடை நீக்கச் சட்டத்தை இன்றைக்குச் சட்டபூர்வமாகக் கொண்டு வர இருக்கின்றார்கள்.

முற்பகல் 10—55

மாணவர்கள் நுழைவுத் தேர்வு இரத்து என்று சொல்லி இருக்கின்றார்கள். படிக்கிறார்கள் மாணவர்கள். படிக்கின்ற மாணவர்கள் பாடத்தைப் படித்து அதன் பின்னாலே நுழைவுத் தேர்வு எழுதுகிறார்கள். நுழைவுத் தேர்வு எழுதுகின்றபோது, சென்னை போன்ற நகர்ப்புறங்களிலே இருக்கின்ற மாணவர்கள் அந்த நுழைவுத் தேர்வை நன்றாக எழுதிவிடுவார்கள். கிராமப்புறங்களிலே இருக்கின்ற மாணவர்கள் அந்த நுழைவுத் தேர்வை எழுதுவதற்கு அவர்களுக்கு பொது அறிவு இல்லாத காரணத்தினாலே நுழைவுத் தேர்விலே மதிப்பெண் பெற முடியவில்லை. அந்த மதிப்பெண் பெற முடியாத ஒரு நிலை ஏற்படுகின்றபோதுதான் அந்த மாணவர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள், பின்னாலே தள்ளப்படுகிறார்கள். நான் ஒரே ஒரு சிறு உதாரணத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு திருநின்றவூருக்குப் பக்கத்திலே இருக்கின்ற பாக்கம் என்ற ஒரு சிறிய கிராமம். அந்தக் கிராமத்திலேயிருந்து படித்துவந்த மாணவன் விஞ்ஞானப் பாடத்திலே, அதாவது Physics என்று சொல்லப்படுகின்ற பாடத்திலே, 100-க்கு 98 மார்க், 200-க்கு 196 மார்க் எடுத்திருந்தான். Chemistry-லே 100—க்கு 97 மார்க் எடுத்திருந்தான், Maths-லே 100—க்கு 95 மார்க் எடுத்திருந்தான். ஆனால், நுழைவுத் தேர்விலே அவன் பெற்றிருக்கின்ற மார்க் சாதாரணமான, வெறும் 27 மார்க்தான் பெற்றான். ஏனென்றால், பொது அறிவு கிடையாது. கிராமத்திலே பயிலும் மாணவர்களுக்கு அவ்வளவாக பொது அறிவு கிடையாது. ஆனால், கேட்கப்படுகின்ற கேள்விகள் எல்லாம் பொது அறிவுடைய கேள்விகள். அந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்வதன் மூலமாக இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய மாணவர்கள், சமுதாயத்திலே பின்தங்கிய பலவீனமான வாழ்க்கைத் தரத்தைக் கொண்டிருக்கின்ற மாணவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற வகையிலே இந்த கவர்னர் உரையிலே இதனை நீங்கள் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அதற்காக நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பின்தங்கிய பகுதிகளிலே தொழில்கள் தொடங்க மானியம் கொடுக்கப்படும் என்று சொல்லி இருக்கின்றீர்கள். மருத்துவமனைகளிலே

[திரு. டி. சுதர்சனம்] [2006 மே 30

காலி இடங்கள் நிரப்பப்படும் என்று சொல்லி இருக்கின்றீர்கள். கிராமப்புறங்களிலே சோடியம் விளக்குகள் அமைக்க திட்டம் தயாரித்துக் கொடுத்திருக்கிறீர்கள். சென்னையிலே மெட்ரோ இரயில் திட்டம், அனைத்து நகராட்சிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டம், சென்னையிலே கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், மீண்டும் மினி பஸ் விடப்படும், அரசு ஊழியர்களுக்கு எதிரான டெஸ்மா சட்டம் இரத்து நேற்று இங்கே சட்டமாக வந்திருக்கிறது, அரசுப் பணியிலே சேர வயது வரம்பு நீட்டிப்பு, ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு 15,000 நிதி உதவி, இளைஞர் சுய உதவிக் குழு அமைக்கப்படும், சட்டமன்ற மேலவை மீண்டும் கொண்டு வரப்படும், ஆறுகள், வாய்க்கால்கள் தூர்வாரப்படும் என்றெல்லாம் இந்த கவர்னர் அறிக்கையிலே சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

இந்த கவர்னர் உரையில், கவர்னர் அறிவித்த அறிவிப்புகளைக் கேட்டுக்கொள்ள முடியாதவர்கள் வெளியே சென்று விட்டார்கள். அதுவும் பரவாயில்லை. வெளியே சென்றதோடு மட்டும் நின்றுவிடாமல், இங்கேயிருந்து ஒரே கூச்சலும், குழப்பமும் விளைவித்து, பின்னாலே வெளியே சென்று பத்திரிகையாளர்களுக்கு எல்லாம் பேட்டி கொடுத்தார்கள். அது ஜனநாயக முறை, நான் அதைப்பற்றிப் பேச விரும்பவில்லை. மறு நாள் சட்டமன்றத்திற்கு வருகிறார்கள். சட்டமன்றத்திற்கு வந்தவுடனே இங்கே பேசுகின்றபோது அருமைச் சகோதரர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், 1,000 கோடி ரூபாய் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்குக் கொடுத்தோமே, அதை உபயோகப்படுத்தவில்லை என்று சொன்னார்கள். உடனே இங்கே இருந்த ஒருவர், பக்கத்திலே இருந்த முன்னாள் அமைச்சரை அழைத்து நீங்கள் பேசுங்கள் என்று சொல்ல, அவர் இதைப்பற்றி 5 கோடி மட்டும்தான் கொடுத்தார்கள் என்று சொல்ல, அதற்குப் பின்னாலே வீராணம் திட்டம் வந்திருக்கிறது என்று அவர் சொல்ல, இப்படி கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கின்றபோதே, இங்கே இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் மேஜையின் மீது ஏறி நின்றார்கள். இந்தச் சட்டமன்றத்திலே 6 கோடி மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத்தான் 234 சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கின்றார்கள். ஐந்து ஆண்டு காலம் அமைச்சர் பொறுப்பிலே இருந்தார்கள். சட்டமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் அங்கேயிருந்து, அமைச்சர்களாக இருந்தவர்கள் மேஜையின்மீது ஏறி, நாற்காலியின் மீது ஏறி, காங்கிரஸ் கட்சி



2006 மே 30] [திரு. டி. சுதர்சனம்]

உறுப்பினர்களைத் தாக்கி இருக்கிறார்கள், தாக்கினார்கள். அதையும் இங்கேயிருக்கின்ற நீங்கள் அத்தனை பேரும் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். தாக்கப்பட்டவர்கள் காங்கிரஸ் கட்சிக்காரர்கள். ஏன் தாக்கப்படுகிறார்கள் என்று புரியவில்லை. நாங்கள் எதிர்க்கட்சியிலே இருந்தோம்; அப்போதும் இங்கே அடி வாங்கினோம். (மேசையைத் தட்டும் ஒலி) அருமைச் சகோதரர் திரு. ஞானசேகரன் அவர்கள் அன்றைக்குக் கைது செய்யப்பட்டு, இதே கோட்டை சிறையிலே, கோட்டை போலீஸ் ஸ்டேஷனிலே அடைக்கப்பட்டார்கள். அருமைச் சகோதரர் பரிதி இளம்வழுதி தாக்கப்பட்டு, இங்கே கைது செய்யப்பட்டு சிறையிலே இருந்தார்கள். நாங்கள் ஆளுங்கட்சிக்குத் தோழமைக் கட்சியாக இன்றைக்கு இருக்கிறோம். இப்போதும் நாங்கள் அடிவாங்க வேண்டுமா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். *(சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் *11—00*

காங்கிரஸ் கட்சி வெள்ளைக்காரனை எதிர்த்தே போராடியது. சுதந்திர இந்தியாவிலும் நாங்கள் அடி வாங்கவேண்டுமா என்பதை நீங்களும், இந்த நாட்டு மக்களும் உணரவேண்டும். இந்த மன்றத்திலே 234 உறுப்பினர்களைக் காக்கவேண்டிய பொறுப்பு நம்முடைய சபாநாயகர் அவர்களுக்கு உண்டு. சபாநாயகர் அவர்களே, எங்களுக்கு என்ன பாதுகாப்பு கொடுக்கப் போகிறீர்கள் என்பதை நீங்கள் தெரிவிக்கவேண்டும். ஏனென்று சொன்னால், அன்றைக்கு மூன்று தினங்களிலே, எப்படி அமைச்சர்கள் அடிக்கடி மாறினார்களோ, அதைப்போன்று எதிர்க்கட்சித் தலைவரும் மாறியிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (சிரிப்பு)* திரும்பவும் வருவார்கள்; வந்து காங்கிரஸ்காரர்கள்மீது அவர்களுக்கு என்ன கோபமோ தெரியவில்லை, எங்களைத் திரும்பவும் அடிக்க வருவார்கள். *(சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)* நீங்கள் எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று ஒரு பணிவான வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, கவர்னர் உரையிலே மிகச் சிறப்பான — ஏனென்று சொன்னால், பல்வேறுபட்ட நண்பர்கள் இந்த உரையைப் பற்றி விவரமாகவும், விளக்கமாகவும் பேசியிருக்கின்றார்கள். திரும்பவும் அதையே பேசி நான் என்னுடைய காலத்தை வீணடிக்க விரும்பவில்லை. இந்த கவர்னர் உரை ஒரு சிறப்பான உரை. என்னிடம் அன்றைக்குக்கூட

[திரு. டி. சுதர்சனம்] [2006 மே 30

பத்திரிகையாளர்கள் கேட்டார்கள்; 'இந்த கவர்னர் உரையைப் பற்றி நீங்கள் என்ன கருத்து தெரிவிக்கிறீர்கள்' என்று கேட்டார்கள். நான் சொன்னேன்; "தேனிலே ஊற வைத்த பலாப்பழச்சுளை போன்று இருக்கிறது" என்று சொன்னேன். அதேபோன்று திரும்பவும் சொல்கிறேன், இந்த கவர்னர் உரை "தேனிலே ஊற வைத்த பலாச்சுளை" என்று சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதையே பேசி திரும்பவும் நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. இன்றைக்குச் சென்னை மாநகரத்திலே கட்டடத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சிமெண்ட் விலை அதிகமாக ஏறியிருக்கிறது, இரும்பு விலை அதிகமாக ஏறியிருக்கிறது, ஆயிரக்கணக்கான கட்டடத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பில்லாமல் இன்றைக்குத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து மணல் கொள்ளை. மணல் விலை ஏறுகிறது என்று சொன்னார்கள். அது கொள்ளையடிக்கப்படுகிறது என்றும் சொன்னார்கள். இன்னும் ஒரு வார காலத்திற்குள்ளாக அது சீர்செய்யப்படும் என்று நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கும் இருக்கிறது. அதனால் திரு. ஞானசேகரன் அவர்கள் மணல் கொள்ளையைப்பற்றிப் பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு) இன்றைக்குச் சிமெண்ட் விலையும், கம்பி விலையும் அதிகமான அளவில் உயர்ந்திருக்கிற காரணத்தினால், கட்டடத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உடனடியாக சிமெண்ட் தயாரிக்கின்ற அத்தனை நிர்வாகிகளையும் அழைத்துப் பேசி, இரும்பு தயாரிக்கின்ற கம்பெனிக்காரர்களையும் அழைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி, இந்த இரும்பு விலையைக் குறைப்பதற்கும், சிமெண்ட் விலையைக் குறைப்பதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிட்டால், வெளிநாட்டில் 70 ரூபாய், 80 ரூபாய்க்குச் சிமெண்ட் விற்கிறது என்பதால், அதை இறக்குமதி செய்வதற்கு நீங்கள் அனுமதி பெற்று, இங்கே குறைந்த விலையிலே சிமெண்ட்டைக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, ஆண்டொன்றுக்கு 75 ஆயிரம் பொறியியல் வல்லுநர்கள் வெளியில் வந்து கொண்டிருக்கிறார்கள்; மருத்துவர்கள் வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள்; பி.ஏ., பி.எஸ்சி.,



2006 மே 30] [திரு. டி. சுதர்சனம்]

எம்.ஏ., எம்.எஸ்சி., படித்துவிட்டு பல்வேறுபட்ட மாணவர்கள் வெளியே வருகிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டியது ஒரு அரசினுடைய கடமை. வேலைவாய்ப்பைக் கொடுப்பது அரசினுடைய கடமையாக இருந்தாலும் சரி, இங்கேயிருக்கின்ற பல்கலைக்கழகங்கள், —நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் இங்கே அமர்ந்திருக்கிறார். பொறியியல் வல்லுநர்கள் படிக்கின்ற அண்ணா பல்கலைக்கழகம் இன்றைக்கு 250 கல்லூரிகளைக் கொண்ட ஒரு பல்கலைக்கழகம். அந்த 250 கல்லூரிகளுடைய நிர்வாகத்தை இந்த அண்ணா பல்கலைக்கழகம் செய்ய முடிகிறதா? ஆராய்ச்சி மாணவர்களை உருவாக்க முடிகிறதா?

முற்பகல் 11—05

அண்ணா பல்கலைக்கழகம் தன்னுடைய வழியைவிட்டு, இந்த மாணவர்களை நிர்வகிக்கின்ற பொறுப்பு ஏற்கின்ற காரணத்தினால், அண்ணா பல்கலைக்கழகத்தைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். கர்நாடக மாநிலத்திலே Technical University துவக்கப்பட்டிருக்கிறது. ஆந்திர மாநிலத்திலே Technical University துவக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அண்ணா பல்கலைக்கழகத்திலே இரு பணிகள் செய்வது மிகவும் கடினமாக இருக்கின்ற காரணத்தினால், நீங்கள் ஒரு Technical University-யைத் துவக்குங்கள். இல்லாவிட்டால் அண்ணா பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரித்து, அண்ணா பல்கலைக்கழகத்திலே இருக்கின்ற— Research and Development ஒன்றாகவும், ஒருபக்கமும், கல்லூரிகளின் பணிகளைச் செய்வதற்கு மற்றொன்றாகவும், இரண்டு பகுதிகளாகப் பிரித்து, நீங்கள் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளை நான் வைப்பதற்கு விரும்புகிறேன். இதற்கு முன்னாலே, சிறந்த கல்வியாளர்களையெல்லாம் அழைத்து நீங்கள் பேச வேண்டும். மாணவர்கள் சேர்க்கைபற்றி, ஆறாம் தேதி பேசுவதாக நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். அது வேறு விஷயம். அது உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு. அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. ஆனால், அண்ணா பல்கலைக்கழகத்தை நீங்கள் சுத்தப்படுத்த வேண்டிய பணி உங்களுக்கு இருக்கிறது. அதை நீங்கள் செய்யவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த கால ஆட்சியிலே, தமிழகத்திலே வீட்டுவசதி வாரியம் இருந்தது. வீட்டுவசதி வாரியம் இந்த நாட்டு மக்களுக்காக, ஏழைகளுக்காக, எளியவர்களுக்காக, துன்பப்படுகிறவர்களுக்காக, துயரப்படுபவர்களுக்காக குறைந்த விலையிலே வீட்டு மனைகளை

அபிவிருத்தி செய்து அரசாங்கம் கொடுப்பதற்காக, அந்த வீட்டுவசதி வாரியம் உண்டாக்கப்பட்டது. என்னுடைய தொகுதியிலே, அந்த வீட்டுவசதி வாரியத்தின்மூலம் Satellite City என்று நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அறிவிக்கப்பட்டிருந்த பருத்திப்பட்டு Satellite City, இன்னும் இரண்டு, மூன்று இடங்களிலே இருக்கிற Satellite City, அந்த Satellite City–களைப் பொறுத்தவரை, ஆட்சியைவிட்டுப் போகின்றபோது, ஒரு G.O. போட்டுவிட்டுப் போய் இருக்கிறார்கள். என்ன G.O. என்று சொன்னால், இந்த இடங்களை வீட்டுவசதி வாரியம் எடுப்பதற்குத் தயாராக இல்லையென்று ஒரு G.O. போட்டிருக்கிறார்கள். தடையில்லாச் சான்றிதழ் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடந்த ஆறு மாத காலத்திற்குள்ளாக எத்தனை தடையில்லா சான்றிதழ்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதைக் கவனித்து, வீட்டுவசதித் துறை அமைச்சர் இங்கே இருக்கிறார், அவர் அதைக் கவனித்து...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்றதையெல்லாம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். ஒன்றிரண்டைச் சொல்கிறேன். இதுபோன்ற நிகழ்வுகள் மட்டுமல்லாமல், பல்வேறு விலை மதிக்கமுடியாத இடங்களை, யார் யாருக்கு என்னென்ன பிளாட்டுகள் என்று பெயர் நிர்ணயம் செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டு, விலை நிர்ணயமே செய்யாமல், ஏராளமான இடங்களில் கண்டறியப்பட்டு இருக்கின்றன. எனவே, இதெல்லாம் வண்டியை நிறுத்திக்கொண்டு மரத்தை வெட்டிச் சாய்ப்பதுபோல உள்ள நடைமுறை. அங்கே வண்டி நொறுங்கிவிடும், இங்கே வாரியத்தினுடைய நிர்வாகம் சீர்குலைந்து போய்விடும் என்று சுட்டிக்காட்டி அனைத்திற்கும் legal opinion பெற்று இரத்து செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி. சுதர்சனம்:** அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அதேபோன்று, இன்றைக்கு இந்தக் கல்விக் கொள்கை, சென்ற ஆட்சிக் காலத்திலே மிகவும் சீரழிக்கப்பட்டது என்பதை எனக்கு முன்னாலே பேசிய அருமைச் சகோதரர் திரு. ஜி.கே. மணி அவர்கள் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி நானும் மீண்டும் பேச



விரும்பவில்லை. இருந்தாலும், சில கோரிக்கைகளை மட்டும் முதலமைச்சர் அவர்கள் பதிலுரை தர இருக்கின்ற காரணத்தினால், நேரத்தின் அருமை கருதி, சில பிரச்சினைகளைப்பற்றி மட்டும், கல்விப் பிரச்சினைகளைப்பற்றி மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எட்டாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்புவரை உள்ள பள்ளிகளில் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் குறைந்தபட்ச கணினிக் கல்வி கிடைக்க சரியான திட்டம் வகுத்துச் செயல்படுத்த வேண்டும்.

பள்ளி ஆசிரியர்களுக்குச் சரியான ஊதியம் மாதம் தவறாமல் கிடைக்கச் செய்வதோடு, அவர்களுக்கு வீட்டு மனை மற்றும் வீடு வாங்கிக்கொள்ள மிகவும் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் கிடைக்கச் செய்யவேண்டும்.

ஆசிரியர் நியமனத்தில் தொகுப்பு ஊதிய முறை இரத்து செய்யப்பட்டு, முறையான ஊதியம் வழங்கப்படவேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை வைத்து, தமிழகத்திலே பல பெரிய தொழிற்சாலைகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியுதவியுடன் நிறுவி வேலைவாய்ப்புகள் பன்மடங்காக உயர்த்தப்படவேண்டும்.

முற்பகல் 11–10

ஜவுளி மற்றும் நூற்புத் தொழிற்சாலைகள் அடிக்கடி மூடப்படுவதால் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் படும் அவதியைப் போக்கவும், அந்தத் தொழிற்சாலைகள் இலாபகரமாக நடைபெறுவதற்கும், அவற்றை நவீனமயமாக்க நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் தர வேண்டும்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் துவக்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகள் பெருமளவில் மூடப்பட்டுக் கிடக்கின்றன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பசியும் பட்டினியுமாக வாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நூற்பாலைகளை உடனடியாகத் திறந்து, பசியாலே, பட்டினியாலே வாடிக்கொண்டிருக்கின்ற தொழிலாளர்களுடைய குடும்பங்களில் நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் விளக்கேற்றி வைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கைத்தறித் தொழிலுக்குத் தேவைப்படும் தறிகள் வாங்குவதற்கும், பயன்பாட்டில் உள்ள தறிகளைப் புதுப்பித்துக்கொள்வதற்கும் தேவையான நிதி உதவியைத் தமிழக அரசு கொடுக்க வேண்டும். கைத்தறித்

தொழிலுக்கு என்று சில குறிப்பிட்ட இரகங்கள் என்று ஒதுக்கப்பட்ட துணிகள் அத்தனையையும் மாநில அரசே நேரடியாகவும் கூட்டுறவுத் துறைமூலமாகவும் விலைக்கு வாங்கி, அந்தத் துணிகளை 50 சதவீதத்திற்குக் குறையாத அளவிற்கு தள்ளுபடி விலையில் ஏழையெளிய மக்களுக்கு விற்பனை செய்ய வேண்டும். சிட்டா நூலுக்கு 2 சதவீத விற்பனை வரி தமிழகத்திலே மட்டும் இருப்பது இரத்து செய்யப்பட வேண்டும். சிட்டா நூலுக்கும், பட்டு சோரா நூலுக்கும் 15 சதவீதம் மானியம் அளிக்கப்பட வேண்டும். தனியார்த் துறையிலே நெசவாளர்களுக்கு ஓய்வூதியம், மருத்துவ வசதி, வீடு கட்ட குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்பட வேண்டும்.

அதேபோன்று, மத்திய அரசின் Right to Information Act. இந்திய அரசின் வரலாற்றில் இதுவரை இல்லாத புரட்சிகரமான தகவல் அறியும் உரிமை சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றித் தந்துள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள் மட்டுமே இந்தத் தகவல் கேட்டுப் பெறும் சிறப்பு உரிமையைப் பெற்றிருந்தார்கள். இன்றைக்குச் சாதாரண மக்களுக்கும் அந்த உரிமையை மத்திய அரசு அளித்திருக்கிறது. நேற்று முன்தினம் மத்தியப் பிரதேசத்திலே ஒரு தாசில்தார், பட்டா வேண்டுமென்று கேட்டு மனு கொடுத்த ஒரு சாதாரண குடிமகனின் கோரிக்கையை 6 மாதத்திற்குள்ளாக நிறைவேற்றாத காரணத்தால், அவர் நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றம் 25,000 ரூபாய் அந்த தாசில்தாருக்கு அபராதமாக விதித்திருக்கிறது. அதேபோன்று, இங்கும் நம்முடைய அரசும் அந்தத் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, 2006–2011, இந்த ஐந்தாண்டுகள் பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கியமான காலகட்டமாகும். ஏழை மக்கள் நலன், குறிப்பாகவும், கவனமாகவும் பாதுகாக்கப்பட வேண்டும். இந்தப் பொன்னான காலத்தில் தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் செல்ல சரியான திட்டம் தீட்ட வேண்டியது அவசியம். மதச்சார்பின்மை, சமூக நீதி, ஏழையெளிய மக்களின் நலன் சார்ந்த நிர்வாக அணுகுமுறை, நேர்மையான சிறந்த அரசியல் செயல்பாடுகள் ஆகிய நான்கு தூண்கள்மீது இந்த அரசு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி நடைபெற்றுக்கொண்டிருக்கிற அரசு சில கோரிக்கைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது.





சிறிய வணிகர்கள் இன்றைக்குத் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிறிய வணிகர்களைப் பாதுகாக்கவும், வரிச் சட்டங்களில் இருக்கும் நடைமுறைச் சிரமங்களிலிருந்து அவர்களை விடுபடச் செய்யவும், விற்பனை வரி இலக்கினை, ஆண்டு விற்பனைத் தொகை வரம்பை ரூபாய் 10 இலட்சமாக உயர்த்தித் தர வேண்டும்.

தொழில்களுக்கு, குறிப்பாக, சிறுதொழில்களுக்கு மாநில அரசின் நிதி நிறுவனங்கள் விதித்திடும் கடன்களுக்கான வட்டி விகிதங்கள் குறைக்கப்பட வேண்டும். அதிக வேலைவாய்ப்பு அளிக்கும் சிறுதொழில்கள் துறையை ஊக்கப்படுத்த பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட வேண்டும்.

மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற இரண்டாம் நிலை நகரங்களிலும் தகவல் தொழில்களை ஊக்கப்படுத்த அனைத்து நவீன கட்டமைப்பு வசதிகளையும் உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களும் Tidel Park–கள் அமைக்கப்பட வேண்டும்.

நாகப்பட்டினம், இராமேஸ்வரம், குளச்சல், தொண்டி, வாலிநோக்கம் போன்ற சிறு துறைமுகங்கள் மேம்படுத்தப்பட்டு மிகச் சிக்கனமான கடல்வழி சரக்குப் போக்குவரத்துக்கு வழி காண வேண்டும்

முற்பகல் 11—

அதேபோன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு ஒ[illegible] வேண்டுகோள். 1997 ஆம் ஆண்டு சென்னையிலே நடைபெற்ற மத்தி[illegible] அரசு பிற்படுத்தப்பட்ட ஊழியர்கள் மாநாட்டில் தாங்க[illegible] உரையாற்றினீர்கள். உரையாற்றுகிறபோது, தந்தை பெரியாரி[illegible] போராட்டம், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் முயற்சி, பண்டி[illegible] நேருவின் உறுதி, அம்பேத்கர் அவர்களின் வழிகாட்டுதல் ஆகியவற்றி[illegible] விளைவாக கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு இ[illegible] ஒதுக்கீட்டிற்கான சட்டத் திருத்தம் 15/4 பாராளுமன்றத்தி[illegible] நிறைவேற்றப்பட்டு, ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான பின்னரும், மத்தி[illegible] அரசின் கல்வி நிறுவனங்களில் இன்னமும் பிற்படுத்தப்பட்டோருக்[illegible] இட ஒதுக்கீடு அளிக்கப்படவில்லை என்பதையும், பெருமைபெற்ற கல்[illegible] நிறுவனங்களில் அளிக்கப்படுகின்ற தரமான உயர் கல்[illegible] பிற்படுத்தப்பட்டோருக்கு மறுக்கப்படுவதையும் சுட்டிக்காட்[illegible] பிற்படுத்தப்பட்டோருக்கு I.I.T., I.I.M. போன்றவற்றில் இட ஒதுக்[illegible]

அளிக்க வேண்டுமென்றும் பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தீர்கள். அது இன்றைக்கு 27 சதவிகிதம், பிற்படுத்தப்பட்டோருக்கு உயர் கல்வி நிறுவனங்களில் அளிக்க அரசு முன்வந்திருக்கிறது. அதற்குத் தகுந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று இன்றைக்கு மத்திய அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது. பல்வேறு இடையூறுகள் இன்றைக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அறிவித்து ஆறு மாத காலத்திற்குப் பின்னால், இன்றைக்கு மாணவர்கள் தூண்டிவிடப்பட்டு, மிகப் பெரிய அளவிலே போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, இடங்களை உயர்த்தி, மாணவர்களைச் சேர்க்கின்ற பிரச்சினையை அறிவித்திருக்கிறது மத்திய அரசு. மத்திய அரசு எத்தனை இடங்களை உயர்த்தினாலும், 27 சதவிகிதம் காப்பாற்றப்பட வேண்டும். சாத்தியம் இருக்கின்ற கல்வி நிறுவனங்கள், இந்தக் கல்வி ஆண்டிலிருந்தே அந்த இட ஒதுக்கீட்டினை அமல்படுத்த வேண்டும். இதற்கான அவசரச் சட்டத்தை மத்திய அரசு உடனடியாகக் கொண்டுவர வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கான தீர்மானம் ஒன்றினை நம் சட்டமன்றத்தில் நிறைவேற்றி, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதியைப் பற்றிய இரண்டொரு பிரச்சினை. பூவிருந்தவல்லி பேருந்து நிலையம் சுமார் 2 ஏக்கர் நிலத்தில் இருக்கிறது. பக்கத்திலே திருக்கச்சி நம்பி வரதராஜப் பெருமாள் கோவிலுக்குச் சொந்தமான இடம் நிறையவே இருக்கிறது. 1996—லே இந்த மன்றத்திலே நான் உங்களிடத்திலே கோரிக்கையாக வைத்தேன். அந்த பூவிருந்தவல்லி பேருந்து நிலையம் விரிவாக்கப்பட வேண்டுமென்று கேட்டேன். அந்தக் கோவில் நிலத்தை அரசு கையகப்படுத்தி, அந்தப் பேருந்து நிலையத்தை விரிவாக்க வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆவடி நகராட்சியிலே பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு 128 கோடி ரூபாய் செலவிலே, ஷா தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆலோசனைகளைப் பெற்று, ஆய்வு செய்யப்பட்டு, கிடப்பிலே போடப்பட்டுள்ளது. அதை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும். ஆவடி நகராட்சியிலே குடிநீர் வாரியத்தின்மூலமாக, 2003 ஆம் ஆண்டு 38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. அதையும் உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டும்.





திருவேற்காடு கோவில், சிறப்பான கோவில். அந்தக் கோவிலுக்குப் பக்கத்திலே, இருட்டாக இருக்கிறது. அந்த நகராட்சிமூலமாக சோடியம் விளக்குகள் அமைத்துத் தரவேண்டும் என்ற வேண்டுகோளை வைத்துக்கொள்கிறேன்.

சென்னை மெரினா கடற்கரையில் கற்புக்கரசி கண்ணகி சிலை, இப்போது வைக்கிறீர்கள். அதற்காக எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாக வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள், சுதந்திரம் அடைவதற்கு முன்னே சென்னை வந்து, வீர உரை ஆற்றிய திலகர் கட்டம் என்பது அகற்றப்பட்டுவிட்ட பெயர். அன்றைக்குப் பல்வேறு போராட்டங்களைக் காங்கிரஸ் கட்சி செய்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், அன்போடு அந்த இடத்திற்கு திலகர் கட்டம் என்ற பெயரைச் சூட்ட வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படிப்பட்ட வேண்டுகோளை வைக்கின்ற இந்த நல்ல நேரத்தில், இந்த கவர்னர் உரை என்பது, சாதாரண உரை அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்ற பல்வேறு பணிகள், இந்த கவர்னர் உரையிலே நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன. மற்றவை வெகு விரைவிலே நிறைவு செய்யப்படும் என்பதற்கான உத்தரவாதத்தை முதல்வர் அவர்கள் அளிப்பார்கள். ஆனால், சில நண்பர்கள் என்ன நினைக்கிறார்கள்? குழந்தை வேண்டுமென்று எண்ணுகின்றவர்கள் அரச மரத்தைச் சுற்றி வந்துவிட்டு, அடி வயிற்றைத் தொட்டுப் பார்க்கின்ற நேரத்திலேயே, குழந்தையை உண்டாக்க முடியாது. திருமணம் நடைபெற்று, சில மாதங்கள் கழித்துத்தான் குழந்தையை உருவாக்க முடியுமே தவிர, ஒரே நாளிலே குழந்தையை உருவாக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்று, இங்கே இருக்கின்றவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, 10 தினங்களுக்குள்ளாகவே, இதைச் செய்தீர்களா, அதைச் செய்தீர்களா, இதைச் செய்யவில்லையே, அதைச் செய்யவில்லையே என்று கேட்டு, வெளிநடப்புச் செய்துவிட்டு, வெளியிலேயும் போய், இன்றைக்கு நான் வெளியிலேயிருந்து வருகின்றபோது, சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியிலே அங்கே கேட்டிற்கு அருகிலே நின்றுகொண்டு போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். நாங்கள் காரைவிட்டுவிட்டு, சுற்றிக்கொண்டு வெளியிலேயிருந்து நடந்துதான் வந்தோம். இப்படிப்பட்ட ஒரு நிலை தமிழகத்திலே தொடரக் கூடாது. மக்கள் இதற்காக

இவர்களுக்கு வாக்களிக்கவில்லை என்பதை உறுதி செய்கின்ற வகையிலே, வருகின்ற காலங்களிலே அவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள் என்று சொல்லி, இந்த கவர்னர் உரையைப் பாராட்டி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். சட்டப்பேரவை விதி 88(1)-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேவைப்பட்டால் உட்கார்ந்தே பேச அனுமதியளிக்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைப்படும்பொழுது உட்கார்ந்துகொண்டு பேசுகிறேன். அதுவரையில் நிற்க அனுமதியுங்கள். (சிரிப்பு)

*முற்பகல் 11—20*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையாற்றியவர்கள் எல்லோரும், நன்றி கூறுகின்ற ஒரு படலத்தை நிறைவேற்றிவிட்டு பேச்சைத் தொடங்கியதுபோல, நானும் என்னுடைய உரையைத் தொடங்க விரும்புகின்றேன். முதலமைச்சராகிவிட்ட காரணத்தால், நான் என்னுடைய சேப்பாக்கம் தொகுதி மக்களை மறந்துவிட முடியாது. என்னை இந்த அவையிலே ஒரு உறுப்பினராக வருவதற்கு வழி செய்து, மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒத்துழைப்போடு ஆளுகின்ற கட்சியின் தலைவனாகவும் ஆக்குவதற்குக் காரணமாக இருந்த சேப்பாக்கம் தொகுதி மக்களுக்கும், செந்தமிழ் நாட்டு வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இந்தியாவினுடைய தலைசிறந்த தலைவர்களில் ஒருவராக மலர்ந்து கொண்டிருக்கின்ற திருமதி சோனியா காந்தி அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) வழிகாட்டுதலோடு, பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) ஆற்றல்மிகு ஆட்சித் திறனோடு நடைபெறுகின்ற ஆட்சியாயினும், கட்சியாயினும், அந்த காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய துணையும், அதேபோல தமிழகத்திலே சமூக நீதிக் காவலராக விளங்குகின்ற அய்யா டாக்டர் ராமதாஸ் அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) பாட்டாளி மக்கள் கட்சியினுடைய துணையும், இடதுசாரி கொள்கைகளை என்னுடைய இதயத்திலே பதியவைத்துக்கொள்வதற்கு வழிவகுத்துக் கொண்டிருக்கின்ற





இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளினுடைய துணையும், (மேசையைத் தட்டும் ஒலி) மதச்சார்பற்ற நிலை என் மனதில் என்றென்றும் இருப்பதற்கு வழிகோலிய இந்திய யூனியன் முஸ்லீம் லீக், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம், புரட்சி பாரதம் ஆகிய தோழமைக் கட்சிகளுடைய துணையும், என்னை இந்த மாமன்றத்திலே ஆட்சித் தலைவராக அமரச் செய்திடத்தக்க தகுதியை வழங்கியிருக்கின்றன. அந்தக் கட்சிகளினுடைய தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும், எங்களுடைய கட்சியினுடைய உயிரனைய அன்பு உடன்பிறப்புகளுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*முற்பகல் 11—25*

ஆளுநர் உரையில் இதுவரை கட்சிகளின் தலைவர்கள் உட்பட 26 உறுப்பினர்கள் பேசியிருக்கின்றார்கள். கட்சிகளின் தலைவர்கள் உட்பட 26 பேர் பேசியிருக்கின்றார்கள். நான் 27—ஆவது பேர்வழியாகப் பேசிக் கொண்டிருக்கின்றேன். புராணீகர்கள் 27 நட்சத்திரம் என்பதை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளலாம். 27 நட்சத்திரங்கள் சிறப்புக்குரியவை என்பது அவர்களைப் பொறுத்து. அந்த வகையிலே, நான் 27—ஆவது பேர்வழியாக அந்த உரைகளுக்கு எல்லாம் விளக்கம் அளிக்கின்ற நிலையைப் பெற்று இருக்கின்றேன். அந்த 26 பேர்களில், காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசியவர்கள் 6 பேர், ஆளுங்கட்சியின் சார்பாகப் பேசியவர்கள் 5 பேர், அகில இந்திய அ.தி.மு.க. சார்பாகப் பேசியவர்கள் 2 பேர். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகப் பேசியவர்கள் 4 பேர். ம.தி.மு.க. சார்பாகப் பேசியவர் ஒருவர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக 2 பேர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசியவர்கள் 2 பேர். விடுதலைச் சிறுத்தைகள் சார்பாகப் பேசியவர்கள் 2 பேர். இருப்பவர்கள் 2 பேர்; பேசியவர்களும் 2 பேர். தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பாக திரு. விஜயகாந்த் அவர்கள் ஒருவர். மற்றும் சுயேட்சை உறுப்பினர் ஒருவர். ஆக 26 பேர் பேசி, அவர்களுடைய கருத்துகளுக்கெல்லாம் பதிலல்ல, மெருகூட்டுவதைப் போன்று சில கருத்துகளை நான் இங்கே எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக இன்றைக்கு நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர், சட்டமன்றக் கட்சிக்கும் தலைவர், திரு. கோ.க. மணி அவர்களும், காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சுதர்சனம் அவர்களும்

எடுத்துரைத்துள்ள கருத்துகள் மிகமிக வரவேற்கத்தக்க கருத்துகளாக அமைந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆளுநர் உரைக்கான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முதலில் நன்றி தெரிவித்து முன்மொழிந்தவர் திரு. அப்பாவு அவர்கள். அப்பாவு அவர்களுடைய பேச்சு, ஆர்வத்தின் அடையாளமாக உருவாகி, நம்முடைய சுதர்சனம் அவர்களுடைய பேச்சு, அனுபவத்தின் அடையாளமாக இன்றைக்கு நிறைவுற்று இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இடையிலே நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய பேச்சுத்தான் பிரளயத்தையே இங்கே ஏற்படுத்திவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய நோக்கம் பிரளயத்தை உருவாக்க வேண்டும் என்பதல்ல. அவருடைய பேச்சைப் பயன்படுத்திக் கொண்டு இங்கே ஒரு பிரளயம் உருவாயிற்று. அதன் காரணமாக ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளுக்கு நான் உங்கள் அனைவரோடும் சேர்ந்து, ஜனநாயகத்திலே நம்பிக்கையுடைய அத்தனை அரசியல்வாதிகளோடும் சேர்ந்து, நான் என்னுடைய வருத்தத்தை, ஆழ்ந்த வேதனையைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இருந்தாலும் 'கடிதோச்சி மெல்ல எறிக' என்ற வள்ளுவருடைய வாசகத்திற்கு ஏற்ப கடுமையான நடவடிக்கை என்று எடுத்தாலும்கூட, அவர்கள் தொடர்ந்து அவைக்கே வராமல் இருந்துவிட வேண்டும் என்று ஒரு முடிவு எடுக்காமல், அடுத்த கூட்டத் தொடர், நிதிநிலை அறிக்கைத் தொடர், நீண்ட நாள் நடைபெறக்கூடிய தொடரில் அவர்கள் கலந்துகொண்டு, அரிய விளக்கங்களை, நாடு வாழ, நலிவு தீர, மக்கள் பிரச்சினைகளை எல்லாம் முன்னிறுத்தி அவர்கள் பேசவேண்டும் என்ற எண்ணம் இருக்கின்ற காரணத்தால்தான், நேற்று நான் வேண்டுகோள் விடுத்து, தாங்களும் அதை ஏற்று, இந்த அவையும் அதனால் ஒரு பூரிப்பை அடைந்திருக்கின்றது.

இங்கே எடுத்துச்சொல்லப்பட்ட கருத்துகள் சிலவற்றை முதலில் ஆராய நான் விரும்புகின்றேன். குறிப்பாக, ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுடைய பேச்சின் இறுதியில் தங்களுடைய தொகுதியைப்பற்றிப் பேசத் தவறவில்லை. ஏனென்றால், அவர்கள் தொகுதிக்குத் திரும்பச் செல்ல வேண்டும். அதற்காக, அந்தக் காரணத்திற்காக மாத்திரமல்ல, உள்ளபடியே அவர்களுக்கு அந்தத் தொகுதியின்மீது உள்ள அக்கறையை வெளிப்படுத்தவும், யாரிடத்திலே சொன்னால் நடக்கும், எங்கே சொன்னால் நடக்கும் என்ற நம்பிக்கையின் காரணமாகவும், அந்தத் தொகுதிப் பிரச்சினைகளை எல்லாம் இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள். அவை ஒவ்வொன்றையும் நான் இங்கே



குறிப்பிட்டு அதிலே இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் 122 வாக்குறுதிகளை தமிழ்நாட்டு மக்களுக்குத் தந்தோம். நேற்றையதினம் நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் பேசும்போது சொன்னதைப்போல், அந்த வாக்குறுதிகள் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உள்ளத்திலே மாத்திரம், மூளையிலே மாத்திரம் உதித்து, மக்களுக்குத் தரப்பட்ட வாக்குறுதிகள் என்று நான் ஆணவம் கொள்ளவில்லை. தற்பெருமை பேச விரும்பவும் இல்லை. அந்த வாக்குறுதிகள், எல்லா கட்சிகளுடைய உள்ளத்திலும், எண்ணத்திலும் இருக்கின்ற அந்த வாக்குறுதிகள்தான், ஆசைகள்தான், அவாக்கள்தான். அதைத்தான் 122 வாக்குறுதிகளாகத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தேர்தல் அறிக்கையிலே தந்தோம்.

முற்பகல் 11—30

அந்தத் தேர்தல் அறிக்கைக்குப் பெரும் சிறப்பாக மத்திய நிதியமைச்சர் நண்பர் சிதம்பரம் அவர்கள், இந்தத் தேர்தலிலே கதாநாயகனே இந்தத் தேர்தல் அறிக்கைதான் என்று அவர் குறிப்பிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கதாநாயகனாக விளங்கிய தேர்தல் அறிக்கை எத்தகைய வெற்றியைப் பெற்றுத் தந்திருக்கிறது என்றால், தமிழ்நாட்டு மக்களுடைய ஒத்துழைப்போடு, நம்முடைய கூட்டணியிலே உள்ள கட்சிகள் 163 பேர் மகத்தான வெற்றி பெறுவதற்கு ஒரு நல்ல நிலையை உருவாக்கி இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

என்ன சொல்லப்பட்டது ஏடுகளில்—வார ஏடுகளில், நாளேடுகளில்? திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டணி தொலைந்தது, தலை எடுக்காது, திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியைச் சேர்ந்த ஒருவர், இருவர்கூட வெற்றிபெற்று மன்றத்திற்குச் செல்ல மாட்டார்கள். இதோடு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வரலாறு முடிந்துவிடும். இதுதான் இறுதிப் போராட்டம். இது பரம்பரை யுத்தம். அந்தப் பரம்பரை யுத்தத்திலே இது இறுதி யுத்தம். இந்த யுத்தத்தில் கருணாநிதி என்கின்ற இராவணன் ஒழிவான் என்றெல்லாம் பேசப்பட்டது. ஆனால், இந்த இராவணனுக்கு பத்து தலை இல்லை. இந்த இராவணனுக்கு தமிழ்நாட்டின்மீது 'பற்றுதலை'. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அந்தப் 'பற்றுதலை' இருந்த காரணத்தால் தமிழ் மக்களும் என்பால் கொண்ட

'பற்றுதலை' வெளிப்படுத்தி, நம் அனைவருக்கும் 163 இடங்களைத் தருகின்ற மாபெரும் வெற்றியை வழங்கி இருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதிலே 122 வாக்குறுதிகள் என்று சொன்னேன் அல்லவா? அதில் 54 வாக்குறுதிகளை நிறைவேற்றுவது பற்றிய அறிவிப்புகள் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)* அஃதன்னியில், தொழிற்கல்வி பயில ஏற்பாடு, கல்வியாளர்கள் கூட்டம் நடத்துவதற்கான ஏற்பாடு, நுழைவுத் தேர்வை அகற்ற குழு, ஒட்டுமொத்த சுற்றுலாத் திட்டம், மேட்டூர் நீர் திறப்பு போன்ற 14—க்கும் மேற்பட்ட அறிவிப்புகள் உட்பட மொத்தம் 68 அறிவிப்புகளை இந்த ஆளுநர் உரை கொண்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* எஞ்சிய அறிவிப்புகள் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் இங்கே குறிப்பிட்டது போல, படிப்படியாக நிறைவேற்றப்படும் என்ற உறுதியை இங்கே நான் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். உட்கார்ந்துகொண்டு பேசுகிறேன்.

*(பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமர்ந்துகொண்டு பேசினார்.)*

மாண்புமிகு கோவை தங்கம் அவர்கள் வால்பாறை தொகுதியிலே வெற்றி பெற்றவர். காங்கிரஸ் கட்சியின் சார்பாக உரையாற்றியபோது, வால்பாறை மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான அரசு கலைக் கல்லூரி பாரதியார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக அமைக்க வேண்டும் என்று கோரினார்கள். இவரது கோரிக்கையைப் பரிசீலிக்கலாம் என்று அதிகாரிகள் சொன்னார்கள். நான் அதிகாரிகளிடத்திலே வலியுறுத்திச் சொல்லி இருக்கிறேன். வால்பாறை தனித் தீவுபோல இருக்கின்ற ஒரு பகுதி. அங்கே வாழ்கின்ற மக்கள் இன்னமும் இந்த உலகத்தைத் தெரிந்துகொள்ள வேண்டிய, புரிந்துகொள்ள வேண்டிய, உலகத்தோடு ஒட்டி ஒழுகவேண்டிய ஒரு நிலையிலே இருக்கின்ற மக்கள். அந்த மக்கள் குறைந்தபட்சம் ஓர் அரசு கலைக் கல்லூரியை, பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக அமைக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். எனவே, ஒரு சிறப்பு நேர்வாக இதை நாம் செய்து கொடுக்க வேண்டுமென்று அதிகாரிகளிடத்திலே கூறி, அவர்களும் இதற்கு ஒப்புதல் தந்துள்ளார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



*முற்பகல் 11–35*

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆலங்குடி தொகுதி உறுப்பினர் ராஜசேகரன் அவர்கள் ஊரகப் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் போதுமான அளவுக்கு இல்லை என்று சொன்னார்கள். ஒரு இடத்திலே மாத்திரமல்ல, பல இடங்களில் இந்தக் குறைபாடு இருக்கின்றது. இந்தக் குறைபாடு நீக்கப்பட்டு, அங்கு மாத்திரமல்ல, ராஜசேகரன் சொன்ன ஆலங்குடியிலே மாத்திரமல்ல, ஆரம்ப சுகாதார நிலையங்கள் அத்தனையிலும் தேவையான மருத்துவர்கள் நியமிக்கப்பட ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நம்முடைய வேலூர் ஞானசேகரன் அவர்கள் உரையாற்றும்போது 80 ஆண்டுகாலமாக இயங்கிவந்த அரசு மருத்துவமனை தற்போது செயல்படாமல் உள்ளது. இதுகுறித்து இந்த அரசு பரிசீலித்து அந்த மருத்துவமனை தொடர்ந்து செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மருத்துவமனைக்கு வயது 80 ஆண்டு, அது உறுதியாக நிறைவேறும் என்று வாக்களிக்கிற எனக்கு 83 ஆண்டு *(சிரிப்பு)* என்பதை நான் ஞானசேகரன் அவர்களுக்குத் தெரிவித்து *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுவும் மகிழ்ச்சிகரமாக நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்கள், செங்கல்பட்டு தொகுதியிலே உள்ள கொளவாய் ஏரியைத் தூர் வாரி, தூய்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தளி இராமசந்திரன் அவர்கள், யாரையும் கேட்காமல் வெற்றி பெற்றவர். *(சிரிப்பு)* அவரது தொகுதியிலே யானைகளால் தாக்கப்பட்டு அடிக்கடி விவசாயிகள் இறக்க நேரிடுகிறது என்றும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே உடனடியாக இதற்கெல்லாம் இழப்பீடு வழங்கப்பட்டது என்றும், ஆனால், இந்த ஆட்சியிலே, இந்த ஆட்சி என்றால் கடந்த ஆட்சியில் இத்தகைய இழப்புகளுக்கு தொகைகள் வழங்கப்படவில்லை என்றும் பேசும்போது தெரிவித்தார்கள். நேற்றையதினமே யானையினால் பாதிக்கப்பட்ட அந்த விவசாயி குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இதுபோல பழைய சம்பவங்கள், யாரும் பாதிக்கப்பட்டிருந்து, அந்தப் பட்டியல்

[கலைஞர் மு. கருணாநிதி] [2006 மே 30

தரப்படுமேயானால், அவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க அரசு ஆவன செய்யும் என்ற உறுதியையும் நான் இங்கே வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாணியம்பாடி தொகுதியைச் சேர்ந்த அப்துல் பாசித் அவர்கள், அவர் தொகுதிக்குட்பட்ட மாதனூர் ஒன்றியத்தில் மலைக் கிராமங்களான காமன்திட்டு, பனங்காட்டூர், நாட்டுநேரி போன்ற கிராமங்களுக்குச் சாலை வசதி இல்லாத காரணத்தால் 20 அல்லது 25 கிலோ மீட்டர் தூரம் அந்தத் தொகுதி மக்கள் நடந்துதான் நகரங்களுக்குச் செல்ல வேண்டும் என்று தெரிவித்தார்கள். அந்தச் சிரமம் போக்க, அந்தக் கோரிக்கை குறித்து உடனடியாகப் பரிசீலிக்க உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குக் கூறப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது கவனிக்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மன்னார்குடி நண்பர் சிவபுண்ணியம் அவர்கள், தனது தொகுதியிலே முன்பிருந்ததுபோன்ற புகைவண்டி வசதி மீண்டும் தேவை என்று, அதைப் புதுப்பித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இதுகுறித்து இந்த அரசு மத்திய அரசோடு தொடர்புகொண்டு, மத்திய அரசினுடைய இணை அமைச்சர் இங்கே இருக்கின்ற காரணத்தால், அவர்களோடு தொடர்புகொண்டு,—ஏற்கெனவே அவரிடத்திலே நானே ஒரு கோரிக்கை வைத்திருக்கிறேன். என்னுடைய எட்டுக்குடி, திருக்குவளை பகுதிகளுக்கெல்லாம் இரயில் விடவேண்டுமென்று; அதையும் சேர்த்து நிறைவேற்ற வேண்டுமென்று அவரிடத்திலே கேட்பேன். ஆனால், எனக்கு சிவபுண்ணியம் ஒரு உத்தரவாதம் தரவேண்டும். அந்த இரயில் போகும்போது அதற்குப் போதுமான பயணிகள் (சிரிப்பு) — ஏனென்றால், மிகக் குறைவான தூரம், அதுமாத்திரமல்ல, எவ்வளவு வேகத்திலே அந்த இரயில் போகும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதிலே நான் போய் பழக்கப்பட்டவன். ஆமையோடு போட்டிப் போட்டு செல்லக்கூடிய இரயில் அது. அந்த இரயிலை அங்கே இயக்குவதற்கு நான் உரிய அதிகாரிகளோடு தொடர்பு கொள்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றும் சொன்னார், சிவபுண்ணியம் அவர்கள். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கை வழியிலே வந்த நாம், அண்ணா வழியிலே வந்த நாம், தமிழகத்திலே பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்ப வேண்டிய அவசியம் இருப்பதைக் குறிப்பிட்டு, அதற்காக ஒரு தனி இலாகாவே, ஒரு துறையே அமைக்க வேண்டுமென்று



2006 மே 30] [கலைஞர் மு. கருணாநிதி]

கேட்டார். அவர் மறந்திருப்பார் என்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான், கடந்த காலத்தில் இந்த ஆட்சிமாற்றம் ஏற்படுவதற்கு முன்பு, 2000 ஆம் ஆண்டு இறுதியில், 'சமூக சீர்திருத்தத் துறை' என்ற ஒரு துறையை உருவாக்கி அது செயல்பட ஆரம்பித்தது. உடனடியாகத் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலுக்குப் பிறகு, வெற்றி பெற்றவர்கள், சமூகத்தை இன்னும் சீர்திருத்தத் தேவையில்லை என்று அந்தத் துறையையே கலைத்துவிட்டார்கள் என்பதை நான் நண்பர் சிவபுண்ணியம் அவர்களுக்குத் தெரிவிப்பதோடு, அடுத்து, நிச்சயமாக அந்தத் துறை புதுப்பிக்கப்படும், (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் துறை பணியாற்றும். அந்தத் துறை பணியாற்றுகின்ற காரணத்தால், அமைச்சர்கள்மீது ஏற்படுகின்ற சந்தேகங்களெல்லாம்கூட, நீங்குகின்ற அளவுக்கு நம்முடைய பகுத்தறிவுப் பகலவன் நமக்கு உதவுவார் என்பதை சிவபுண்ணியம் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–40

அதேபோல, தந்தை பெரியார் அவர்களுடைய பெயரால் அனைத்து சாதியினரும் ஒரே இடத்தில் ஒன்றாக வாழவேண்டுமென்ற அடிப்படையில் "பெரியார் நினைவு சமத்துவபுரம்" உருவாக்கினோம். 113 இடங்கள் என்று எனக்கு நினைவு. அங்கெல்லாம் சமத்துவபுரங்கள் அமைத்தோம். அவைகளில் பல சமத்துவபுரங்கள் பாழடைந்து கிடக்கின்றன, புதுப்பிக்கப்படவில்லை. அந்தத் திட்டம் தொடரவில்லை. எப்பொழுதுமே ஒரு அரசு நல்ல காரியங்களைச் செய்தால், அடுத்து வருகின்ற அரசு அதைத் தொடரவேண்டும் என்பதுதான் ஜனநாயகத்திலே வரவேற்கத்தக்க அம்சம். அதற்கு சாட்சியாகத்தான், கடந்த அரசு உருவாக்கிய சைக்கிள் வழங்கும் திட்டத்தை இந்த அரசு தொடரும் என்று நாம் கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி அது தொடரப்படாமலே போய்விட்டது. சமத்துவபுரம் திட்டம், அது மீண்டும் நிச்சயமாக தொடரும் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) அழகான முறையிலே முதன்முதலில் தொடங்கப்பட்ட அம்பத்தூர் உழவர் சந்தை, அம்பத்தூருக்கு அருகிலே உருவாக்கப்பட்ட பெரியார் நினைவு சமத்துவபுரம், இவைகளையெல்லாம் நானே சென்று திறந்து வைப்பதாக இருக்கின்றேன் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள், திருப்பூரிலே உள்ள

சாயப்பட்டறை பிரச்சினை குறித்து இங்கே உரையாற்றினார்கள். என்னை நேரில் சந்தித்து அதுபற்றி விவரமாகக் கூறியிருக்கின்றார். பேரவைக் கூட்டத்தொடர் முடிந்தவுடன், அந்த நிறுவனங்களுடைய உரிமையாளர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு என்னைச் சந்திக்க வருவதாகவும் சொல்லியிருக்கின்றார். நானும் சந்திப்பதாக உறுதி அளித்திருக்கின்றேன். அப்போது அந்தப் பிரச்சினை குறித்து கலந்து பேசி நிச்சயமாக நல்ல முடிவு காண முயற்சிப்பேன் என்று அவருக்கு நான் சொல்லிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், பனியன் தொழிலாளர்களுக்கு பேருந்து வசதி கூடுதலாக செய்யப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார். அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட போக்குவரத்துத் துறை அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக மங்களூர் செல்வம் அவர்கள் இங்கே உரையாற்றினார்கள். அவருடைய தொகுதியிலே உள்ள திட்டக்குடி, முருகன்குடி, பெண்ணாடம் போன்ற பகுதிகளில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தால், தரைப் பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன என்றும், அவற்றைச் சீர்படுத்த வேண்டுமென்றும் கூறினார்கள். பாலங்கள் மீண்டும் அமைக்கும் பணியை அதன் தொடர்புடைய துறை அமைச்சர்களும், அதிகாரிகளும் விரைந்து மேற்கொள்வார்கள். பாலம் அமைப்பது ஒன்றும் சிரமமல்ல, பாலத்தை இடிப்பதுதான் சிரமம். (சிரிப்பு) பாலம் அமைக்க வேண்டுமென்று என்றைக்கும் கருதுகின்றவன் நான். எனவே, இந்தப் பாலமும் நிச்சயமாக அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேல்மலையனூர் தொகுதி, பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர், செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்கப்பட்ட நெல்லுக்கான விற்பனைத் தொகை பல மாதங்களாக பட்டுவாடா செய்யப்படாமல் நிலுவையிலே உள்ளது என்று குறிப்பிட்டார். உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என்ற உறுதியை அவர்களுக்கு நான் வழங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய ஞானசேகரன் அவர்களும், திருமதி சங்கரி நாராயணன் அவர்களும் கிழக்குக் கடற்கரை சாலையிலே அதிக அளவில் ஏற்படுகின்ற விபத்துகளைக் குறைக்கவும், அந்த விபத்துகளில் காயமடைந்தோருக்கு உடனடி மருத்துவ சிகிச்சை உதவி தரவேண்டுமென்றும் கூறினார்கள்.





ஞானசேகரன் அவர்கள், Highway Patrol இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். உண்மைதான். நானே ஒவ்வொரு நாளும், ஒன்றரை மணிக்கு, பிற்பகல் ஒன்றரை மணிக்கு உணவருந்த உட்காரும்போது, தொலைக்காட்சியைப் பார்த்தால், சாலை விபத்திலே 5 பேர் சாவு, 6 பேர் சாவு என்று, அந்தச் சவங்களைத் தூக்கிச் செல்கின்ற அந்தக் காட்சியை ஒவ்வொரு நாளும் காண வேண்டியிருக்கின்றது.

முற்பகல் 11–45

இந்த ஆட்சி, அந்த ஆட்சி என்று அல்ல, எந்த ஆட்சியிலும் இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த கால ஆட்சியில் நடைபெற்றது, இந்த ஆட்சி வந்தபிறகும் அது தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஒருவேளை இவைகளெல்லாம் தொடர வேண்டும் என்று கருதுகிறார்களோ என்னவோ, எனக்குத் தெரியவில்லை. இது தொடராமல் இருப்பதற்கு காவல் துறை மிகுந்த கண்காணிப்போடு இருக்க வேண்டும். அதைத் தடுத்து நிறுத்த முடியாது. இப்படிப்பட்ட வாகனங்கள் வேகத்தை எந்த அளவிற்குக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை அமல்படுத்த வேண்டும்.

இரவு நேரங்களில் நாமே அனுபவித்து இருக்கிறோம். நம்முடைய பயணத்தில் எதிரே வருகின்ற லாரிகள் அல்லது பெரிய கார்கள் எந்த அளவிற்கு விளக்கு வெளிச்சத்தோடு வருகின்றன என்பதும், முன்பெல்லாம் அந்த விளக்கில் முன் பகுதியிலே ஒரு கருப்புக் கறை இருக்கும். இப்போது அந்தக் கருப்புக் கறை எல்லாம் கிடையாது. கருப்புக் கறையும் இல்லாமல் வெட்ட வெளிச்சத்தோடு, பயங்கர வெளிச்சத்தோடு லாரிகள் வருகின்றன. அவர்களுக்குள்ள துணிச்சல், நாம் அடித்தால் நமக்கு ஒன்றும் காயமில்லை. அடிபடுகின்ற கார்களுக்குத்தான், வாகனங்களுக்குத்தான் சேதம். அதிலே வருபவர்களுக்குத்தான் உயிரிழப்பு என்ற தைரியத்தில் அது நடந்துகொண்டிருக்கிறது. இந்த விபத்துகளைத் தடுப்பதை ஒரு முக்கியமான பணியாக இந்த அரசு எடுத்துக்கொள்ளும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நெசவாளர் பிரச்சினை குறித்து நம்முடைய பள்ளிப்பட்டு தொகுதி உறுப்பினர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள், காங்கிரஸ் கட்சியின் சார்பாக பல அருமையான கருத்துகளையெல்லாம் இங்கே எடுத்துரைத்தார்கள். அவருடைய கருத்துகளைக் கேட்ட நேரத்தில், தமிழைக் கேட்டு இரசிப்பவன் நான். இன்றல்ல, முன்பெல்லாம்கூட, அப்படிப்பட்ட

அருமையான கருத்துகளை அவர் இங்கு எடுத்து வைப்பார். சிட்டா நூலுக்கான இரண்டு சதவீத விற்பனை வரியை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்பு நிதியமைச்சர் அவர்கள் எல்லா வணிகர்களையும் அழைத்து வைத்து, இதுபோன்ற நிறுவனங்களையும் அழைத்து வைத்து, கலந்துபேசித்தான் நிதிநிலை அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் வெளியிடுவது தி.மு.க. அரசைப் பொறுத்தவரையிலே வழக்கமாக இருந்து வருகின்றது. அந்த வழக்கம் மாறாமல் இந்த முறையும் அது கடைப்பிடிக்கப்பட்டு, இத்தகைய கோரிக்கைகள் குறித்து எல்லாம் பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நம்முடைய நண்பர் ஜான் ஜோசப் அவர்கள் நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் நீர்ப்பாசனத்திற்குத் தேவையான நீரை கேரள அரசு வழங்குவதில்லை என்று குறைபட்டுக்கொண்டார்கள். இந்த அரசு இதுகுறித்து நெய்யாறு இடதுகரைக் கால்வாய் நீர்ப்பாசன விவசாயிகளுக்குத் தேவையான நீரை வழங்குவதற்கு கேரள அரசை வலியுறுத்த கேரள அரசோடு தொடர்புகொண்டு ஆவன செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், பக்கத்து மாநிலங்களோடு ஒரு பக்குவமான அணுகுமுறை நமக்குத் தேவை என்பதை இன்று நேற்றல்ல, பல ஆண்டு காலமாக நான் வலியுறுத்தி வருபவன் என்பதை அனைவரும் அறிவீர்கள். அந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி இதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ராஜீவ் காந்தியினுடைய நினைவாக Rajiv Gandhi Institute of Aeronautical Science and Training of Pilots Academy ஒன்றை ஸ்ரீபெரும்புதூர் பகுதியிலே தொடங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு நிச்சயமாக (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிறுவனம் அமைய ஆவன செய்யும். எப்பாடுபட்டேனும் அந்த நிறுவனத்தை இங்கே அமைப்பதற்கு தமிழக அரசு மத்திய அரசோடு வாதாடி, தேவையானால் போராடி, அதை வெற்றிகரமாக முடிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்த அப்பாவு அவர்கள், தன்னுடைய பேச்சில் முக்கியமாக தொழிற்கல்வி படிப்புகளில் கிராமப்புற மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க கழக ஆட்சியிலே 15 சதவீதம் ஒதுக்கப்பட்டதுபற்றி குறிப்பிட்டார்கள். அது மேலும் 25 ஆக உயர்த்தப்பட்டவுடன் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று 15 சதவீதமும் சேர்ந்து அடியோடு போய்விட்டது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் கிராமப்புறத்தே உள்ள நம்முடைய மாணவர்கள். 'நம்முடைய' என்பதற்கு உங்களுக்குப் பொருள் தெரியும் என்று கருதுகிறேன். நம்முடைய மாணவர்கள் அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை எப்படி, ஆங்கிலத்தில் சொல்ல வேண்டும் என்றால், solve செய்து, எந்த முறையிலே மீண்டும் அந்தக் கிராமப்புறத்து மாணவர்களுக்கு இந்த 15 சதவீதமாவது கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்பதைப் பற்றி அரசு ஆலோசித்து உரிய நடவடிக்கைகளைச் சட்டப்பூர்வமாக எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–5

பண்ருட்டி தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வே
முருகன் அவர்கள் விவாதத்திலே பங்கேற்றுப் பேசியபோதும் சரி, அதற்கு
பிறகு அவரைத் தொடர்ந்து இங்கே பேசிய நம்முடைய கோ.க. மண
அவர்கள் பேசியபோதும் சரி, — ஜி.கே. மணி என்று இருந்த
முன்பெல்லாம், இப்போது அவர் கோ.க. மணி. நான்கூ
வேடிக்கையாகச் சொல்வதுண்டு. கோர்த்த மணி ஒட்டையாக இருக்கு
இது கோர்க்காத மணி, ஓட்டை இல்லாத மணி (சிரிப்பு) என்று சொல்
இருக்கிறேன். இந்த கோ.க. மணி அவர்கள் — அவரும், உறுப்பின
வேல் முருகனும் ஒரு கோரிக்கை வைத்தார்கள். தனியார் ஆசிரிய
பட்டயப் பயிற்சி நிலையங்களும், இளநிலை ஆசிரியர் பயிற்சி
கல்லூரிகளும் அதிக எண்ணிக்கையிலே தொடங்கப்பட்டிருக்கின்ற
இதற்குத் தேவையான கட்டமைப்பு வசதி என்பது கிடையாது. இ
குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்
குறிப்பிட்டதோடு இப்பிரச்சினையைக் கவனமாகப் பரிசீலித்து என்னதா
நடந்திருக்கிறது என்பதை நாட்டுக்குச் சொல்ல ஒரு உயர்நிலை
விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்க
நிச்சயமாக ஒரு உயர்நிலை விசாரணைக் குழு அமைக்கப்பட
(மேசையைத் தட்டும் ஒலி) இதில் எப்படி எல்லாம் தவறு நடந்திருக்கின்ற
என்பதைக் கண்டுபிடித்து நாட்டிற்கு அறிவிக்கப்படும்.

விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ரவிக்குமார் அவர்கள் பேசும்போது இன்றைக்கு நூலகங்களில் வாங்குகின்ற நூல்களின் பிரதிகள் அதிகபட்சம் 750 படிகள்தான் வாங்கப்படுகின்றன. அது ஒரு 1,500 படிகளாவது வாங்கினால்தான், அதை எழுதிய எழுத்தாளருக்கு ஏதாவது கிடைக்கும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இப்போது நான் அறிவிப்பது, இதில் கொஞ்சம் என்னுடைய சுயநலமும் கலந்தது. ஏனென்றால், அடுத்த வாரம் என்னுடைய புத்தகங்கள் இரண்டு வெளிவர இருக்கின்றன. அதற்காக நான் சொல்லவில்லை. இருந்தாலும் நம்முடைய ரவிக்குமார் அவர்களுடைய அந்தக் கோரிக்கையை ஏற்று, இனிமேல் 750 படிகள் வாங்குவதற்குப் பதிலாக குறைந்தபட்சம் 1,000 புதிய படிகள் வாங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நல்ல செய்தியை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தி.மு.கழக ஆட்சியில் 3–6–1989 முதல் ஆரம்பிக்கப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம் குறித்து நம்முடைய சேரன்மாதேவி உறுப்பினர் வேல் முருகன் அவர்கள் கேட்டார்கள். அவருக்குப் பதிலாக (குறுக்கீடு) ஆம், வேல்துரை அவர்கள் கேட்டார்கள். தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையில் இத்திட்டம் மீண்டும் தொடரப்படும் என்றும், திருமண நிதி உதவி 10 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் நேற்றையதினம் அதைக் குறிப்பிட்டு கேட்டுள்ள காரணத்தால் உறுதியாகவும்,—உத்தேசமாக அல்ல,—நிச்சயம், நிச்சயப்படுத்தி அவர்களுக்குச் சொல்கிறேன். இந்தத் திட்டம் 3–6–2006–ல் தொடங்கப்பட்டு, இந்த நிதியாண்டில் 33,333 ஏழைப் பெண்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திருமண நிதி உதவி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் தம்பி விஜயகாந்த்,—தம்பி என்று சொல்லலாம் என்று நினைக்கிறேன்.—தம்பி விஜயகாந்த் அவர்கள் இந்த ஆளுநர் உரையை வரவேற்று, சில விமர்சனங்களைச் செய்து பேசியபோது வேலைவாய்ப்புகளை உருவாக்க குறிப்பிடத்தக்க திட்டங்கள் தேவை என்றெல்லாம் பேசினார். வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய உதவிக் குழுக்கள் விரைவில் தொடங்கப்படும் என்று உரையிலேயே குறிப்பிடப் பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குத் தொடர்ந்து ஆதரவும் நிதி உதவியும் நல்க இருப்பதால் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் மகளிருக்குக் கிடைக்கும் என்றும் உறுதி அளிக்கிறேன்.





முற்பகல் 11–5.5

முந்தைய ஆட்சியில் அரசு வேலை நியமனத் தடையாணை நடைமுறையிலே இருந்த காரணத்தால் அரசு வேலைவாய்ப்புகளை இழந்திருந்த இலட்சக்கணக்கான இளைஞர்கள் அரசுப் பணிக்கு விண்ணப்பிக்க முடியாத அளவிற்கு வயதைக் கடந்துவிட்டார்கள். எனவே, அதைச் சிந்தித்து இந்த அரசு தேர்தல் அறிக்கையிலே என்ன குறிப்பிட்டிருக்கிறது என்றால் அரசுப் பணிக்கான அதிகபட்ச வயது வரம்பை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்க முடிவு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அவர்கள் இழந்த அந்த வாய்ப்புகளை நிச்சயமாக பெற முடியும் என்பதை நான் திரு. விஜயகாந்த் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கு நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இன்னொரு கோரிக்கையை என்னிடத்திலே விடுத்தார்கள். தமிழக அரசின் அனுமதி பெற்று மாநில அரசின் பாடத் திட்டத்தில் தமிழ் வழியிலே கற்பிக்கும் அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கும் இலவச பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது என்ன இருக்கிறதென்றால், இப்போது அரசு மானியம் பெறாத பள்ளிகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் கிடையாது. அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயில்கின்ற மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் இப்போது உள்ள நிலையில் இல்லை. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்ற காரணத்தால், அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயிலுகின்ற எல்லா மாணவ மாணவியருக்கும் இலவச பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தமிழ் மொழிக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகளுக்கு இணையாக தமிழ்ப் பயிற்று மொழி வகுப்புகள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டு வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) முன்பு இருந்தது. கைத் தட்டாதீர்கள் அதற்குள். தி.மு.க. ஆட்சியில் இருந்தது. அ.தி.மு.க. ஆட்சியில் அந்த முறை இரத்து செய்யப்பட்டுவிட்டது. இப்போது நான் அறிவிப்பது, இனிமேல் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகளுக்கு இணையாக மெட்ரிகுலேஷன்

பள்ளிகளிலேயும் தமிழ்ப் பயிற்று மொழி வகுப்புகள் தொடங்க மீண்டும் அனுமதி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு, நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு அரசாணைகள் கல்வியாண்டின் தொடக்கத்திலேயே இதுவரையில் பிறப்பிக்கப்படாததால் அப்பள்ளிகளிலே பயிலும் மாணவர்கள் மேற்கொண்டு கல்வியைத் தொடர வேறு பள்ளிகளில் சேர நேரிடுகிறது. இந்த நிலையைத் தவிர்க்கும்பொருட்டு, இந்த ஆண்டு 100 அரசு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) தரம் உயர்த்தி, கல்வியாண்டின் தொடக்கத்திலேயே அதாவது ஜூன் மாதத்திலேயே ஆணையிடப்படும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முன்பெல்லாம் அரசுப் பள்ளிகளிலே கட்டடங்கள் கட்டும்போது அதற்கானப் பணத்தையும் செலவழிக்கிற சில நன்கொடையாளர்கள், வள்ளல்கள் இருப்பார்கள், அவர்கள் கட்டித் தருகின்ற அந்தக் கட்டடங்களில் ஏதாவது ஒரு கூடத்திற்கோ அல்லது ஓர் அறைக்கோ அல்லது அந்த முழுக் கட்டடத்திற்கோ அவர்கள் தந்த பணத்திற்கேற்றவாறு அவர்களுடைய பெயரை வைக்கின்ற வழக்கத்தை தி.மு.க. ஆட்சியிலே மேற்கொண்டிருந்தோம். அதைக் கடந்த ஆட்சியிலே இரத்து செய்துவிட்டார்கள். ஆனால், அரசு பள்ளிகளில் சில கட்டடங்களைத் தங்கள் சொந்தச் செலவிலே கட்டிக் கொடுக்க முன்வரும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரை அந்தக் கட்டடத்தில் பொறிக்கலாம் என்று தி.மு.க. ஆட்சியிலே இருந்தது. அ.தி.மு.க. ஆட்சியில் அந்த முறை நீக்கப்பட்டுவிட்டது. மீண்டும் அந்த முறை நடைமுறைக்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி)

2001 ஆம் ஆண்டு மே திங்களில் அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலேயிருந்து 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை அவதூறு பேச்சுக்கள் என்றும், அவதூறு செய்தி வெளியீடுகள் என்றும், ஆட்சேபகரமான பேச்சுக்கள் என்றும், டெஸ்மா சட்டத்தின்கீழும் பல வழக்குகள் போடப்பட்டுள்ளன. டெஸ்மா சட்ட வழக்கு என்மேல்கூட உண்டு. அரசு ஊழியர் என்ற முறையிலே, நான் அரசு ஊழியர், (சிரிப்பு) அவதூ்றாகப் பேசியதாக அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள்



மற்றும் மேடைப் பேச்சாளர்கள்மீது மட்டும் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 267.

*நண்பகல் 12–00*

அவதூறுகளாகச் செய்திகளை வெளியிட்டதாகக் கூறி செய்தித்தாள் மற்றும் வாரப் பத்திரிகை ஆசிரியர்கள், பதிப்பாளர்கள், அச்சிட்டவர்கள் மற்றும் வெளியிட்டோர்மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 9. ஆட்சேபகரமாகப் பேசியதாகக் கூறி, வழக்குப் பதிவு செய்ய முன் அனுமதி வழங்கப்பட்ட நேர்வுகள், டெஸ்மா சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 2. கட்சிகள் என்ற அடிப்படையிலே பார்த்தால், தி.மு. கழகத்தின்மீது 147 வழக்குகள், காங்கிரஸ் மீது 14 வழக்குகள், சி.பி.ஐ. மீது 2 வழக்குகள், பா.ம.க. மீது 7 வழக்குகள், ஜனதா தளம் மீது ஒரு வழக்கு, விடுதலைச் சிறுத்தைகள் மீது 3 வழக்குகள், பா.ஜ.க. மீது 2 வழக்குகள், வி.எச்.பி. மீது 2 வழக்குகள், பத்திரிகையாளர்மீது 2 வழக்குகள், மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது 87 வழக்குகள். மொத்தம் 342 வழக்குகள். அந்த 87 வழக்கையும் சேர்த்து எல்லாவற்றையும் திரும்பப் பெறுகின்ற ஆணை இன்று பிறப்பிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இவைகள் அன்னியில், சிவில் சப்ளைஸ் இலாகா ஊழியர்கள்மீது உள்ள வழக்குகளும் திரும்பப் பெறப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொரு நற்செய்தியாக, அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் இடமாற்றம், ஒளிவு மறைவற்ற, வெளிப்படையான (transparent), கலந்தாய்வு முறை (counselling) மூலமாக வரும் கல்வியாண்டில் –2006–2007 ஆம் கல்வியாண்டில், ஜூன் திங்கள் முதல் செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆளுநர் உரையில் குறிப்பிட்டபடி, மகளிர்க்கு பொழுது போக்குக்காகவும், அவர்கள் பொது அறிவு பெறவும், வீடுதோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம், அண்ணா பிறந்த, பெரியார் பிறந்த முப்பெரும் விழாக்களையொட்டி இவ்வாண்டே தொடங்கப்பட்டு, படிப்படியாக நிறைவேற்றப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்த 14 அங்குலம், 14 inches வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் திறந்த சர்வதேச ஒப்பந்தப்புள்ளிமூலம் கொள்முதல் செய்யப்பட்டு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத

[கலைஞர் மு. கருணாநிதி] [2006 மே 30

குடும்பத்தினர் அனைவருக்கும் படிப்படியாக வழங்கப்படும். இவற்றுக்கான Tender, ஒப்பந்தப்புள்ளி பற்றி முடிவு எடுக்கவும், முறையாகக் கொள்முதல் செய்யவும், குறை நேராமல் விநியோகிக்கவும், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊராட்சிகளில் ஏற்கெனவே பல்வேறு மக்கள் நலப் பணிகளை மேற்கொள்வதற்காக, தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட 13,000 மக்கள் நலப் பணியாளர்கள் முந்தைய ஆட்சியால், 1–6–2001 முதல் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். சாலைப் பணியாளர்கள் அன்னியில் இவர்கள் மக்கள் நலப் பணியாளர்கள். இவர்கள் தங்களை மீண்டும் நியமனம் செய்யவேண்டும் என்று வேண்டுகோள் வைத்துள்ளார்கள். ஒரு ஊராட்சிக்கு ஒரு மக்கள் நலப் பணியாளர் என்ற வீதத்தில் 31–5–2001 அன்று பணியில் இருந்த மக்கள் நலப் பணியாளர்கள் அனைவரையும் மீண்டும் மக்கள் நலப் பணியாளர்களாகப் பணிபுரிய (மேசையைத் தட்டும் ஒலி) சம்மதித்து இந்த அரசு ஆணையிடுவதோடு, மாதாந்திர தொகுப்பு ஊதியமான ரூ.750/–ஐ, ரூ.950/– ஆக உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் ஏற்கெனவே பெற்று வந்த மாதாந்திர பயணப் படியான ரூ.50/–ஐயும் சேர்த்து, ஒட்டுமொத்தமாக மாதம் 1,000 ரூபாய் பெறுகின்ற வகையில் ஆணை பிறப்பிக்கப்படும். இதற்கு ஆண்டு ஒன்றுக்கு, 17 கோடி ரூபாய் அரசுக்குச் செலவாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–05*

இன்றைய எதிர்க்கட்சித் தலைவரும், அன்றைய எதிர்க்கட்சி உறுப்பினராகவும் உரையாற்றிய செல்வி ஜெயலலிதா அவர்கள், ஆளுநர் உரையில் நாம் குறிப்பிட்டிருக்கிற வளர்ச்சி விகிதத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் உண்மைக்கு மாறாக ஏதோ வெளியிட்டு இருப்பதாகக் கூறினார். அது உண்மைக்குப் புறம்பான தகவல் அல்ல. அவர்கள் குறிப்பாக இரண்டு ஆண்டுகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு இந்த ஆண்டில் வளர்ச்சி விகிதம் அதிகம் என்று சுட்டிக்காட்டினார்கள். ஆனால், நாம் நம்முடைய ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பது நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட தமிழகத்தின் பொருளாதார சராசரி வளர்ச்சி விகிதம் சரிந்து விழுந்துள்ளது, இதனை மீட்டெடுத்து வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல அரசு உறுதிபூண்டுள்ளது என்றுதான் குறிப்பிட்டிருக்கிறோம். இதிலே எதுவும் உண்மைக்கு மாறான தகவல் இல்லை. 2001–2006 என்ற இந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் தமிழகத்தின் பொருளாதார சராசரி வளர்ச்சி 4.3 விழுக்காடு. The Department of Economics and Statistics, Central Statistics Organisation, Delhi அவர்கள் தயாரித்துக் கொடுத்த புள்ளிவிவரம் இது. அதன்படி ஐந்து ஆண்டு காலம், 2001–லிருந்து 2006 அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் சராசரி பொருளாதார வளர்ச்சி விகிதம் 4.3 விழுக்காடு. அப்போது இந்திய நாட்டினுடைய ஒட்டுமொத்தப் பொருளாதார சராசரி வளர்ச்சி விகிதம் 6.7 விழுக்காடு. தமிழகத்தின் கடந்த ஐந்து ஆண்டு கால சராசரி வளர்ச்சி விகிதம், இந்திய நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட குறைவு என்பதை இந்த ஒப்பீட்டிலிருந்து எல்லோரும் புரிந்துகொள்ள முடியும். 2004–2005 ஆம் ஆண்டுமாத்திரம் தமிழகத்தின் வளர்ச்சி விகிதம் இந்திய நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட அதிகம் என்று அவர் தெரிவித்தார். அதைத்தான், அவர் இங்கே நாம் தவறு செய்துவிட்டதாகக் குறிப்பிட்டார். ஒருவகையிலே நாம் சொல்வதும் சரி, அவர்கள் சொல்வதும் சரி. நான் சொல்வது ஐந்து ஆண்டு கால சராசரி வளர்ச்சி. அவர்கள் சொன்னது ஓராண்டு காலத்தினுடைய நிலை. இரண்டுபேரும் சரிதான், புள்ளிவிவரத்தைப் பொறுத்தவரையிலே. (சிரிப்பு)



2006 மே 30] [கலைஞர் மு. கருணாநிதி]

அதேநேரத்தில், தி.மு.க. ஆட்சியிலே இருந்த, 1996–2001 ஆம் ஆண்டுகளை எடுத்துக்கொண்டால் அந்த ஐந்து ஆண்டு காலத்தில் இந்தியாவினுடைய சராசரி வளர்ச்சி விகிதம் 5.9 விழுக்காடு என்பதையும், தமிழகத்தின் சராசரி வளர்ச்சி விகிதம் 6.3 விழுக்காடு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மற்றொரு தகவல். மிடாஸ் நிறுவனத்தைப் பற்றி இங்கே பேசப்பட்டது. அதிலே அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருந்த திரு. பன்னீர்செல்வம் அவர்கள் ஒரு புள்ளிவிவரத்தைச் சொன்னார்கள். மிடாஸ் ஒன்றும் அதிகமாக உற்பத்தி செய்யவில்லை, கொள்முதல் செய்யவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அந்த நிறுவனம் 2003 ஆம் ஆண்டுதான் அமைக்கப்பட்டது, தொடங்கப்பட்டது. அதற்கு முன்பாக Mohan Breweries, Siva Distilleries, Balaji Distilleries என்று இப்படி பல நிறுவனங்கள் உண்டு, ஐந்து நிறுவனங்கள் உண்டு. 2003–ல்தான் இந்த மிடாஸ் நிறுவனம் தொடங்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டு Mohan Breweries நிறுவனத்திடமிருந்து கொள்முதல் 54.33 இலட்சம் பெட்டிகள், 2003–ல். 2004–2005–ல் 35.47 இலட்சம் பெட்டிகள் எனக் குறைந்துவிட்டது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. Mohan Breweries–ல் 2003–ல் 54 இலட்சம் பெட்டியாக இருந்தது இவர்கள் ஆரம்பித்த பிறகு, மிடாஸ் ஆரம்பித்த பிறகு, 2004–2005–ல் 35.47 என்ற அளவுக்குக் குறைந்துவிட்டது. பிறகு 2005–2006–ல் 30.03 இலட்சம் பெட்டியாக மேலும் குறைந்துவிட்டது.

Siva Distilleries Limited நிறுவனத்திடம் செய்யப்பட்ட கொள்முதல் 2003–2004–ல் 53 இலட்சம் பெட்டி முதலில். 2004–2005–ல் 40 இலட்சம் பெட்டி. 2005–2006–ல் 43.86 இலட்சம் பெட்டி. அதேமாதிரி Balaji Distilleries Limited நிறுவனத்தில் 2003–2004–ல் 44.09 இலட்சம் பெட்டி. 2004–2005–ல் 45.72 இலட்சம் பெட்டி. 2005–2006–ல் 50.19 இலட்சம் பெட்டி. இப்படி குறைந்துகொண்டே வருகிறது. Midas Golden Distilleries நிறுவனத்தில் செய்யப்பட்ட கொள்முதல் எவ்வளவு தெரியுமா? 2003–2004– லே ஆரம்பித்தபோது 12.85 இலட்சம் பெட்டிதான். 2004–2005–லே 28.68 இலட்சம் பெட்டி. 2005–2006–லே 51.04 இலட்சம் பெட்டி. ஒரு நிறுவனத்திலே மாத்திரம் இந்த அளவிற்கு உயர வேண்டிய காரணம் என்ன என்பதைத்தான் யோசிக்க வேண்டியிருக்கிறது.

*பிற்பகல் 12–10*

இந்த மிடாஸ் நிறுவனம் தொடங்கிய 3 ஆண்டுகளில் எந்த அளவிற்கு வர்த்தகம் பெருகி இருக்கிறது தெரியுமா? Turn over, 2003–2004–லே, turn over மிடாசுக்கு 146 கோடி ரூபாய். 2004–2005–லே turn over 400 கோடி ரூபாய். 2005–2006–லே 600 கோடி ரூபாய். 146 கோடியிலே turn over–லே ஆரம்பித்து 600 கோடி ரூபாயிலே வந்து நின்றிருக்கிறது. நின்றிருக்கிறது. (சிரிப்பு) நல்ல காலம் தேர்தல் வந்துவிட்டது. அப்புறம் காணோம்.

அப்புறம், கூட்டுறவுக் கடனைப் பற்றி ஒரு பெரிய ஆராய்ச்சி இங்கே நடைபெற்றது. கேட்டார்கள், அந்த அம்மையார் இங்கே கேட்டார்கள். விவசாயிகள் தேசிய வங்கிகளிடம் கடன் பெற்றிருக்கிறார்கள், அவர்கள் மட்டும் விவசாயிகள் இல்லையா? அவர்கள் வறட்சியால் பாதிக்கப்படவில்லையா? அந்தக் கடன்களை ஏன் தள்ளுபடி செய்யவில்லை? இது என்ன நியாயம் என்றெல்லாம் கேட்டார்கள். கடன் தொகையைக் கட்டியவர்களுக்கெல்லாம் திருப்பிக் கொடுத்துவிடுவீர்களா என்றும் கேட்டார்கள். 2001 ஆம் ஆண்டு இந்த



அம்மையார் முதலமைச்சராக இருந்தபோது ஒரு 300 கோடி ரூபாயோ என்னவோ கடன் இரத்து பண்ணினார்கள், வட்டி தள்ளுபடி. இதையெல்லாம் அப்போது கடைப்பிடித்தார்களா என்பதுதான் தெரியவில்லை. அப்போது தேசிய வங்கிகளுக்குத் திருப்பிக் கொடுத்தார்களா? அந்தக் கடனை இரத்து பண்ணினார்களா? அப்போது ஏற்கெனவே கடன் கட்டியவர்களிடம் திருப்பிக் கொடுத்தார்களா என்பது தெரியவில்லை. ஆனால், தி.மு.க. ஆட்சியிலே நாம் கூட்டுறவுக் கடனை, 7,000 கோடி ரூபாய், ஒன்றிரண்டு அல்ல, 7,000 கோடி ரூபாய், இந்திய நாட்டு சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனை இரத்து செய்திருக்கிறோம் என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) இது எப்படி? ஏன் இவர்களுக்கெல்லாம் கொடுக்கவில்லை, அவர்களெல்லாம் விவசாயிகள் இல்லையா என்று கேட்கிறார்கள். எல்லோரும் விவசாயிகள்தான். திராட்சைத் தோட்டம் போட்டிருப்பவர்கள்கூட விவசாயிகள் என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் விவசாயிகள்தான். ஆனால், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், இந்த 300 கோடி ரூபாய் வட்டியைத் தள்ளுபடி செய்தார்களே, அப்போது நான் எதிர்க்கட்சிக்காரனாக இருந்தாலும்கூட, அதை வரவேற்று முரசொலியிலே எழுதிய கடிதத்திற்கு 'நல்லதைப் பாராட்டாத கல் நெஞ்சம் நமக்கு இல்லை' என்ற தலைப்பில் அதைப் பாராட்டி எழுதியவன்தான் இந்த கருணாநிதி என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில அரசினுடைய வருவாய்மூலமே — இப்போது கேட்கிறார்கள், நபார்டு வங்கியிடம் பெர்மிஷன் வாங்கிவிட்டீர்களா? மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்ததா என்றெல்லாம் கேட்கிறார்கள். ஆனால், இவர்கள், நாம் கூட்டுறவுக் கடனை இரத்து செய்வோம் என்று சொன்னவுடன், பத்திரிகையிலே கொடுத்த அறிக்கையிலே, வேறு பத்திரிகையைக்கூட நான் நம்பமாட்டேன், தினத்தந்தியிலே வந்த அறிக்கையிலேயே, 'மாநில அரசின் வருவாய் மூலமே விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடனை இரத்து செய்வேன் — தினத்தந்தி 28–04–2006', தேர்தலுக்கு முன்னாடி இந்த அம்மையார் கொடுத்த அறிக்கையில், 'மாநில. அரசின் வருவாய் மூலமே விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடனை இரத்து செய்வேன்' என்று அன்றைக்குக் கூறியிருக்கின்றார்கள். அவர்கள் நம்[illegible] தள்ளுபடி செய்வாய் என்று கேட்பது விந்[illegible] தவிர நான் வேறு எதுவும் சொல்ல விரு[illegible]வில்லை.

D
V21, 31 ... 2
227074
சென்னை-600 009

இந்த அரசைப் பொறுத்தவரை நான் செய்தியாளர்களுக்காகக் கூறுகிறேன் இதை. கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்தால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படுகிற இழப்பை தமிழக அரசே ஏற்றுக்கொண்டு அந்த வங்கிகளுக்கு இழப்புத் தொகையைக் கொடுத்து ஈடு செய்யும் — Repayment. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும், வரும் ஆண்டுகளிலும் அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும். அரசு நபார்ட் வங்கியோடு கலந்துபேசி, கூட்டுறவு வங்கிகளுக்குத் தேவையான மறு நிதி உதவி, Refinance support—ஐப் பெறும். இதுதான் அதற்குள்ள இலக்கணம் என்பதைப் பொருளாதாரம் தெரிந்தவர்களுக்குக் குறிப்பிட விரும்புகின்றேன், நிதி ஆதாரம் புரிந்தவர்களுக்குக் குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு வழங்கப்படும் கூட்டுறவுக் கடன்களை இரத்து செய்து அறிவிக்கப்பட்டுள்ள அரசாணையின் அடிப்படையில், தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் 31-03-2006 ஆம் ஆண்டு நிலுவையிலேயிருந்த கூட்டுறவுக் கடன்களைப் பெற்றிருந்த ஒவ்வொரு விவசாயிக்கும் இரத்து செய்யப்படும் மொத்தத் தொகையையும் குறிப்பிட்டு, முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக, 'கூட்டுறவுக் கடன் நிலுவை இல்லை' என்ற சான்றிதழ், 'No Due Certificate' வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அவரவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அந்தச் சான்றிதழ் இதுபோல அமைந்திடும்.

*பிற்பகல் 12–15*

*(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சான்றிதழின் மாதிரியைக் காண்பித்தார்.)*

இறுதியாக, அரசாங்கத்திடம் இருப்பது 3½ இலட்சம் ஏக்கர் தரிசு நிலம்தான். எப்படி வந்து ஏழைகளுக்கு நிலத்தை எல்லாம் கொடுக்க முடியும்? 1 கோடியே 82 இலட்சம் விவசாயிகள் என்றெல்லாம் கேட்டிருக்கின்றார்கள். நம்முடைய தேர்தல் அறிக்கையிலேயும் சரி, பிறகு ஆளுநர் உரையிலேயும் சரி, குறிப்பிட்ட சில வாசகங்களைச் சரியாகப் படிக்காமல் அல்லது படித்து வேண்டுமென்றே திருத்தி அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றே கருதுகின்றேன். அதிலே என்ன இருக்கிறது என்றால், நிலமற்ற விவசாயக் குடும்பம் என்றிருக்கிறது. விவசாயிகளின் எண்ணிக்கையைச் சொல்லவில்லை. விவசாயக் குடும்பங்களுக்கு என்றுதான் தேர்தல் அறிக்கையிலே நாம்





குறிப்பிட்டிருக்கிறோம். குடும்பங்கள் என்று இருக்கிறது. ஒரு குடும்பத்திலே 3 பேர், 4 பேர்கூட இருப்பார்கள். அதனாலே விவசாயக் குடும்பங்களுக்கு என்றுதான் குறிப்பிட்டிருக்கிறோம். அதன்படி கொடுப்பதற்கு முடியும் என்பது நம்முடைய கருத்து. அரசு நிலம் அவ்வளவு எங்கே இருக்கிறது என்று ஒரு கேள்வி வருகிறது. நாம் அது அவ்வளவும் அரசு நிலம் என்று சொல்லவில்லை. ஏழைகள் நிலம் என்று சொல்கிறார்கள். ஏழைகள் நிலமாக இருந்தாலும்கூட, கிராம பாஷையிலே சொன்னால், செய்நேர்த்தி என்று சொல்வார்களே, அதைச் சீர் செய்து, செய்நேர்த்தி செய்து, பதப்படுத்தி, பண்படுத்தி வைக்காத நிலமாக இருந்தால், அந்த ஏழை விவசாயியிடம் பணம் இருக்காது, எனவே, அதைப் பண்படுத்திக் கொடுத்து, அந்த ஏழை விவசாயிக்கு அது வேண்டும் என்றால், அவனுக்கே திரும்பிக் கொடுக்கிற காரியம். வேண்டாம் என்றால், அதற்கு ஒரு விலையைக் கொடுத்து, இன்னொரு ஏழை விவசாயிக்கு அதைக் கொடுக்கிற காரியம்தான் நான் சொன்ன தத்துவமே தவிர, வேறு அல்ல என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு, நம்முடைய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் நேற்றைக்குச் சொல்லியிருக்கிறார். தமிழகத்திலே 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தலா 2 ஏக்கர் நிலம் கொடுப்பதாக இருந்தால், 1 கோடியே 72 இலட்சம் ஏக்கர் தேவைப்படும். தமிழகத்தில் எங்கே அவ்வளவு நிலம் இருக்கிறது? அரசிடம் 3 இலட்சம் ஏக்கர் நிலம்தான் உள்ளது என்ற புள்ளிவிவரங்களை விரல் நுனியிலே வைத்துக்கொண்டு, கேள்விகளைக் கேட்டு, ஆளுங்கட்சியை திணறடித்தாரே. அதற்கு இவர்களால் பதில் கூற முடிந்ததா என்று வைகோ. அவர்கள் அவருக்கே உரிய புயல் வேகத்தில் இந்த அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார். 3 முறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். இதைக்கூட எப்படி புரிந்துகொள்ளாமல் இருக்கிறார் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

தமிழகத்திலே 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நான் முதலிலே சொல்லியபடி விவசாயக் குடும்பங்கள் என்று பார்த்தால், 20 இலட்சம் குடும்பங்கள்தான் வரும். நாம் வந்து எல்லோருக்கும் நிலம் கொடுக்கிறோம் என்று சொல்லவில்லை. எல்லோருக்கும் நிலம் கொடுப்பதாகச் சொல்லவில்லை. நாம் சொல்வது என்னவென்றால், இருக்கிற நிலத்தை எடுத்துப் பிரிக்கும்போது, நிலமில்லாத

விவசாயிகளுக்குக் கொடுப்போம் என்று சொல்கிறோம். இருக்கிற நிலத்தை எடுத்து நாம் பிரித்துக் கொடுக்கும்போது, நிச்சயமாக ஒரு 20 இலட்சம் பேருக்குக் கொடுக்க முடியும். அவ்வளவு நிலம் இருக்கிறது என்பது நம்முடைய கணிப்பு. அந்தக் கணிப்பின்படிதான் சொல்கிறோம்.

1 கோடியே 72 இலட்சம் ஏக்கர் தேவைப்படும் என்று சொல்கிறார்கள் ஆனால், இந்தச் சந்தேகம் அவர்களுக்கு எப்போது வந்து இருக்க வேண்டும்? இது ம.தி.மு.க.-வுடைய தேர்தல் அறிக்கை. · பம்பரம் போட்டிருக்கிறது. தேர்தல் அறிக்கை.

*(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையின் நகலைக் காண்பித்தார்.*

இந்தச் சந்தேகம் வந்து வை.கோவிற்கு எப்பொழுது வந்திருக்க வேண்டும்? அவர்கள் தேர்தல் அறிக்கையிலே, ஒரு பகுதியை படித்துக் காண்பிக்கின்றேன்.

*பிற்பகல் 12–20*

'தமிழகத்தில் — 'நிலமற்ற விவசாயத் தொழிலாளர் நலம்' என்கின்ற தலைப்பில் — 'தமிழ்கத்தில் 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 86 இலட்சம் நிலமற்ற விவசாயக் கூலிகள் உள்ளனர். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 31 விழுக்காடு ஆவர். 'வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு தரிசு நிலங்களை தலா இரண்டு ஏக்கர் நிலம் வழங்கவேண்டும் என்று மறுமலர்ச்சி தி.மு.க வலியுறுத்தும்'. இதை எழுதும்போது, எங்கே போயிற்று இந்த புத்தி? (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது கேட்கிற இந்த அறிவு, தெளிவு இதெல்லாம் அதை எழுதும்போது இருக்க வேண்டாமா? (குறுக்கீடு) இல்லை, இல்லை, கூட்டணி நம்மகூட இருந்தால் புத்தி இருக்காதா என்ன? (சிரிப்பு) கூட்டணியிலே இருந்தால்தான் புத்தி இருக்கும். (சிரிப்பு) இது அவர்கள் தேர்தல் அறிக்கை. அவர்களோடு இணைந்தபிறகு வந்த தேர்தல் அறிக்கையிலே இதை தெரிவித்திருக்கிறார்கள். 86 இலட்சம் பேருக்கு தலைக்கு இரண்டு ஏக்கர் வீதம் கொடுப்போம். தலா இரண்டு ஏக்கர் வீதம் கொடுப்போம். அப்போது இந்த ஒரு கோடியே 72 இலட்சம் ஏக்கர் எங்கேயிருந்து வரும்? வேண்டுமென்றே நம்முடைய பெரிய திட்டங்களை சிறுமைப்படுத்த வேண்டும் என்பதற்காக (குறுக்கீடு) அவர் சொல்லுவதுபோல், கொச்சைப்படுத்த வேண்டும் என்பதற்காக இதெல்லாம் சொல்லப்படுகிறது.



இவ்வளவும் முடியுமா, அது வேறு விஷயம், முடியாதுதான். முடியாததை முடித்துக் காட்டுவதுதான் உண்மையாக, மக்களுக்கு ஆற்றக்கூடிய ஒரு அரசினுடைய கடமையாக இருக்கமுடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு இந்த மாமன்றத்திலே கூடியிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, இவ்வளவு விளக்கங்களுக்குப் பிறகு, என்னுடைய விளக்கங்களை ஏற்று, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது திருத்தங்களைக் கொடுத்துள்ள உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** சிறு அறிவிப்பு, ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட இருப்பதால் குறுவை சாகுபடிக்குப் புதிய பயிர்க் கடனை கூட்டுறவு வங்கிகள் தரப்போகிறதா, இல்லையா என்ற கேள்விக்குப் பதிலாக இந்த அறிவிப்பு. குறுவை சாகுபடிக்குத் தேவையான புதிய பயிர்க் கடன்களை டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கிடத்தக்க வகையில், ஜூன் 12 ஆம் தேதிக்கு முன்னதாகவே தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தேவையான நிதி உதவியை அரசு வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

[2006 மே 30

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டினுடைய இனிய தலைவர், நிறைய கனவுகளோடு இந்தத் தாய்த் திருநாட்டை வளமான, வலிமையான பூமியாக்க வேண்டும் என்று இந்த தேசத்தினுடைய நிர்வாக இயந்திரத்தைத் தூக்கிச் சுமந்து, இந்த தேசத்தினுடைய விஞ்ஞானத்திற்கும், தொழில்நுட்பத்திற்கும் பல அற்புதமான வடிவங்களைத் தருவதற்காக



2006 மே 30] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

தன் வாழ்க்கையைக் காணிக்கையாக்கி, இந்த மண்ணிலே வந்து, இந்த தேசத்திற்கே தன்னுடைய தேக்குமர தேகத்தைத் தியாகம் செய்து, இந்த தேசத்தினுடைய தியாக மலராக, பூவாக வந்து புயலாக மறைந்துபோன எங்கள் இனிய தலைவர் ராஜீவ் காந்தியின் நினைவாக, அவர்களுடைய இரத்தத்தை உறிஞ்சிய மண்ணிலேயே, அந்த மாபெரும் தலைவனுக்கு அஞ்சலி செலுத்துகின்ற வகையிலே, அவருடைய நினைவைக் கொண்டாடுகின்ற வகையிலே, இன்று அவரை இழந்தபின்பும் கூட, எந்தப் பதவியும் வேண்டாம் என்று, நம்முடைய கலைஞர் அவர்களுடைய வார்த்தைகளில் சொல்லப்போனால், இந்த நாட்டினுடைய தியாகப் பெருந்தலைவியாக வாழ்கின்ற அன்னை சோனியா காந்திக்கு நன்றி சொல்கின்ற வகையிலே, அமரர் ராஜீவ் காந்தியின் பெயராலே அற்புதமான விமான ஓட்டி பயிற்சி நிலையமும், விமான விஞ்ஞானத்தை வளர்க்கின்ற தொழில்நுட்ப மையமும் அமைத்துத் தருவதற்கான வாக்குறுதியை இந்தச் சட்டமன்றத்திலே தந்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக எங்கள் மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

***திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே 80 ஆண்டு காலமாக இயங்கி வந்த Government Pentland Hospital—ஐ வேலூர் நகரிலிருந்து, 11 கிலோமீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய அடுக்கம்பாறை என்கிற பகுதிக்கு அரசு மருத்துவக் கல்லூரியினுடைய வளாகத்திற்கு எடுத்துச் சென்றதை, தேர்தல் வாக்குறுதியாக தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் நிச்சயமாக அவரிடம் எடுத்து வைத்து, மீண்டும் மருத்துவமனையை வேலூரிலே இயங்க வைப்போம் என்று நானும், பொதுப் பணித் துறை அமைச்சர் அருமை நண்பர் துரைமுருகன் அவர்களும் வாக்குறுதியை நாங்கள் கொடுத்தோம். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுகிறமுகத்தான் இன்று உறுதிமொழியை நிறைவேற்றி, உடனடியாகத் திறப்பதற்கான ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிற வணக்கத்திற்குரிய நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வேலூர் மக்கள் சார்பாக எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நான் இங்கே காணிக்கையாக்குகிறேன்.

[2006 மே 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் மக்களைச் சந்தித்து வாக்குகளைக் கேட்கிறபோது ஏற்கெனவே கடந்த ஐந்து ஆண்டு காலம் இந்தத் தமிழகத்தை ஆண்ட முதல்வரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அமைச்சர்களே சந்திக்க முடியாத ஒரு அவல நிலைமை தமிழகத்திலேயிருந்து நீக்கப்பட வேண்டும், சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய தொகுதி மக்களின் தேவைகளைக் குறித்து விரும்புகிற நேரங்களில் எல்லாம் சந்திக்கக்கூடிய ஒரு முதல்வர், கலைஞர் முதல்வராக வர வேண்டும், அதற்காக வாக்களியுங்கள் என்று நாங்கள் கேட்டோம். அந்த நம்பிக்கையோடு மக்கள் வாக்களித்தார்கள்.

கலைஞர் அவர்களை இரண்டு, மூன்று முறை நேரிலே சந்தித்து, எங்கள் திருப்பூர் தொகுதி மக்களுக்கு வாழ்வளித்து வருகிற பனியன் தொழிலின் ஒரு துணைத் தொழிலான சாயத் தொழிலை காக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு நிச்சயமாக ஏற்படுத்தித் தருவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்த செய்திக்கும்; அதேபோல இலட்சக்கணக்கான பனியன் தொழிலாளிகள் பயணம் செய்வதற்காகச் சிறப்புப் பேருந்துகளை ஏற்பாடு செய்து கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டோம். அதற்கும் உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும் என்று இங்கே அறிவித்திருக்கிறார்கள். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் இந்தப் பேரவை முடிந்தவுடன் அவர்களுடைய அறைக்கு வர அழைத்திருக்கிறார். அதற்குரிய உடனடி ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்தமைக்கும், அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகளில் வாழ்கிற மக்களுக்கு ஒரு புதுவாழ்வு கிடைக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த அவையிலே தெரிவித்தமைக்காகவும் திருப்பூர் தொகுதி வாக்காளப் பெருமக்களின் சார்பில் நெஞ்சம் நிறைந்த எங்கள் நன்றியை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டு காலமாக பல முறை இந்தச் சட்டமன்றத்திலே மாண்புமிகு முன்னாள் முதலமைச்சரிடம் நேரடியாக விரிவாக,



2006 மே 30] [திரு. கோவை தங்கம்]

விளக்கமாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வால்பாறையிலே ஒரு கலைக் கல்லூரி வேண்டுமென்று இங்கே வற்புறுத்திப் பேசியிருக்கின்றேன். உள்ளபடியே சொல்கின்றேன். வால்பாறையிலிருந்து கோவைக்கு வருவதற்கு 100 கிலோமீட்டர் தூரம்; 5 மணி நேரம் ஆகும். தினக்கூலி 77 ரூபாய். அதை வைத்துக்கொண்டு, எப்படி அங்கேயிருந்து கோவைக்கு வந்து படிக்கமுடியும் என்பதை பல சமயம் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மூலமாக, ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மூலமாக, மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்மூலமாக பலமுறை வற்புறுத்திப் பேசியும் நடைபெறவில்லை. ஆனால், நம்முடைய தானைத் தலைவர், முத்தமிழ் காவலர், முத்தமிழ் அறிஞர் தாழ்த்தப்பட்ட மக்களுடைய விடிவெள்ளி, தாழ்த்தப்பட்ட மக்களை நேசிக்கின்ற ஒரே தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற முறையில் வால்பாறை மக்கள்மீது அன்பு கொண்டு, வால்பாறைக்கு ஒரு கலைக் கல்லூரியைக் கட்டித் தருகிறேன் என்று கூறியதற்காக, எனக்கு வாழ்த்துவதற்கும் பாராட்டுவதற்கும் வயதில்லை, நான் வணங்குகின்றேன். ஒட்டுமொத்தமாக, தமிழ்நாட்டு தாழ்த்தப்பட்ட மக்கள் அத்தனைபேர் சார்பாகவும், எங்களுடைய வாழ்த்துகளையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*பிற்பகல் 12—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பதிலளித்து உரையாற்றிய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபொழுது பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்துப் பேசியதை ஒவ்வொன்றாகக் குறிப்பிட்டு, ஒவ்வொருவருக்கும் தனித்த முறையிலே ஒவ்வொரு கோரிக்கைகளின்மீதும் அவர்களுடைய கருத்துகளைத் தெரிவித்து அனைவருக்குமே விடையளிப்பது மட்டுமல்ல, அந்தக் கோரிக்கைகள் அனைத்துமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்ற அறிவிப்பைச் செய்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நமது உறுப்பினர்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது குறிப்பாக கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டு காலத்தில் நடக்காத ஒரு சம்பவம் இன்றைக்கு இந்த அவையிலே நடைபெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பின்னாலே இப்படி ஒரு கருத்தே பேசமுடியாது.

அதைவிட அவர்கள் பேசுகிறபொழுது எதிர்க்கட்சிகளே அனேகமாக அவையிலேயே இருக்காது. இப்படித்தான் அவர்களுடைய பதிலுரை அமைந்தது என்பது வரலாறு. ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனைவருடைய பெயர்களையும் குறிப்பிட்டு, அனைவரது கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு, நிறைவேற்றுவேன் என்று சொன்ன இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி தமிழக மக்களாலே என்றென்றைக்கும் பாராட்டக்கூடிய ஒன்றாக நான் கருதுகிறேன். திருவாரூர் தேரை ஓடச் செய்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதேபோல, மன்னார்குடிக்கும் இரயில் ஓடச் செய்வேன் என்ற அந்த உத்தரவாதத்தைக் கொடுத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்புவதற்கு தனித் துறை தொடங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்தேன். இது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலே முன்பு அது தனித் துறையாக செயல்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்ற அந்தச் செய்தியைச் சொல்லி, அந்தக் கருத்தையே விரும்பாத அ.தி.மு.க.ஆட்சி அதை நிறுத்திவிட்டது என்ற அந்தச் செய்தியை இங்கே உறுதிப்படுத்தி, மீண்டும் அது தொடங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுமென்ற அந்த அறிவிப்பு தமிழகத்திலே தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கைக்கு மீண்டும் புத்துயிரூட்டுவதற்கான முயற்சியை எடுத்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தலைவர்கள்மீது போடப்பட்ட பொய் வழக்குகள் அனைத்தும், மற்றவர்கள்மீது போடப்பட்ட பொய் வழக்குகள் அனைத்தும் இரத்து செய்யப்படுமென்ற அறிவிப்போடு அது ஆளுகிற கூட்டணியா, எதிர்க் கூட்டணியா என்று பாராமல் அனைத்து அரசியல் கட்சிகள் மீதும் போடப்பட்டிருக்கிற அனைத்து வழக்குகளுமே தள்ளுபடி செய்யப்படுமென்ற அந்தப் பெருந்தன்மையோடு அறிவித்திருக்கிற அறிவிப்புக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) உட்காருங்கள், அமைச்சர் பேசுகிறார். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகச் சொற்பொழிவாளன்





என்ற முறையில் என்மீது முன்னாள் முதலமைச்சர் பல்வேறு அவதூறு வழக்குகளைத் தொடர்ந்திருக்கிறார்கள். நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளிலே ஏறி இறங்கி கொண்டிருக்கும் எங்களுக்கு, அதிலேயே எங்களுடைய காலங்கள் வீணாகிவிட்டன. அதையெல்லாம் இரத்து செய்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருக்கு எங்களுடைய சார்பாகவும், பீட்டர் அல்போன்ஸ் சார்பாகவும், எல்லோருடைய சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையிலே நான் பேசுகின்ற வாய்ப்பு இல்லையென்றாலும்கூட என்னுடைய சக உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்றபொழுது மறைந்த எங்கள் உன்னதத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுடைய பெயரிலே ஸ்ரீபெரும்புதூரிலே ஒரு Aeronautical Engineering கல்லூரியும், விமானம் ஓட்டுகின்றவர்களுக்கு ஒரு பயிற்சி நிறுவனமும் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை இந்த மாமன்றத்திலே முதல்வர் அவர்களிடத்திலே வைத்தார்கள். அதை ஏற்றுக்கொண்டு எவ்வளவு சிரமங்கள் ஏற்பட்டாலும் அதை நிச்சயமாகக் கொண்டு வருவேன் என்று உறுதியளித்த தமிழக முதல்வர் அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் நான் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' என்று கூறுவார்களே அந்த அளவுக்கு இங்கே பேசிய பேரவை உறுப்பினர்களுடைய அத்தனை கருத்துகளையும் கேட்டு, தகுந்த பதில் அளித்து, அவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டியிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் இங்கே காணிக்கையாக்குகின்றேன். நெசவாளர்களுடைய நீண்ட நாள் பிரச்சினையாக இருப்பதைக் கருத்திற்கொண்டு, சிட்டா நூலுக்கான விற்பனை வரியை இரத்து செய்வோம் என்ற வாக்குறுதியை அளித்திருக்கின்ற முதல்வர் அவர்களுக்கு நெசவாளர் பெருமக்கள் சார்பாக என் நன்றியினைப் பதிவு செய்து, பரிசீலனை செய்வோம்

என்று சொன்னாலே செய்துவிட்டோம் என்றுதான் அர்த்தம். அந்த அளவிற்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய, நம்பிக்கையைத் தரக்கூடியவர் நம்முடைய முதல்வர் அவர்கள். அந்த அளவிற்கு எல்லா உறுப்பினர்களுடைய கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து, அதற்குண்டான உறுதிமொழியை அளித்திருக்கின்ற கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கி நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்களுக்கு ஒரு குறை. 'இந்த அரசு நிதி உதவியின்றி செயல்படும் பள்ளிகளுக்கு இலவச புத்தகம் வழங்க கோரிக்கை நான் அல்லவா முதன்முதலில் வைத்தேன்' என்று எனக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார். அந்த உரிமையை அவருக்கு விட்டுக் கொடுக்குமாறு பீட்டர் அல்போன்ஸைக் கேட்டுக் கொள்கிறேன். *(சிரிப்பு)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னால், எந்த உரிமையையும் விட்டுக் கொடுக்கத் தயார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** '2006 ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்'

என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்களால் 26–5–2006 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31–5–2006) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12–36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

— ஏதுமில்லை —